
கல்கி
KALKI 10-4-1977 75 காசு

அன்றும் இன்றும் சிலருக்கு அதே இளந்தளிர் மேனி!





பியர்ஸ்— அசல் கிளிசரின் சோப்

கனிவான பியர்ஸ் சோப்பினால் காத்திடுவீர்
உங்கள் மேனி மெருகை. மாணிக்கப் படிகம்போல்
மிளிரும் ஒவ்வொரு வில்லையிலும் ஒரு நூறாண்டு
கால சோப்-உற்பத்தி அனுபவம் உள்ளிறங்கியுள்ளது.
பிஞ்சு மென்மை கொஞ்சும் பியர்ஸ்—தூய்மைக்
கொழுந்து—கண்கூடாக நீங்கள் ஊடுருவிப்
பார்க்கக்கூடிய உன்னதத் தூய்மை.

பியர்ஸ் சருமக் களை...
கன்னிப் பருவக் களை



களவாடுவது சுருக்கமே.


ஜாக்கிரதை!
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு மீட்டர் துணியும் சுருங்குவதால் அளவு குறைந்துவிடுகிறது. விளைவு? அதைத் தைக்கும் போது துணி போதுமானதாக இருப்பதில்லை.
துணிகள் சுருங்குவதிலிருந்து காப்பாற்றிக்கொள்ள ஏதாவது வழியுண்டா? உண்டு.

துணிகளை வாங்குவதற்கு முன் கவனியுங்கள்... ஸான்:ஃபொரைஸ்டு முத்திரை இருக்கிறதா என்று பாருங்கள்.

சுருங்காமல் இருக்கின்றனவா என்பதை உறுதி செய்ய நடத்தப்படும் கடுமையான பரிசோதனைகளை வென்றும் துணிகளே ஸான்:ஃபொரைஸ்டு முத்திரையைப் பெறுகின்றன. உலகம் முழுவதுமுள்ள 562 ஆலைகளுக்குமேல் இந்த முத்திரையை உபயோகிக்கின்றன.

அடுத்த முறை துணிகள் வாங்கும்போது அவற்றின் மீது ஸான்:ஃபொரைஸ்டு முத்திரை இருக்கிறதா என்று பார்த்து வாங்குங்கள். துணிகள் சுருங்காமலிருக்க அதுவே சிறந்த பாதுகாப்பு.

'ஸான்:ஃபொரைஸ்டு' முத்திரையிட்ட துணிகளையே வற்புறுத்தி வாங்குங்கள். அவை சுருங்காமலிருக்க சிறந்த பாதுகாப்பைப் பெறுகின்றன.



CHATIRA-SS 49 TAM



கல்கி

1977 ஏப்ரல் 10
அநல ௵
பங்குனி 28

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே

ராஜாஜி சிந்தனை

கீதையின் சிறப்பு

கீதையைப் படிக்கும் போது பாரதக் கதையை மறந்து விடுவதே நலம் என்பது என் அபிப்பிராயம். கீதையில் சொல்லப்பட்ட உண்மைகளும் உபதேசமும் எக்காலத்திலும் எச் சந்தர்ப்பத்துக்கும் பொருந்தியவை யானபடியால் யுத்தத்தில் அர்ச்சுனனுக்கு ஏற்பட்ட மனக் கலக்கத்துக்கும் சந்தேகங்களுக்கும் கூட பொருத்தமான மருந்து கீதா வாக்கியங்களில் காணக் கூடும் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தின் விஷயங்களைப் பிரமாணமாக வைத்துக் கொண்டு பொதுவான ஒரு தர்ம சாஸ்திரத்தை ஆராய்ச்சி செய்வது தவறான முறையாகும்.

ஹிந்து சமூகத்தில் அடங்கிய சர்வ சம்பிரதாயங்களைச் சேர்ந்தவர்களும் சாஸ்திரமாகவும் பிரமாணமாகவும் ஒப்புக் கொள்ளும் பகவத் கீதையில் சில சுலோகங்களையாவது சிரத்தா பக்தியுடனும் ஆழ்ந்த சிந்தனையோடும் படித்தோமானால் நம்முடைய முன்னோர்கள் கண்ட மெய்ப்பொருளும் ரிஷிகள் ஸ்தாபித்த ஹிந்து தருமமும் இன்னின்னவை என்று விளங்கும். ஹிந்து தருமம் என்ற அஸ்திவாரத்தின் மேல்தான் நம்முடைய சகல நாகரிகமும் கலைகளும் இலக்கியங்களும் இந்தியாவில் நாம் பெருமை பாராட்டக்கூடிய மற்ற எல்லா பாக்கியங்களும் மாளிகைகளாக நிற்கின்றன. அந்த ஹிந்து தர்மத்தை உள்ளபடி அறிவது நமது கடமையாகும். ஆகையால் கீதையின் சாராம்சத்தை நன்கு படித்துத் தெரிந்து கொள்வது நன்மை பயக்கும்.

—கண்ணன் காட்டிய வழி

பிரிங்கால்

மகாபிரிங்கராஜ்
ஹேர் ஆயில்

சிரத்திற்கு குளுமையை அளிப்பது டன் உங்கள் கூந்தலுக்கு புத்துணர்ச் சியை அளிக்கிறது.

ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப் பட்ட பிரிங்காலில் பிரிங்கராஜ் இலைக ளின் சாறு, நல்லெண்ணை மற்றும் 12 ஆயுர்வேதப் பொருட்கள் அடங்கியுள்ளது.



கல்கத்தா கெமிகல்ஸ்
அளிக்கும் சுகந்த

மகாபிரிங்கராஜ்
ஹேர் ஆயில்
பிரிங்கால்

உண்மையான மூலிகைத் தைலம்

CTC-21 TAM

இந்திய தேசியப் பொருளாதாரம்

க. சந்தானம்

எதிர்க் கட்சியாக இன்று நாடாளு மன்றத்தில் விளங்கும் காங்கிரஸ், இடைக்கால பட்ஜெட்டை விவாத மேதுமின்றி நிறைவேற அனுமதித்திருக் கலாம். அப்படி செய்வதே அறிவுடைமையாக இருந்திருக்கும். ஆனால் அவர்கள் தங்கள் வீரத்தைக் காட்ட வேண்டும் என்று எண்ணினார்கள் போலும். முன்னாள் நிதி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம், தேசப் பொருளாதாரத்தைக் காங்கிரஸ்அரசு திறம்படநிர்வகித்ததாகவும் புதிய அரசுக்கு வாய்ப்பான, வசதியான நிலையில் பொருளாதாரத்தை விட்டுச் சென்றுள்ளதாகவும் பறைசாற்றிக் கொண்டார். 1975–76-ல் தேசிய வருமானம் 8.5 சதம் அதிகரித்துள்ளதாகப் பெருமை அடித்துக் கொண்டார்.

புதிய நிதி அமைச்சர் திரு எச்.எம். பட்டேலுக்கு திரு சுப்பிரமணியத்தின் கூற்றை மறுத்துப் பேச நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்தது. நிதி அமைச்சர் அசல் பட்ஜெட்டைச் சமர்ப்பிக்கும்வரை விவாதத்தை ஒத்திப் போட்டிருந்தால் திரு பட்டேல் புதிய கொள்கைகளை நியாயப்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பார். ஆனால் இப்போதோ, தேசப் பொருளாதாரத்தைத் தாம் திறம்பட நிர்வகித்ததாக திரு சுப்பிரமணியம் எழுப்பிய மாயத் தோற்றத்தைத் தகர்க்க வேண்டியது ஒன்றே திருபட்டேலின் காரியமாயிற்று. 75–76-ல் தேசிய வருமானம் 8.5 சதம் அதிகரித்ததெனில் அதற்கு முந்தைய 74–75-ம் ஆண்டில் 0.2 சதமே அதிகரித்தது என்று திரு பட்டேல் எடுத்துக் காட்டினார். இன்னொரு நாடாளுமன்ற உறுப்பினர், 76–77-ல் தேசிய வருமானம் 2 சதவிகிதமே அதிகரித்திருக்கும் என்று கருதப்படுவதைச் சுட்டிக் காட்டினார். திரு சுப்பிரமணியம் கடந்த ஓராண்டில் விலைவாசிகள் 15 சதத்துக்கும் மேலாக அதிகரித்துள்ளதை ஒப்புக் கொள்ள வேண்டியவரானார். அதிகரித்த தேசிய வருமானத்தைத் துடைத்து எடுத்து விடும் விதமாகப் பெருமளவு விலைவாசி உயர்வைத் தாம் அனுமதித்தது ஏன் என்பதற்கு திரு சி. சுப்பிரமணியம் விளக்கம் ஏதும் தரவில்லை.

கல்கி மலர் 36 இதழ் 37

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

நிதி அமைச்சர், ஏழைமை நிலைக்கும் கீழே தள்ளப்பட்ட மக்களின் எண்ணிக்கை சகிக்க முடியாத அளவில் உயர்ந்து விட்டிருப்பதையும் வேலையில்லாத் திண்டாட்டம் முன்னெப்போதையும் விட இன்று பயங்கர உருவெடுத்திருப்பதையும் சுட்டிக் காட்டினார்.

நெருக்கடி நிலைப் பிரகடனம் அமலில் இருந்த போது விமர்சனத்துக்கே இடமில்லாத காரணத்தால் அகில இந்திய ரேடியோவும் அடிமைப்படுத்தப்பட்ட பத்திரிகைகளும் இந்தியப் பொருளாதாரம் அபிவிருத்தி அடைந்துள்ளது பற்றி அபத்தமான அறிக்கைகளை வெளியிட்டன. தேசப் பொருளாதாரத்தை இதைவிட அதிகமாகச் சீர்கெட திரு சுப்பிரமணியம் அனுமதிக்கவில்லை என்ற அளவுக்குத்தான் அவரது நிர்வாகத்தை நாம் போற்ற முடியும்.

ஆட்சியும் எதிர்க்கட்சியும் இந்தியப் பொருளாதாரத்தின் உண்மை நிலை பற்றி மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டியது அவசியம். நமது பொருளாதாரம் மூன்று விதங்களில் பாதிக்கப்படலாம். இவற்றுள் முதலும் முக்கியமுமானது பருவ மழை. 1975–76-ல் தேசிய வருமானம் அதிகரித்ததற்கு நல்ல மழை பெய்ததே காரணம். எந்த ஒரு நிதி அமைச்சரும் பருவ மழைக்குப் பொறுப்பாக முடியாது என்பதால், அதனால் ஏற்படுகிற மாறுதல்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது.

மற்றொரு முக்கிய அம்சம், பெட்ரோலியம் எண்ணெய் விலை ஏற்றம் போன்ற காரணங்களால் சர்வதேசப் பொருளாதாரத்தில் ஏற்படும் மாறுதல்கள்.

மூன்றாவது கடைசி அம்சம்தான் இந்திய அரசின் நிதி, பொருளாதாரக் கொள்கைகள். இந்தக் கொள்கைகள் சர்வதேசப் பொருளரதார மாறுதல்களின் பாதிப்பு, பருவ மழை பொய்ப்பதால் ஏற்படும் பாதிப்பு ஆகியவற்றுக்கு ஈடு கொடுக்கும் விதமாக அமைவதுடன், இதற்குமேல் தேசத்தின் பொருளாதார முன்னேற்றத்துக்கும் வழி வகுக்க வேண்டும். ஒவ்வொரு நிதி அமைச்சரும் இந்த மூன்று அம்சங்களாலும் ஏற்பட்ட தன்மை

நிலைமைகளைத் தனித் தனியே படம் பிடித்துக் காட்டக் கூடுமானால் சரியான கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் அறிவும் துணிவும் அரசுக்கு இருந்ததா என்று மக்கள் நிர்ணயிக்க முடியும்.

நிதி அமைச்சர், புதிய அரசின் கொள்கைகளுக்கு ஏற்ப இறுதி பட்ஜெட் தயாராகுமென்றும் அது சமர்ப்பிக்கப்படும் போது தெளிவான கொள்கை விளக்கங்கள் கிடைக்குமென்றும் உறுதி கூறியுள்ளார். விவசாய, தொழில் துறைகளில் புதிய சுமைகளை ஏற்றுமல் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதின் மூலமும் வரி ஏய்ப்பைத் தவிர்ப்பதன் மூலமும் அரசு வரவு செலவுகளைச் சரிக்கட்டிக் கொண்டு போகும் என நம்புவோம். பெரிய நிறுவனங்களின் நிர்வாகிகளும் பெரும் பணக்காரர்களும் நன்கொடை என்ற பெயரில் கட்சிகளுக்கு ஏராளமாக வழங்கி நமது அரசியல் சூழலையே லஞ்ச ஊழல் மயமாக்கி வருகிறார்கள். இந்தத் தொகைகளுக்கு வருமான வரியும் அவர்கள் கட்டுவதில்லை. திரு பட்டேல் வருமான வரி சட்டத்தையும் கம்பெனி சட்டத்தையும் திருத்தி, இத்தொகைகள் வருமான வரியிலிருந்து தப்பாதவாறு செய்வார் என்று எதிர்பார்ப்போம். கள்ளக் கடத்தல், கறுப்புச் சந்தை ஆகியவற்றுக்கு எதிராக விட்டுக் கொடுக்காமல் தீவிரப் போராட்டம் நடத்தப் போவதாக அவர் ஏற்கனவே அறிவித்து விட்டார். இந்தக் கொடிய பழக்கங்கள் சம்பந்தப்பட்ட சட்டங்களை இன்னும் கடுமையாக்க வேண்டும். இவ்விஷயங்களில் சட்டத்தின் ஆட்சி முழுமையாகச் செயல்படும் போதே, கள்ளக் கடத்தல், வரி ஏய்ப்பு ஆகியவற்றைத் தடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளின் கரங்களைப் பலப்படுத்துவதும் சாத்தியம்தான்.

வரி விதிப்பு, வரி வசூலிப்பு ஆகியவை சம்பந்தப்பட்ட சட்டங்களை, வரி ஏய்ப்புக்கு இடமில்லாத வகையில் திருத்தி அமைப்பதன் மூலமே அரசு கோடிக்கணக்கான ரூபாய்களை வருவாயாகப் பெற முடியும்; வரிச் சுமைகளை அதிகரிக்க வேண்டியதில்லை. மேலும் திரு பட்டேல், தமது அதிகாரிகளைக் கட்டாய சேமிப்பு போன்ற பயனற்ற வேலைச் சுமைகளிலிருந்து விடுவிடுக்க வேண்டும். இந்தத் திட்டங்கள் சம்பந்தமாக வைத்துக் கொள்ள வேண்டியிருக்கும் கணக்கு வழக்கு விவகாரங்களோடு அரசுக்குக் கிடைக்கும் ஆதாயத்தை ஒப்பிட்டால் இவற்றால் வீண் தொல்லைகள் மட்டுமே மிஞ்சுவது புரியும்.


இந்தியப் பொருளாதாரத்தையும் நிதி நிலைமையையும் திறம்பட நிர்வகிக்க நல்ல வழிமுறைகளை வகுப்பது நீண்டகால நிர்வாக அனுபவமுள்ள திரு பட்டேலுக்குச் சாத்தியமே.


திரு கோபாலகிருஷ்ணா

பண்பாட்டின் உறைவிடமாகவும் ஒழுக்கசீலராகவும் விளங்கிய தொழிலதிபர் திரு கோபாலகிருஷ்ணா காலமாகி விட்டார்.

இளம் வயதிலேயே வர்த்தகத் துறையில் ஈடுபட்ட திரு கோபாலகிருஷ்ணா படிப்படியாக வாழ்க்கையில் உயர்ந்து யூனியன் கம்பெனியை நிறுவி பிரிட்டனில் தயாராகும் ஸ்டாண்டர்டு மோட்டார் கார்களுக்கு இங்கே விநியோக உரிமை பெற்றார். பின்னால் அதே ஸ்டாண்டர்டு – டிரியம்ப் மோட்டார் கார் உற்பத்தியாளருடன் கூட்டுச் சேர்ந்து சென்னையில் ஸ்டாண்டர்ட் கார்களின் உற்பத்திக்கு வழி வகுத்தார். அத்துடன், மோட்டார் கார் பாகங்களின் தேவைகளை இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் பூர்த்தி செய்யும் விதமாகப் பல புதிய தொழில்களை ஆரம்பித்து வைத்தார்.

தெய்வ பக்தியும் கொடையுள்ளமும் கொண்ட திரு கோபாலகிருஷ்ணாவின் தாராள உதவியைப் பெற்ற நற்பணிகள் ஏராளம். அவரது மனைவி ஸ்ரீமதி மதுரம் கோபாலகிருஷ்ணாவுக்கும் மருமகன் திரு ஸ்ரீனிவாசனுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


ராஜ்நாராயண்
சுகாதாரம்—
குடும்பக்கட்டுப்பாடு
மந்திரி
ராஜ் நாராயண்


விசாரணை
முடிந்து போன தேர்தலில் ஜனதாவுடன் உடன்பாடு
உஸ்..ஸ்..ஸ்
அட, ராமச்சந்திரா..!
சர்க்காரியா விசாரணையின் தீர்ப்பையொட்டி
சட்டம் தொடர்ந்து செயல்படும் —
நிதி அமைச்சர்


ஒண்ணுமில்லாததுக் கெல்லாம் ஸ்ட்ரைக் பண்றீங்களே... வேலை போயிடிச்சின்னு..?
74-லே ஸ்ட்ரைக் பண்ணினவங்களுக்கே வேலை கிடைச்சு போச்சு!...

தண்டனை — பற்சிதைவில் அக்கறை காட்டாததால் வந்த தொல்லை !



வலிதரும் சொத்தை, பாழான பற்கள், இவை நேராது தவிர்க்க, பற்சிதைவைத் தடுத்திட வேண்டும் — நீங்கள் உங்கள் பற்களுக்குப் பினகா ஃப்ளோரைட்* பாதுகாப்பு அளிப்பதன் மூலம்.

உலகெங்கும் நடத்திய சோதனைகளின் மூலம், பற்பசையில் அடங்கிய பொருட்களில் ஃப்ளோரைட் மட்டுமே, பல் எனாமலோடு உண்மையிலேயே கலந்து, அதற்குப் பற்சிதைவை எதிர்க்கும் வலிமையை ஊட்டுகிறது என்று நிரூபணமாகி உள்ளது. பினகா ஃப்ளோரைடின் நீடித்து நிற்கும் ஆற்றல், பற்களைச் சிதைக்கும் கிருமிகளின் வளர்ச்சியையும் வலிதரும் சொத்தையையும் தடுக்கிறது.

*தீவிர ஃப்ளோரைட் கலவையான ஸோடியம் மோனோஃப்ளோரோபாஸ்பேட் அடங்கியது.




பல்லுக்கு உறுதி,
பற்சிதைவுக்கு எதிரி—

பினகா ஃப்ளோரைட்

இந்தியாவின் முதன்முதல் சக்திவாய்ந்த ஃப்ளோரைட் பற்பசை

U-BF 6/7 tam



மாணாக்கனை 'சிஷ்யன்' என்றும் சொல்லுகிறோம். சிஷ்யன் என்றால் 'சிக்ஷை பெறுபவன்' என்று அர்த்தம். குருகுல வாஸம் செய்து குருவிடமிருந்து பாடத்தில் மட்டுமின்றி, நடத்தையிலும் பயிற்சி பெறுகிறவன் தான் சிஷ்யன். பாடம், நடத்தை இரண்டையும் சொல்லிக் கொடுப்பதுதான் சிக்ஷை. இப்போது சிக்ஷை என்றால் பாட்டு சொல்லிக் கொள்வதைத்தான் நினைக்கிறோம். 'ஸங்கீத சிக்ஷை' என்று சொல்கிறோம். அல்லது ஒரு ஜட்ஜ் தண்டனை விதித்தால், 'ஆயுட்கால சிக்ஷை, தீவாந்தர சிக்ஷை' என்ற மாதிரி சிக்ஷை விதித்ததாகச் சொல்கிறோம். பாட்டு சொல்லிக் கொள்வதையோ, தண்டனையையோதான் ''சிக்ஷை'' என்கிறோம். சில சமயங்களில் ''சங்கீத சிக்ஷை'' என்பதே சங்கீதத்துக்குத் தருகிற தண்டனை மாதிரிதான் அபஸ்வர மயமாக இருக்கிறது! அது வேறு விஷயம்.

ஒரு குருகுலத்தில் சிஷ்யனானவன் எப்படி ஆசிரியருக்குக் கட்டுப்பட்டு விநயமாக இருக்கிறானோ அப்படியேதான் ஒரு மதத்தைச் சேர்ந்தவன் அதன் கொள்கைகளுக்கும், அந்த மதாசாரியருக்கும் கட்டுப்பட்டு அடங்கியிருக்க வேண்டும் என்ற கருத்தில்தான் சீக்கிய மதத்தைக் குருநானக் ஸ்தாபித்தார். அதிலே ஹிந்து மதம், இஸ்லாம் இரண்டின் அம்சங்களும் இருக்கின்றன. இஸ்லாம் மதத்தில் கட்டுப்பாடு ரொம்பவும் ஜாஸ்தி. தங்களுடைய மதக் கோட்பாடுகளுக்கும், விரதானுஷ்டானங்களுக்கும் முஸ்லீம்கள் கட்டுப்பட்டு இருக்கிற மாதிரி மற்ற மதங்களில் சொல்ல முடியாது. இப்படிப்பட்ட அடக்கக் கட்டுப்பாட்டை குருநானக், தாம் ஸ்தாபித்த சீக்கிய மதஸ்தர்களுக்கு முக்கியமாக வைத்தார். அந்த மதஸ்தர்கள் குருகுலத்தில் மாணவர்கள் குருவுக்குக் கட்டுப்படுகிற மாதிரி மதத் தலைவருக்கு அடங்கி நடக்க வேண்டும் என்று கருதினார். அதனால்தான் அந்த மதத் தலைவருக்கு 'குரு' என்றே பெயர் வைத்தார். ('குரு கோவிந்த ஸிங்' என்கிற மாதிரிப் பெயர்களை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்.) மதத் தலைவருக்கு 'குரு' என்று பெயர் வைத்ததற்கேற்ப அந்த மதத்தைச் சேர்ந்த மற்ற எல்லோருக்கும் 'சிஷ்ய' என்றே பெயர் வைத்தார். 'சிஷ்ய' என்பதுதான் 'சிக்' (Sikh) என்றாகியிருக்கிறது. பஞ்சாப் பக்கங்களில் அதாவது சீக்கிய மதம் பரவியுள்ள இடங்களில் வேத அத்யயனம் செய்கிறபோது ''ஷ'' என்ற அக்ஷரத்தை ''க'' என்றுதான் உச்சரிப்பார்கள். உதாரணமாக, ''ஹவிஷா'' என்று புருஷ ஸூக்தத்தில் வருவதை அவர்கள் ''ஹவிகா'' என்றே சொல்வார்கள். அதே நியாயத்தில் 'சிஷ்ய' விலும் 'ஷ' என்பது 'க'வாகி 'சிக்' என்றாகியிருக்கிறது. இது என் ஊகம். 'சிக்ஷக' என்பது 'சிக்கிய' என்றாகியிருப்பதாகவும் ஊகிக்கலாம். குருதான் சிக்ஷகர். மற்றவர் சிஷ்யர்.

அது எப்படியானாலும் விநயம் என்பது மனிதனுக்கு இருக்க வேண்டிய முதல் குணம். அதனால்தான் 'அவிநயம் அபநய' என்றார் நம் ஆசார்யாள். அவிநயம் போனால் அடக்கம் வந்துவிடும்.

இந்த அடக்கத்திலே இரண்டு தினுசு உண்டு. அவை என்ன? (தொடரும்)

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]





ராஜ்காட் நிகழ்ச்சிக்குத் தேவ் ஆனந்தும் சத்ருகன் சின்ஹாவும் வந்திருந்தார்கள். தேவ் ஆனந்தைக் கூட்டம் அலாக்காகத் தூக்கி விட்டது!

ஆசார்ய கிருபளானிக்கு ராஜ்காட்டில் உற்சாகமான வரவேற்பு.

இரண்டாவது குடியரசு உதயம்

மொரார்ஜி முதல்நாளன்று பார்லிமென்டில் பிரதமர் அறையில்.

பிரதமர் பதவிப் பிரமாணம்.









↑ காந்தி சமாதியில் மொரார்ஜியின் மலர் அஞ்சலி.

உறுதி மொழிக்குப் பிறகு காந்தி சமாதியை வலம் வருகிறார்கள்.

ஜனதா செயற்குழு கூட்டம். இடமிருந்து வலமாக பட்நாயக், மொரார்ஜி, அத்வானி, வாஜ்பாய். ↓





பார்லிமெண்ட் மத்திய கூடத்தில்—அமர்ந்திருப்பவர்கள்: ஜே. பி., கிருபளானி → மொரார்ஜி.

புகைப்படங்கள்: டில்லி ராஜு



வேறு எந்த ஆரோக்கிய பானமும்
பரிபூரணமானது
அல்ல.
துடிப்புடனும்
சக்தியுடனும் விளங்க
உங்களுக்குத் தேவையான
இந்த 23 அத்தியாவசிய ஊட்டச்
சத்துக்கள் நிறைந்த பரிபூரண பானம்
காம்ப்ளான் ஒன்றுதான்.
சாப்பிட நேரமில்லையா?
உணவுக்குப் பதிலாக உடனடியாக உதவுவது காம்ப்ளான் ஒப்பின்றி; உழைக்கும் அதிகாரிகள், பிரயாணிகள், அலுவலகம் செல்வோர் ஆகியோருக்கு ஏற்றது காம்ப்ளான்.
புரதம் கார்போஹைடிரேட் கால்ஷியம் லிப்பிடுகள் பாஸ்பரஸ் சோடியம் குளோரைடு (cl வடிவில்) பொட்டாஷியம் இரும்புச்சத்து அயோடின் வைட்டமின் 'ஏ' வைட்டமின் பி1 ரிபோஃப்ளேவின்
நிகோடினமைடு கோலின் கால்ஷியம் பெண்டோதெனேட் பைரிடாக்ஸின் (பி6) வைட்டமின் பி12 ஃபாலிக் அமிலம் வைட்டமின் ஸி வைட்டமின் டி வைட்டமின் ஈ வைட்டமின் கே
அதோடு, இதர சிறசிற பொருட்கள், உடல் சரியா ஆரோக்கியமாக இயங்க உதவும்.
சாதாரண ஆரோக்கிய நிலையில்
ஆரோக்கியமாகவும் துடிப்புடன் விளங்கவும், நீங்கள் உணராத போஷாக்குப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவும் தினசரி காம்ப்ளான் பருகுங்கள்.
காம்ப்ளானில் மட்டுமே விஞ்ஞான ரீதியில் திட்டமிட்டபடி புரதசத்துக்கள், வைட்டமின்கள், தாதுப்பொருட்கள், கார்போஹைடிரேட்கள் மற்றும் அத்தியாவசியமான ஊட்டச்சத்துக்கள் அடங்கியுள்ளன.
சரியாக சாப்பிடுவதில்லையா?
காம்ப்ளான் தரும் 23 அத்தியாவசிய ஊட்டச் சத்துக்களின் 'பரிபூரண' போஷாக்கை வேறு எந்த ஆரோக்கியப் பானமும் தருவதில்லை. எனவே அவரது போஷாக்கில் எந்த பற்றுக்குறை இருந்தாலும், அதை ஈடுசெய்து, அவரை ஆரோக்கியமுடன் விளங்கச் செய்கிறது காம்ப்ளான்..
*பரிபூரண, போஷாக்கிற்கு டாக்டர்களால் பெரிதும் சிபாரிசு செய்யப்படுவது
காம்ப்ளான்
ஒரே பரிபூரண ஆரோக்கிய பானம்.
உலகெங்கும் உபயோகிக்கப் படுவது.
க்ளாக்ஸோ
ஆராய்ச்சியில் உருவானது.
நோயால் சக்தி இழந்துவிட்டீர்களா?
'பரிபூரண' போஷாக்கிற்காக, டாக்டர்களால் பெரும்பாலும் சிபாரிசு செய்யப்படும் காம்ப்ளான் பருகி விரைவில் இழந்த சக்தியைப் பெறுவீர்.
Glaxo
Complan
2
ருசியான
சுவைகள்
CAGC-25-173 TM



ஜீவகாருண்யத் தொண்டர்

பகவதைத் தடை, ஜீவகாருண்யத் தொண்டரும் ''தினமணி'' உதவி ஆசிரியருமான திரு கருப்பையா வுக்குப் பகவான் மகாவீரர் அகிம்சா பிரசார சங்கம் பாராட்டுவிழா நடத்தியது. பத்மஸ்ரீ மோகன்மல்ஜி சோர்டியா தலைமை வகித்தார். இந்திய சைவ உண வாளர் கழகத்தின் துணைத் தலைவர் சுரேந்திரபால் மேத்தா, கருப்பையாவுக்குச்சால்வை போர்த்தினர். பல அன்பர்கள் அவரதுசேவையைப் பாராட்டினர்.

சாகுந்தலம்

செவிக்கினிய இசை, கண்ணையும் கருத்தையும் கவரும் நடன அபிநயங்கள் ஆகியவற்றுடன் வண்ண வண்ணச் சிறகுகள் படைத்த புள்ளினங்களைப் போன்ற வனப்பு மிகுந்த வனிதையர்கள் மேடையில் மின்னலெனத் தோன்றி மகா கவி காளிதாசனின் சாகுந்தல நடன நாடகத்தை அரங்கேற்றினர். நவரஸாவின் ஆதரவில் நடைபெற்றது இந்த நிகழ்ச்சி.

நடை, உடை, பாவனை எல்லாவற்றிலும் காவியச் சகுந்தலையைக் கண்ணெதிரில் கொண்டுவந்து நிறுத்திவிட்டார் லதா. சகுந்தலை தன் தோழிகளான பிரியம்வதை, அநசூயை இருவருடனும் ஆடிப் பாடி மகிழ்ந்தது மயில் மான் இரண்டுடனும் துள்ளிக் குதித்து விளையாடியது ஆகியவை நன்றாயிருந்தது.

சகுந்தலை காவியத்தில் வரும் பல உணர்ச்சி பூர்வமான கட்டங்களை யெல்லாம் அற்புதமான பாவங்களுடன் நடித்துக் காட்டினார் லதா. துஷ்யந்தன் தன்னை வெறுத்து ஒதுக்கிவிட்ட நேரத்தில் சகுந்தலையின் துடிப்பையும், தாங்கொணு வேதனையையும் லதா மிகவும் விறுவிறுப்பான நடன கதியில் பாவங்களுடன் சபையோர் முன் எடுத்துக் காட்டினார்.

துஷ்யந்தனாக நடித்த பெண்மணி சித்ரா. ஆணுக்கேற்ற உயரம், மிடுக்கு எல்லாம் அவரிடம் குடிகொண்டிருந்தன. சகுந்தலையைக் கண்டு மகிழ்ந்து காதல் உணர்வில் நெகிழ்ந்த போதும், பிறகு சகுந்தலையை அடியோடு மறந்து 'நீ யார்?' என்று கேட்டு அவளை வெளியேற்றியபோதும் குமாரி சித்ராவின் நடன பாவங்கள் சிறப்பாக இருந்தன.

இந்த 'ஸீரிய'ஸான நடன நாடகத்தில் சற்று தமாஷும் தேவைதானே? மீனவத் தம்பதியின் நடனம் அதற்கு உதவியாயிருந்தது. குமாரி லக்ஷ்மி பாய் மீனவப் பெண்ணாய் வந்து மீனைத் துள்ளி மிகத் திறமையாக நடித்தார். இவரேதான் ஆரம்பத்தில், விசுவாமித்திரரை மயக்கிய மேனகையாக வந்து எழில்மிகு தோற்றங்களில் நடனம் ஆடியவர். மீனவனாக நடித்தவர் குமாரி உமா.

சகுந்தலையின் உயிர்த் தோழிகளாக, தோகை விரித்து ஆடிய மயிலாகவும், புள்ளிமானாகவும் தோன்றி மேடையை அழகுபடுத்தியவர்கள் - குமாரி மோகனா, குமாரி அமுதா.

லதாலயா நடனக் குழுவில் அனைவரும் பெண்மணிகள். ஆண் வாடையே யில்லை!

சாகுந்தலம் நாடகத்துக்கான பாடல்களை இயற்றி, நடனம் அமைத்துத் தந்தவர் காலஞ்சென்ற பி. எஸ். கோபாலகிருஷ்ணன்.

இந்நடன நாடகத்தின் சிறப்பு அம்சம்—இனிமையான மெட்டுக்களில் அமைந்திருக்கும் பாடல்கள். குமாரி கே. எல். ரகுமாயியின் தேன் குரல் அரங்கை ஆட்கொண்டு விட்டது. திரு சாமிநாதன் நாடகத்தின் ஆண் பாத்திரங்களுக்கு ஏற்றபடி அருமையாகக் குரல் கொடுத்தார்.

இந் நிகழ்ச்சிக்குத் தலைமைவகித்த புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் குழுவினர் ஒவ்வொருவரையும் பாராட்டி, வாழ்த்தினர்.

— காந்தன்



அத்தியாயம் 14

காளியின் தாகம்

பார்த்திபன் கனவு

அமரர் கல்கி

பேச்சுக் குரல் நெருங்கி வருவதாகத் தோன்றவே, பொன்னன் விக்கிரமனை மண்டபத்துக்குள் ஒதுப்புறமாக இருக்கச் சொல்லி விட்டு வாசற்படியண்டை வந்து மறைவாக நின்று கொண்டு எட்டிப் பார்த்தான். மண்டபத்தை நோக்கி இரண்டு பேர் வருவது தெரிந்தது. ஆனால் இருட்டில் முகம் ஒன்றும் தெரியவில்லை. அப்போது பளீரென்று ஒரு மின்னல் மின்னிற்று. மின்னலில் அந்த இருவருடைய முகத்தையும் பார்த்ததும் பொன்னனுடைய உடம்பெல்லாம் ஒரு தடவை பதறிற்று. வந்தவர்களில் ஒருவன் மாரப்ப பூபதி; இன்னொருவன்... ஆம். கபால ருத்திர பைரவன்தான்!

அவர்களை அவ்விதம் திடீரென்று பார்த்த பேரதிர்ச்சியை ஒருவாறு சமாளித்துக் கொண்டு விக்கிரமன் இருந்த இடத்தின் அருகில் சென்று, அவரைத் தொட்டு மெல்லிய குரலில், ''மகாராஜா....!'' என்றான்.

விக்கிரமன், ''இதென்ன, பொன்னா! ஏன் இப்படி நடுங்குகிறாய்?'' என்பதற்குள் பொன்னன் விக்கிரமனுடைய வாயைப் பொத்தி, ''இரைய வேண்டாம்! பெரிய அபாயம் வந்திருக்கிறது; எதற்கும் சித்தமாயிருங்கள்!'' என்று காதோடு சொன்னான்.

விக்கிரமன் இடுப்பைத் தடவிப் பார்த்து, ''ஐயோ! வாள் ஆற்றோடு போய்விட்டதே!'' என்று முணுமுணுத்தான்.

வந்தவர்கள் இருவரும் அந்த மண்டபத்தின் வாசல் திண்ணையில் வந்து மழைக்கு ஒதுங்கி நின்றார்கள். அவர்களுடைய பேச்சு உள்ளே இருந்தவர்களின் காதில் சில சமயம் தெளிவாகவும் சில சமயம் அரைகுறையாகவும் விழுந்தது.

அவர்களில் ஒருவனுடைய குரலை சட்டென்று விக்கிரமனும் தெரிந்து கொண்டான். திடுக்கிட்டு அவன் எழுந்திருக்கப் போனபோது பொன்னன் அவனைப் பிடித்து உட்கார வைக்க வேண்டியிருந்தது.

''மகா பிரபோ! காளி மாதா எனக்கு இன்னும் என்ன ஆக்ஞாபித்திருக்கிறாள்? கிருபை கூர்ந்து சொல்ல வேண்டும்'' என்றது மாரப்பனின் குரல்.

இதற்குப் பதில் கூறிய குரலானது கேட்கும்போதே மயிர்க் கூச்சல் உண்டாக்கக் கூடியதாயிருந்தது. ஒருவேளை பேய், பிசாசுகள் பேசுமானால் இப்படித்தான் அவற்றின் குரல் இருக்கும் என்று எண்ணும்படியாயிருந்தது.

''மாதா உனக்கு இன்னும் பெரிய பெரிய பதவிகளையெல்லாம் கொடுக்கக் காத்திருக்கிறாள். உன்னிடம் இன்னும் பெரிய பெரிய காரியங்களையும் எதிர்பார்க்கிறாள். அன்னைக்கு ரொம்பவும் தாகமாயிருக்கிறதாம். ராஜ வம்சத்தின் இரத்தம் வேண்டுமென்கிறாள்...!''

''ஆயிரம் வருஷத்துப் பரம்பரை ராஜ வம்சத்தில் பிறந்த அரசிளங் குமாரனைக் காளிக்கு அர்ப்பணம் செய்ய முயன்றேன். எப்படியோ காரியம் கெட்டுப் போய் விட்டதே...''

''உன்னாலேதான் கெட்டது. அந்த ராஜகுமாரனுக்காக நானே வந்திருந்தேன். நீ குறுக்கிட்டுக் கெடுத்து விட்டாய்!''

''மன்னிக்க வேண்டும். பிரபோ!... ஆனால் ராஜகுமாரன் வருகிறான் என்று உங்களுக்கு எப்படித் தெரிந்தது?''

''மறுபடியும் அதே கேள்வியைக் கேட்கிறாயே? காளி மாதா சொல்லித்தான் தெரிந்தது. அருள்மொழி ராணியின் வாய்மொழியாக மாதா எனக்குத்

தெரிவித்தாள். 'அதோ கப்பலில் வந்து கொண்டிருக்கிறான்! கரையை நெருங்கிக் கொண்டிருக்கிறான்!' என்று ராணி சொன்னாள். நான் வந்தேன் அதற்குள்ளாக நீ நடுவில் குறுக்கிட்டுக் காரியத்தைக் கெடுத்து விட்டாய்.''

''பிரபோ! க்ஷமிக்க வேண்டும்!...''

''போனது போகட்டும். மாதா உன்னை க்ஷமித்து விட்டாள். ஆனால், 'தாகம்', 'தாகம்' என்று கதறிக் கொண்டிருக்கிறாள்! ராஜகுல ரத்தம் வேண்டும் என்கிறாள்! இந்த அமாவாசை போய்விட்டது. துலா மாதப் பிறப்பிலாவது தாயின் தாகத்தைத் தணிக்க வேண்டும்.... அவனை நீ எப்படியாவது தேடிப் பிடித்துக் கொண்டு வரவேண்டும்...''

''கொண்டு வந்தால்...''

''கொண்டு வந்தால் உன் மனோரதம் நிறைவேறும். பூபதி! காளி மாதாவைச் சரணமாக அடைந்தவுடனே உனக்குச் சேனாபதி பதவி கிடைக்கவில்லையா? இன்னும்...''

''இன்னும் என்ன, சுவாமி!''

''இன்னும் மிகப் பெரிய பதவிகள் உனக்கு நிச்சயம் கிடைக்கும்.''

''பெரிய பதவிகள் என்றால்...?''

''சோழ நாட்டின் சிம்மாசனம் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. மாதா கையில் கிரீடத்தை வைத்துக்கொண்டு உன் தலையில் சூட்டக் காத்திருக்கிறாள்!''

''அவ்வளவுதானா, பிரபோ!''

''அதை விடப் பெரிய பதவியும் அன்னை வைத்துக் கொண்டிருக்கிறாள்.''

''அது என்னவோ?''

''என்னவா? பல்லவ சாம்ராஜ்யத்தின் சிம்மாசனம்தான்!''

''ஆ!'' என்றான் மாரப்ப பூபதி. சற்று நேரம் மௌனம் குடிகொண்டிருந்தது.

''ஆனால் அப்படிப்பட்ட மகத்தான பதவி இலேசில் கிடைத்து விடாது. அதற்குத் தகுந்த காணிக்கை காளி மாதாவுக்கு நீ சமர்ப்பிக்க வேண்டும்.''

''அடியேனிடம் மாதா என்ன எதிர்பார்க்கிறாள்?''

''முதலில் பார்த்திபன் மகனைத் தேடிப் பிடித்துக் கொண்டு வரவேண்டும்.''

''செய்கிறேன்; அப்புறம்?''

''வரும் துலா மாதப் பிறப்பன்று..''

''சொல்லுங்கள், பிரபோ!''

''காளி மாதாவின் சந்நிதிக்கு நீ வர வேண்டும்.''

''வந்து....''

''உன்னுடைய தலையை உன்னுடைய கையினாலேயே வெட்டி மாதாவுக்கு அளிக்க வேண்டும்!''

''ஐயோ!'' என்று மாரப்பன் அலறினான்.

''அளித்தால் அடுத்த ஜென்மத்தில் காஞ்சி சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாகலாம். இல்லாவிட்டால்...''

''இல்லாவிட்டால் என்ன பிரபோ!''

''ஆத்ம பலிக்கு ஈடான இன்னொரு மகா பலி அளிக்க வேண்டும். அளித்தால் இந்த ஜென்மத்திலேயே சக்கரவர்த்திப் பதவி கிட்டும்.''

''அது என்ன பலி, சுவாமி!''

''அந்த விபூதி ருத்திராட்சதாரியைப் பலிக்குக் கொண்டு வரவேண்டும்....''



''பிரபோ! இராஜ வம்சத்து இரத்தத்தை விரும்பும் காளி மாதா, கேவலம் ஒரு விபூதி ருத்திராட்சதாரியைப் பலி கொள்ள விரும்புவானேன்?'' என்று மாரப்பன் கேட்டான்.

''பூபதி! உனக்குத் தெரிந்தது அவ்வளவுதான்! அந்தப் போலி ருத்திராட்சதாரி — உண்மையில், யார் தெரியுமா உனக்கு?''

''யார், பிரபோ!'' என்று மாரப்ப பூபதி வியப்புடன் கேட்டான்.



''பூபதி! அது மகா மர்மம்—யாரும் அறிய முடியாத ரகசியம் — இதோ அடிக்கும் இந்தக் காற்றின் காதிலே கூட விழக் கூடாது. அருகில் வா! காதோடு சொல்கிறேன்...''

சொல்ல முடியாத வியப்புடனும் பயத்துடனும் மேற்படி சம்பாஷணையின் பெரும் பகுதியைக் கேட்டுக் கொண்டு வந்த விக்கிரமனும் பொன்னனும் இப்போது செவிகளைக் கூர்மையாக வைத்துக் கொண்டு கேட்டார்கள். ஆனால் ஒன்றும் காதில் விழவில்லை.

திடீரென்று மாரப்பன் இடி இடி என்று சிரிக்கும் சத்தம் கேட்டது.

''பூபதி! ஏன் சிரிக்கிறாய்? மாதாவின் வார்த்தையில் உனக்கு அவநம்பிக்கையா?'' என்று கபால பைரவர் கோபக் குரலில் கேட்டார்.

''இல்லை, பிரபோ! இல்லை!'' என்றான் மாரப்பன்.

''பின்னர், ஏன் சிரிக்கிறாய்?''

''அந்தச் சிவனடியாரைக் கைப்பற்றிக் கொண்டு வரும்படி இன்னொரு தேவியிடமிருந்தும் எனக்குக் கட்டளை பிறந்திருக்கிறது. அந்தத் தேவி யார், தெரியுமா?''

''யார்?''

''தர்ம ராஜாதி ராஜ மாமல்ல நரசிம்ம பல்லவ சக்கரவர்த்தியின் திருக்குமாரி குந்தவி தேவிதான்!''

''ரொம்ப நல்லது. காளி மாதா தன் விருப்பத்தைப் பல விதத்திலும் நிறைவேற்றிக் கொள்கிறாள்!'' என்றார் மகா கால பைரவர்.

இந்தச் சமயத்தில் சற்றுத் தூரத்தில் குதிரைகளின் குளம்படிச் சத்தமும், இரைச்சலும், ஆரவாரமும் கேட்டன. பொன்னன் சத்தமிடாமல் நடந்து வாசற்படி அருகில் வந்து எட்டிப் பார்த்தான். ஐந்தாறு குதிரை வீரர்கள் தீவர்த்தி வெளிச்சத்துடன் வந்து கொண்டிருப்பது தெரிந்தது. பொன்னன் மனத்துக்குள், ''இன்று மகாராஜாவும் நாமும் நன்றாய் அகப்பட்டுக் கொண்டோம்!'' என்று எண்ணினான். சட்டென்று தலையை உள்ளே இழுத்துக் கொண்டான்.

அதே சமயத்தில் மாரப்ப பூபதி, ''மகா பிரபோ! அதோ என்னுடைய ஆட்கள் என்னைத் தேடிக் கொண்டு வருகிறார்கள், நான் போக வேண்டும்'' என்றான்.

''நானும் இதோ மறைந்து விடுகிறேன், மாதாவின் கட்டளை ஞாபகம் இருக்கட்டும்...''

''மறுபடியும் எங்கே சந்திப்பது?''

''வழக்கமான இடத்தில் தான். சித்திரகுப்தன் உனக்காகக் காத்திருப்பான்..''

இதற்குள் இரைச்சலும் ஆரவாரமும் அருகில் நெருங்கி விட்டன.

''நான் சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கட்டும்.''

''அப்படியே பிரபோ!''

இதற்குப் பிறகு சற்று நேரம் பேச்சுக் குரல் ஒன்றும் கேட்கவில்லை. திடீரென்று கொஞ்ச தூரத்தில், ''சோழ சேனாதிபதி மாரப்ப பூபதி வாழ்க! வாழ்க!'' என்ற கோஷம் கேட்டது. பொன்னனும் விக்கிரமனும் மண்டபத்துக்கு வெளியே வந்து பார்த்தபோது தீவர்த்திகளின் வெளிச்சத்தில் குதிரைகள் உறையூர்ச் சாலையில் விரைவாகப் போய்க் கொண்டிருப்பதைக் கண்டார்கள்.

''மகாராஜா, எப்பேர்ப்பட்ட இக்கட்டிலிருந்து தப்பினோம்?'' என்று சொல்லிப் பொன்னன் பெருமூச்சு விட்டான்.

விக்கிரமன், ''பொன்னா! என்ன துரதிர்ஷ்டம்? நான் ஏறி வந்த குதிரை, அதன் மேலிருந்த இரத்தினப் பைகள் எல்லாம் ஆற்றோடு போய்விட்டதனால் கூட மோசம் இல்லை; என் உடைவாளும் போய் விட்டதே! என்ன செய்வேன்?'' என்றான்.

''மகாராஜா....!''

''என்ன, பொன்னா?''

''ஒரு விஷயம் ஞாபகம் வருகிறது. மகாராணி ஸ்தல யாத்திரை கிளம்பும் போது, என்னிடம் ஒரு பெட்டியை ஒப்புவித்தார்கள். உங்களிடம் கொடுக்கும்படி.....''

''என்ன பெட்டி அது! சீக்கிரம் சொல்லு, பொன்னா!''

''அதில் உங்கள் குலத்தின் வீர வாள் இருக்கிறது. பிடியில் இரத்தினங்கள் இழைத்தது...''

''நிஜமாகவா பொன்னா? ஆகா! முக்கியமாக அந்த வாளுக்காகத்தானே நான் இப்போது தாய்நாட்டுக்கு வந்தேன்! என் தந்தை போருக்குக் கிளம்பும்போது அந்தப் பெட்டியைத் திறந்து அதிலிருந்த பட்டாக் கத்தியையும் திருக்குறள் — சுவடியையும் எனக்குக் காட்டி, 'இவைதாம் நான் உனக்கு அளிக்கும் குலதனம்!' என்றார். எங்கள் மூதாதை — பரத கண்டத்தையெல்லாம் ஒரு குடையின் கீழ் ஆண்டு, கடல் கடந்த தேசங்களிலும் ஆட்சி செலுத்திய கரிகாலச் சோழர் — கையாண்ட வாள் அது. பொன்னா! பத்திரமாய் வைத்திருக்கிறாயல்லவா?''

''வைத்திருக்கிறேன், சுவாமி!''

''எங்கே?''

''வசந்தத் தீவில் புதைத்து வைத்திருக்கிறேன்.''

''அங்கே ஏன் வைத்தாய்?''


''வேறு எங்கே வைப்பேன் மகாராஜா!''

''சரி, பொன்னா! நாம் இப்போது வசந்தத் தீவுக்குப் போய் அந்த வாளை எடுத்துக் கொள்ள வேண்டியதுதான். என் தந்தை என்ன சொன்னார், தெரியுமா? ஒன்பது வருஷங்களுக்கு முன்னால் சொன்னது நேற்றுத்தான் சொன்னது போலிருக்கிறது. 'விக்கிரமா! இந்தக் கரிகாலச் சோழரின் வீர வாளை வேறொரு அரசனுக்குக் கப்பம் செலுத்தும் கையாலே தொடவே கூடாது. ஆகையினால்தான் என் வாழ்நாளில்



கிரிக்கெட் டெஸ்ட் பந்தயத்தில் விளையாடும் ஒவ்வொருவருக்கும் 5000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆனால் ஐந்து நாளும் நிற்கும் அம்பயர்களுக்குத் தலைக்கு ஆயிரம் ரூபாய்தான் தருகிறார்கள்.

— பாபு - ஜே. எஸ்.



விரைவில் நிவாரணம் பெற சக்தி வாய்ந்த, நம்பகமான அனாஸின் சாப்பிடுங்கள்

சக்தி வாய்ந்தது: உலகெங்கும் டாக்டர்கள் மிக அதிகமாக சிபாரிசு செய்யும் வலி நிவாரணியை அதிக அளவில் கொண்டது அனாஸின். ஆகையால்தான் அனாஸின் வலியிலிருந்து விரைவிலேயே நிவாரணமளிக்கிறது.

நம்பகமானது: டாக்டரின் நம்பகமான மருந்தைப் போல பல மருந்துகளின் கலவையே அனாஸின். ஆகையால்தான் லட்சக்கணக்கானவர்கள் அனாஸின் சாப்பிடுகிறார்கள்; சிபாரிசும் செய்கிறார்கள்.

ஜலதோஷம் மற்றும் ப்ளூவினால் ஏற்படும் வலிகள், தலைவலி, முதுகுவலி, தசைவலி, பல்வலி ஆகிய-வற்றுக்கு அனாஸின் சக்திவாய்ந்த நிவாரணி.



சக்தி வாய்ந்த, நம்பகமான
அனாஸின்

இந்தியாவின் புகழ் பெற்ற வலி-நிவாரணி

Regd. User of TM: Geoffrey Manners & Co. Ltd.

A2-6/76

இதை நான் எடுக்கவேயில்லை. நீ எப்போது ஒரு கையகலமுள்ள பூமிக்காவது சுதந்திர மன்னனாகிறாயோ, அப்போது இந்த வாளை எடுத்துக்கொள்' என்றார். பொன்னா! நான் இப்போது செண்பகத் தீவின் சுதந்திர அரசன் அல்லவா? இனி அந்த வாளை நான் தரிக்கலாம்....''

''மகாராஜா! செண்பகத் தீவுக்கு மட்டும்தானா? சோழ நாட்டுக்கும் நீங்கள்தான் அரசர்...''

''அதற்கு இன்னும் காலம் வரவில்லை, பொன்னா! ஆனால், சீக்கிரத்தில் வரும். நான் உடனே செய்ய வேண்டிய காரியங்கள் இரண்டு இருக்கின்றன... அந்த வீர வாளையும் திருக்குறளையும் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தப் பயங்கர நரபலிக் கூட்டத்திலிருந்து மகாராணியை விடுவித்து அழைத்துப் போக வேண்டும். இவற்றுள் முதலில் எதைச் செய்வது, அப்புறம் எதைச் செய்வது என்பதை இப்போது தீர்மானிக்க வேண்டும்.''

அவர்கள் மேலும் யோசனை செய்து, முதலில் உறையூருக்குப் போய் வசந்தத் தீவிலிருந்து வீர வாளை எடுத்துக் கொள்வதென்றும், பிறகு திரும்பி வந்து, சிவனடியாரைத் தேடிப் பிடித்து அவருடைய உதவியுடன் மகாராணியைக் கண்டுபிடிப்பதென்றும் தீர்மானித்தார்கள். இருவரும் மிகவும் களைத்திருந்தபடியால் அன்றிரவு அந்த மண்டபத்திலேயே உறங்கிவிட்டு, அதிகாலையில் எழுந்து உறையூருக்குப்போவதென்றும் முடிவு செய்தார்கள். ஆனால் விக்கிரமனுக்கு ஏற்கனவே கடுமையான சுரம் அடித்துக் கொண்டிருந்ததென்பதையாவது பொழுது விடிவதற்குள் அவன் ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியாத நிலைமையை அடைவானென்பதையாவது அவர்கள் அறிந்திருக்கவில்லை. (தொடரும்)

ஜிந்தகி

துணிந்து புனைந்த சித்திரம் என்ற சொற்றொடர் திரையுலகிலே அடிபடுவதுண்டு. அது அடியும் தடியுமாகி எப்படி எப்படியோ ஓடி முடிவதும் உண்டு. ஆனால் வாழ்க்கை என்னும் பொருள் தரும் இந்தப் படம் துணிந்து எடுத்த படம்தான்.

ஏனெனில் இந்தப் படத்தின் கதாநாயகர்கள் பிராயம் முதிர்ந்த தம்பதிகள். உத்தியோகம் பார்த்து ஒரு குடும்பத்தை உருவாக்கி ஓய்வு பெற்ற கல்லா தம்பதிகள், ஓய்வு பெற்ற பின் அவர்கள் பெற்றெடுத்த பிள்ளைகளாலேயே எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பதைக் காட்டப் புகுந்த இந்தப் படத்திலே, கல்லா தம்பதிகளாக நடிக்கும் சஞ்சீவ் குமாரும் மாலா சின்ஹாவுமே முழுப் படத்தையும் தங்கள் சிறப்பான நடிப்பால் ஆக்கிரமித்துக் கொண்டு விடுகிறார்கள். பாத்திரத்துக்கேற்ற உணர்ச்சிகளைப் பக்குவமாகக் கொட்டுவதில் சஞ்சீவ் குமாருக்கு ஈடு சஞ்சீவ் குமார்தான் என்ற உவமையை சஞ்சீவ் குமார் தட்டிக் கொண்டு போகிறார். மாலா சின்ஹா அதற்கு உறுதுணையாக நிற்கிறார்.

அனில் தவன், விநோத் மெஹ்ரா, ராகேஷ் பாண்டே, மௌஸமீ சட்டர்ஜி, அருணா ஈரானி முதலியவர்கள் அலங்காரப் பொம்மைகளாகத் திகழ்கிறார்கள், தேவன் வர்மா நீங்கலாக.

ஸாஹிர் ஸர்ஹதியின் வசனங்கள் சில இடங்களில் வெகு சுவையாக அமைந்திருக்கின்றன.

சஞ்சீவ் குமாரின் நல்ல நடிப்பைப் பார்ப்பதற்காக வாழ்க்கையின் மூன்று மணி நேரத்தைச் செலவிட்டால் முக்கால் மணி நேரம் வரவாகும். வரவுக்கு மிஞ்சிய செலவு. —ரா. வீ.



முருகன் அடிமை

'புதிய அலை' புயலாக வீசிக் கொண்டிருக்கும் தமிழ்த் திரை உலகில் பழங்காலப் பாணியில் பக்திப் படம் எடுக்கும் துணிச்சல் சின்னப்ப தேவர் ஒருவருக்குத்தான் உண்டு. முருகனுக்கு அடிமையான இந்த முருக பக்தரே இப்படத்தின் கதை வசனகர்த்தா. முருகனை நம்புகிறவர்களை, அவன் என்றும் கைவிடுவதில்லை என்பதைப் புராண பாணியில் வலியுறுத்த நாகரிகப் பாத்திரங்களை உருவாக்கியிருக்கிறார். கள்ளாழ்வார் கதையும் சிவனடியாருக்கு அமுது படைப்பதில் அபசாரம் நேர்ந்து விட்டதாகப் பெற்ற மகனையே கொல்லும் சிவ பக்தையின் கதையும், 'அப்பனைப் பாடும் வாயால் சுப்பனைப் பாடேன்' என்ற பொய்யா மொழிப் புலவரின் கதையும் யமனை வெற்றி கொள்ளும் மார்க்கண்டேயனின் கருத்தும் தேவரின் கற்பனைக்குக் கைகொடுத்துக் கதையை வளர்த்திருக்கின்றன.

வள்ளியம்மையாக வரும் கே. ஆர். விஜயா திருமணத்துக்குத் தயாராக உள்ள கன்னிப் பெண் என்பதை ஜீரணிப்பது சற்று கஷ்டமாகவே இருக்கிறது. விஜயா இளைத்திருப்பது உண்மைதான். பருத்தவர் இளைக்கும் போது இளமையைத் திரும்பக் கொண்டு வந்துவிட முடியுமா என்ன? முரட்டு முருக பக்தனாக, வழிப்பறி செய்யும் கள்வனாக வந்து வள்ளியம்மையின் கணவனாகவும் மாறும் கந்தனாக முத்துராமன் வருகிறார். 'ஜெய் முருகா' என்று இரு கை உயர்த்தி இடி முழக்கம் செய்வது ஆரம்பத்தில் நாடக பாணியாக இருந்தாலும் பிற்பகுதிகளில் தனது 'வழக்கமான', அடக்கமான நடிப்பை எவ்வித 'மாறுதலும் இல்லாமல்' செய்திருக்கிறார். வள்ளியம்மை காணும் கனவுகள் பலிக்கும் - இது தான் கதையின் மையக் கரு. நீண்ட நாள் குழந்தை இல்லாத வள்ளியம்மை தாயாகும் பாக்கியம் பெறப் போவதாகக் கனவு காண்கிறாள். (சஷ்டி விரத மகிமை) கந்தனிடம் வரம் கேட்டவள் அழகும் அறிவுமுள்ள மகவைக் கேட்கிறாள். ஆயுளுள்ள மகனைக் கேட்க மறந்து விடுகிறாள். சோதனை செய்து மகிழும் மால் மருகனோ, 'அழகும் அறிவுமுள்ள ஆண் மகவு-வயது எட்டு!' என்று வரமளித்து விடுகிறார். அற்பாயுசுள்ள மகன் என்பதைக் கணவன் அறிந்தால் தாங்க மாட்டான் என்று மனைவி அந்த ரகசியத்தை மனத்துக்குள்ளேயே வைத்துக் கொண்டு மருகுகிறாள். எட்டு வயதில் மரணமடையப் போகிறான் அருமை மகன் என்பதை அறிந்த ஒரு தாய் எப்படித் துடிப்பாள் என்பதை அற்புதமாகக் காட்டியிருக்கிறார் விஜயா. அந்த நடிப்பு அவருக்குக் கைவந்த கலையாயிற்றே.

கனவைக் கணவனிடம் கூறாமல் மறைக்கும் வள்ளியம்மையிடம் கந்தன் ஓர் இக்கட்டான கட்டத்தில் 'நீ என்ன கனவு கண்டாய் என்பது எனக்குத் தெரியும்' என்று கூறி ஸஸ்பென்ஸை உண்டாக்கி வேறு ஏதோ ஒன்றைக் கூறியதும், ''அப்பாடா!'' என்று மனைவி அமைதிப் பெருமூச்சு விடும் அந்தக் கட்டம் சபாஷ் பெறுகிறது.

ஏ. வி. எம். ராஜனும் வருகிறார். சிவனாக. மும்மூர்த்திகளும் முருகனோடு வாதிடுவதும் 'எல்லாம் உன் விசுவரூபத்தைக் காணவே' என்று அவர்கள் கூறுவதும் புராணப்பட முத்திரையைப் பதித்திருக்கிறது.

நாகேஷ், தேங்காய் ஹாஸ்யம் இந்தப் படத்தோடு ஒட்டவில்லை. ஒரு குழந்தை நட்சத்திரத்தைத் தமிழ்த் திரை உலகுக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார் தேவர். பேபி ரோஹிணி நட்சத்திரமாகப் போகிறது என்பதை அதன் **உருவமே** சொல்லுகிறது!

குளுமையான வண்ணமும், இனிமையான பாடல்களும் இருந்தும் தேவரின் படங்களில் காணும் 'டெம்போ' மட்டும் ஏனோ இல்லை.

—கௌசிகன்



வக்கீல் தாந்தோணி ஸ்ரீநிவாச அய்யங்காரின் சாரட்டையும் குதிரையையும் வாங்கிய வி. ஆர். அவரது வாயக்காரனையும் வேலைக்கு அமர்த்திக் கொண்டார். தாமே வண்டி ஓட்டச் சீக்கிரமே கற்றுக்கொண்டார். ஒரு சமயம் குதிரை கட்டுக்கடங்காமல் நெருக்கடி மிகுந்த தெருக்களில் ஓடத் தொடங்கியபோது, வி. ஆர். பதறிவிடாமல் குதிரை களைப்படைந்து தானே நிற்கும்வரை லகானை இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்தார்.

பேபி என்று பெயர் கொண்ட வெள்ளைக் குதிரைக்குத் தன் எஜமானனிடம் ரொம்பப் பிரியம். வி. ஆரின் விரல்கள் மிருதுவாகவும் நளினமாகவும் இயங்கிய போதிலும் அது குறிப்புணர்ந்து கொண்டு செயல்படும். சேலம் தெருக்களில் அதன் குளம்புகள் எழுப்பும் ஒலி வக்கீல் தமது சாரட்டில் வந்து கொண்டிருக்கிறார் என்பதை அறிவிக்கும். ஒரு நாள் திண்டாதானுனை வாயக்காரன் ஓட்டமாக ஓடி வந்து பேபி ரொம்பவும் நோயுற்றுக் கிடப்பதாக வி. ஆரிடம் தெரிவித்தான். வி. ஆர். குதிரையை அணுகியபோது பேபி நிமிர்ந்து எஜமானன் முகத்தை ஒரு முறை பார்த்தது; அடுத்த கணம் இறந்து விழுந்து விட்டது. 1



ராஜாஜி

குண இயல்புகள்

இந்தக் காலகட்டத்தில் வி. ஆரிடம் குடி கொண்டிருந்த குண இயல்புகள் சிலவற்றை கிருஷ்ண அய்யர் கூறுகிறார்: ''வி. ஆர். அறிவாளியாக விளங்கினார். எங்களுக்கு ஏதாவது தகவல் தேவையாயிருந்தால் அவரிடம்தான் போவோம். புத்திசாலியாகவும் இருந்தார். உள்ளூற நம்முடன் ஒத்துப் போனாலும் எதிர்த் தரப்பு வாதத்தையே வெளியிடுவது அவருக்குச் சுபாவமாக இருந்தது. டி. விஜயராகவாச்சார் ஒரு முறை என்னிடம் சொன்னார்: 'உன்னிடம் ஏதாவது நல்ல வழக்குகள் வந்து சேர்ந்தால் அதுபற்றி வி. ஆரிடம் வாதிக்காதே; அவர் சீக்கிரமே அது மிக மோசமான வழக்கு என்று உன்னை நம்ப வைத்து விடுவார்.' '' 2

கிருஷ்ண அய்யர் வி. ஆரிடம் கொடையுள்ளம் நிரம்ப இருந்ததையும் கண்டிருக்கிறார். ''விருந்தோம்பல் என்பதை வி. ஆர். என்பதற்கு மாற்றுச் சொல்லாகவே கருத ஆரம்பித்தார்கள். முடிவில்லாமல் இந்தக் காரியத்துக்கு அந்தக் காரியத்துக்கு என்று நன்கொடைகள் கொடுத்துக் கொண்டேயிருந்தார்.'' 3

தகப்பனார் தடுத்ததையும் கேளாமல் வி. ஆர். தமது இருபதுகளிலேயே தாம் சேமித்து வைத்திருந்த ஆயிரம் ரூபாயைத் தேசிய கப்பல் நிறுவனத்துக்காக, வ. உ. சிதம்பரம் பிள்ளைக்குக் கொடுத்து விட்டார்.

வி. ஆர். வீட்டுக்கு அடிக்கடி விருந்தினர்கள் வந்து சாப்பிடுவார்கள். இதற்காக இரண்டு மிகத் திறமையான சமையல்காரர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். நகரின் மையத்திலிருந்து மூன்று மைல் தூரத்தில் இருந்த ஜில்லா நீதி மன்றத்தில் வி. ஆருக்காகக் கொண்டு வரப்படும் சிற்றுண்டி சாதாரணமாகப் பத்துப் பேர் உண்ணக் கூடிய அளவுக்கு இருக்கும். அங்கிருக்கும் வக்கீல்கள் எல்லாருக்கும் அதில் பங்குண்டு. 4

சேலம் ரயில் நிலையத்தில் தாம் பார்த்த ஒரு நிகழ்ச்சியைக் கிருஷ்ண அய்யர் விவரிக்கிறார்: கிழக்கிந்தியக் கம்பெனியாரின் செப்புக் காசான ஆறு பைசாவைப் போர்ட்டருக்கு வி. ஆர். கொடுத்தார். அவன், ''பட்டினி கிடக்கிறேன் சாமி, போட்டுக் கொடுங்க'' என்றான். உடனே வி. ஆர். தமது பையிலிருந்து ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்துப் போர்ட்டரிடம் தந்து விட்டார்.

ஆனால் வி. ஆரை யாரும் ஏமாற்றி விட முடியாது. தான் பள்ளி ஆசிரியன் என்றும், வந்த இடத்தில் எதிர்பாராத கஷ்டம் ஏற்பட்டதாகவும் பண உதவி செய்ய வேண்டும் என்றும் ஒருவன் கேட்டபோது வி. ஆர். அவன் எந்தப் பள்ளியிலே வேலை பார்ப்பதாகச் சொன்னானோ அந்தப் பள்ளிக்கே தந்தி அடித்து அவன் கதை அளந்திருப்பதை அறிந்து கொண்டு விட்டார். அந்த ஏமாற்றுப் பேர்வழி மீது வழக்குத் தொடுத்துத் தண்டனை பெற்றுத் தந்தார். பிறகு அவன் செலுத்த வேண்டிய அபராதத் தொகையைத் தாமே கட்டினார்.

குழந்தை வளர்ப்பு

அவரது வருமானம் அதிகரித்துக் கொண்டே போனபோது அக்கிரகாரம் முதல் தெருவில் வாசலில் வேப்ப மரத்துடன் கூடிய

---

1. கோபாலகிருஷ்ண காந்தியிடம் வி.ஆர். உரையாடலின் போது கூறியது.
2. ஆர்.வி. கிருஷ்ண அய்யர், நூலாசிரியரிடம் உரையாடலின் போது கூறியது.
3. ஆர்.வி. கிருஷ்ணய்யர், கல்கி, டிசம்பர். 8, 1957.
4. மேற்படி.

ஒரு பெரிய மஞ்சள் நிற வீட்டை 1909ல் வாடகைக்கு எடுத்துக் கொண்டு சிறிது காலத்தில் அதையே விலைக்கு வாங்கியும் விட்டார். சாரட்டு வண்டிக்குப் பதில் ஒரு கோச்சு வண்டியும் வாங்கப் பட்டது.

பண்பாடு மிக்க, செல்வச் செழிப்புடைய முக்கியஸ்தராக நகரில் விளங்கிய வி. ஆர்., தமது குழந்தைகளை வளர்ப்பதிலும் கவனம் செலுத்தி வந்தார்.

1907ல் அவர் எழுதினார்: ''என் குழந்தையிடம் ஒரு பொருளைக் காண்பிக்கும்போது அவன் வேறு எதையேனும் குறிப்பிட்டுக் கூறுவதை நான் கண்டிருக்கிறேன். இதனை நமது உபாத்தியாயர்களில் தொண்ணூற்று ஒன்பது சத விகிதத்தினர் ஒரு குழந்தையின் சம்பந்தா சம்பந்தமற்ற பிதற்றல் என்றே கருதுவார்கள். ஆனால் குழந்தை தனது வியப்புக்குரிய ஞாபக சக்தியை வெளியிடுகிறது என்பதே உண்மை.[5]

''ஒன்றுக் கொன்று தொடர்பான அவனது சிந்தனைப் போக்கைக் காணாது, அதற்குப் பதில் மனத்தைத் திரிய விடுகிறான் என்பதற்காக அவனை நான் கோபித்துக் கொண்டிருந்தால் அந்த இளம் மூளை சரியான பாதையில் செல்வதிலிருந்து எப்படி பலமாக முறித்துத் திசை திருப்பப் பட்டிருக்கும்!''[6]

''அறிவுக் கொலைகாரர்கள்''[7] என்றே வி. ஆரால் வர்ணிக்கப்பட்ட ஆரம்பப் பள்ளி



வாழ்க்கை வரலாறு



ஆசிரியர்கள் அந்நாட்களில் சிறிதும் பயிற்சி பெறாதவர்களாக இருந்தார்கள். அவர்களது தகுதியின்மையை விசனத்துடன் சுட்டிக் காட்ட எழுதப்பட்டது இது என்றாலும், இதுவே குழந்தைகளின் இயல்பை நன்கு உணர்ந்த தகப்பனாராகவும் வி. ஆரை நமக்குப் புலப்படுத்துகிறது.

அந்த 1910ம் ஆண்டில் அவ்வீட்டில் அவருடைய நான்கு குழந்தைகள் தவிர வேறு ஏழு குழந்தைகளும் இருந்தன. அவரது சகோதரன் பிள்ளை துரைசாமி, ஒன்றுவிட்ட சகோதரன் மைந்தன் சாமாசார், மனைவியின் தம்பி ராமசுவாமி ஆகியோர் அந்த எழுவரில் சிலர். இவர்கள் அனைவரும் ஒரு காலகட்டத்தில் சேலத்தில் அவர் வீட்டில் வாழ்ந்து அவரால் படிக்க வைக்கப்பட்டனர்.

1909ம் ஆண்டில் வி. ஆர். ஹொசூருக்குப் பக்கத்தில் ஒரு கிராமத்தில் வசித்து வந்த சாமாச்சாரைத் தம்முடன் அழைத்துப்போக வந்தபோது அவன் தகப்பனார் பையனுக்காகப் படுக்கை சுற்றிக் கொடுத்தார். அதை ஏற்காத வி. ஆர்., ''சேலத்தில் நம் வீட்டில் ஆறு படுக்கைகள் உள்ளன. எதை வேணுமானாலும் அவன் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம்'' என்றார். ''அந்தக் கணத்திலிருந்து என்னை அவர் தம் சொந்த மகனாகவே கவனித்துக் கொண்டார்'' என்று சாமாச்சார் பின்னால் நினைவுகூர்ந்தார்.[8]

---

5. ஹிந்துஸ்தான் ரெவ்யூ, ஜூன் 1907.
6. மேற்படி.
7. மேற்படி.
8. வி. சாமாசார் நூலாசிரியரிடம் பேட்டியின் போது கூறியது.

○ பாரதியார்
○ ஆர். வி. கிருஷ்ண அய்யர்

ராஜ்மோகன் காந்தி

இளம் பிள்ளைகளைப் பழக்க வி. ஆரின் வழிமுறைகளில் ஒன்று ஒருவர் மாற்றி ஒருவராக அவர்களை வீட்டின் எஜமானர்களாக இருக்கச் சொல்வது. 1909ல் மங்காவுக்கு வயது இருபது. அவளும் குழந்தைகளில் மூத்தவர்களும் எஜமானன் விளையாட்டில் மாறி மாறிப் பங்கேற்றனர்.

துப்பாக்கி வெடித்தது!

இந்தச் சமயத்தில்தான் - 1909 வாக்கில்-தான் ஓர் இரவு ஒரு தவறான அனுமானத்தின் காரணமாக வி. ஆரின் துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட ஒரு தோட்டா, ஒரு பாவமும் அறியாதவனைக் கிட்டத்தட்ட கொன்றே விட்டது. நாமக்கல்லில் ஒரு வழக்கில் ஆஜராகி வாதித்து விட்டு வி. ஆர். மாட்டு வண்டியில் இரவோடு இரவாகச் சேலம் திரும்பிக் கொண்டிருந்தார். ரிவால்வரைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு வண்டியில் படுத்துத் தூங்கியும் விட்டார். சில இடங்களில் சுங்கச் சாவடிகளைக் கொண்டிருந்த அந்தச் சாலையில் வழிப்பறிக்கு ஆளானவர்களும் உண்டு. ''பணம்'' என்று யாரோ உரக்கக் குரல் எழுப்புவது கேட்டு விழித்தெழுந்த வி. ஆர். தம்மை ஒரு கொள்ளைக்காரன் தான் வழிமறிக்கிறான் என்று எண்ணிவிட்டார். இருட்டில் துப்பாக்கியை உயர்த்திக் குரல் வந்த திசை நோக்கிச் சுட்டார். லாந்தர் விளக்குடன் ஒருவன் அவசரமாக வந்தான். அந்த வெளிச்சத்தில் வி. ஆர்., சுங்கச்சாவடி வாசலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு மனிதனைத் தாம் சுட்டுவிட்டதைக் கண்டார். தமது மாட்டு வண்டியிலேயே அவனை ஏற்றி மருத்துவ மனைக்கு அழைத்துப் போனார். ஆண்டவன் கருணையால் தோட்டா மண்டை யோட்டினைத் துளைக்கவில்லை என்பது அங்கே புரிந்தது.

அம்மனிதனுக்கு நஷ்ட ஈடு கொடுத்த வி. ஆர்., வி. விஜயராகவாச்சாரியாரிடம் போய் நடந்ததைச் சொன்னார். வழக்குத் தொடுக்கப்பட்டபோது வயது முதிர்ந்த அந்தக் கனவான் வி. ஆர். சார்பில் ஆஜரானார். வி., ஆர். குற்றவாளி யல்ல என்று தீர்ப்பான போதிலும் அவரது துப்பாக்கி லைசென்ஸ் சிறிது காலத்துக்குப் பறிமுதல் செய்யப்பட்டது.

சமூக சீர்திருத்தங்கள்

சேலத்துக்கு அவர் வந்து சேர்ந்த ஆரம்ப நாட்களிலிருந்தே வி. ஆரை ஒரு சமூக சீர்திருத்தவாதி என்று கண்டு சிலர் போற்றினர், பலர் பழித்தனர். எதிர்ப்பு, நாராயண அய்யர் சம்பவம் காரணமாக ஆரம்பமாயிற்று என்பதாகத் தெரிய வருகிறது. ஐ. ஸி. எஸ். அதிகாரி ஆர். நாராயண அய்யர் ஆசாரக் கட்டுப்பாட்டை மீறிக் கடல் கடந்து திரும்பி வந்திருந்தார். வி. ஆரின் நண்பரும் விரிவுரையாளருமான சேஷ அய்யர், நாராயண அய்யரைத் தமது வீட்டில் வரவேற்றதன் மூலம் ஆசாரக்காரர்கள் நோக்கில் புதியதொரு தவறு நடக்கக் காரணமாயிருந்து விட்டார். நாராயண அய்யருக்குப் பிராயச்சித்தச் சடங்குகளை நடத்தி வைத்த கிருஷ்ண சாஸ்திரி என்ற புரோகிதர் மூன்றாவது குற்றம் புரிந்து விட்டார். இம்மூவர் சார்பிலும் வாதாடியதுடன் நாராயண அய்யருடன் சகஜமாகப் பழகவும் செய்தார் வி. ஆர். பல குடும்பங்களின் புறக்கணிப்புக்கு ஆளான கிருஷ்ண சாஸ்திரிக்கு உதவ மாதாந்திர சந்தா வசூலிப்பையும் தொடங்கினார். சேலத்தில் உறுதியாக மட்டுமின்றிக் குறுகிய நோக்கிலும் ஆசாரம் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

சீக்கிரமே வி. ஆர். இன்னும் தீவிரமான ஒரு விஷயத்துக்காகப் போராடினார். ஐந்தாவது வர்ணத்தைச் சேர்ந்த இரண்டு சிறுவர்களுக்குச் சேலம் முனிசிபல் பள்ளியில் சேர்வதற்கு உரிமை உண்டு என்பதுதான் அது. பொல்லாதவர் என்று பெயரெடுக்க வேண்டாம் என்று அவரைப் பலர் எச்சரித்தனர். பள்ளி நிர்வாகிகள், அதில் படித்து வந்த இருநூறு உயர் ஜாதி மாணவர்களும் வெளியேறி விடுவார்கள் என்பதாக எச்சரிக்கப்பட்டனர். ஆனாலும் ராஜாஜி வற்புறுத்தி வெற்றி கண்டார். பள்ளிச் சம்பளத்தை வி.ஆர். கட்டிவிடத் தீண்டாதார் வகுப்பைச் சேர்ந்த இரு சிறுவர்களும் அதனைப் பயனுள்ள செலவாக்கினார்கள். தீண்டாதார் என்ற எண்ணமே நீங்கி அனைவரும் கலந்து பழகுவது சகஜமாகி விட்டது இன்று. ஆனால் இதற்கு முதற் படியாக அந்தப் போக்கு அதிகரிக்க அன்று வழி வகுக்கப்பட்டது.

வி. ஆர். நடத்தி வைத்த ஒரு சீர்திருத்தத் திருமணமும் பெரும் வாதப் பிரதி வாதங்களைத் தோற்றுவித்தது. அத்திருமணம் மூன்று விதங்களில் அசாதாரணமானதாக விளங்கியது. ஒரு பக்கம் வைஷ்ணவம் மறு பக்கம் சைவம். மணமகள் ஒரு விதவை. மலர்ச்சியுற்றவளும் கூட. பத்திரிகைகள் இந்தக் கல்யாணம் பற்றி எழுதின. சக்கரவர்த்தி அய்யங்கார் சந்தோஷ மடையவில்லை. ''அடடா! இதையா நீ சமூக சீர்திருத்தம் என்கிறாய்? அந்தப் பெண்ணும் பிள்ளையும் ஓடிப் போயிருக்க வேண்டாமோ?'' என்றார்.[9]

குறை காணும் விமர்சனங்கள் வி. ஆரின் ஆர்வத்தை மேலும் பலப்படுத்தின. 1910ல் கர்னூலில் நடந்த ஒரு சமூக சீர்திருத்த மகாநாட்டில் அவர் ஜாதி விட்டு ஜாதி திருமணம் செய்து கொள்வதை அனைவரும் ஒப்புக் கொள்ள வேண்டும் என்று பாடுபட்டார். கர்னூலிலிருந்து ரயிலில் திரும்புகையில் அவருடன் பயணப்பட்ட நண்பர்களுக்கு வி. ஆரின் மூளை எவ்வளவு துரிதமாக இயங்குகிறது என்பதற்குப் புது சாட்சியம் கிடைத்தது.

வேங்கட சுப்பையர் ஒரு மதிப்பு மிக்க கைக் கடிகாரத்தை ஜன்னல் வழியாகக் கை நழுவ விட்டு விட்டார். மற்றவர்கள் வருத்தம் தெரிவித்துக் கொண்டோ அல்லது புகார் பண்ணிக் கொண்டோ இருந்தபோது வி. ஆர். ஜன்னல் வழியே வெறித்து நோக்கியபடி தந்திக் கம்பங்களை எண்ணிக் கொண்டிருந்தார். அடுத்த ஸ்டேஷனில் ரயில் நின்றதும் ஸ்டேஷன் மாஸ்டரிடம் தாம்

6. Felton, I meet Rajaji P. 116-

க்ளாக்ஸோவின்



இன்பமான குடும்ப சலுகை

ரூ. 1/– தள்ளுபடி

கீழ்க்கண்ட கூப்பனைப் பூர்த்தி செய்யுங்கள். உங்கள் முழுப் பெயரையும், முகவரியையும் எழுதி, சிறு குடும்பத்தின் நன்மைகள் பற்றிய வாக்கியத்தைப் பூர்த்தி செய்யுங்கள். இக் கூப்பனையும், நீங்கள் இப்பொழுது வாங்கியுள்ள க்ளாக்ஸோஸ்-D-யின் 400 கிராம் பேக்கின் மேற்புற மூடும் பகுதியையும் (Flap) கடைக் காரரிடம் கொடுங்கள். 400 கிராம் பேக்கின் மீது உங்களுக்கு ரூ. 1/- தள்ளுபடி தரும்படி கடைக்காரர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

உடனடி நன்மை கிட்டும். காக்கவேண்டாம். தபாலிட வேண்டாம். இது க்ளாக்ஸோவின் 'இன்பமான குடும்ப'சலுகை. பொன்னான வாய்ப்பைப் போகவிடாதீர்கள். க்ளாக்ஸோஸ்-D உடனடியாக சக்தி அளிக்கிறது. உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் நல்லது. அது உங்கள் உடலுக்கும் உள்ளத்துக்கும் புத்துணர்ச்சி ஊட்டுகிறது.

க்ளாக்ஸோஸ்-D®

–யின் 400 கிராம் பேக்கின் மீது

இங்கே வெட்டுக

உங்கள் பெயர் ....

உங்கள் முகவரி ....

....

இந்த வாக்கியத்தைப் பூர்த்தி செய்க (எந்த மொழியிலும்): ''சிறிய குடும்பங்கள் நன்மை பயக்கின்றன. ஏனெனில் ....

....

கடைக்காரரின் பெயர் .... ஊர் ....


அன்பார்ந்த கடைக்காரரே,
மேற்கண்ட விவரங்கள் சரியாகப் பூர்த்தி செய்யப் பட்டிருந்தால், க்ளாக்ஸோஸ்-D யின் (பழைய அல்லது புதிய பேக்டினை) ஒவ்வொரு 400 கிராம் பேக் வாங்கும் போதும், வாடிக்கையாளருக்கு ரூ. 1 தள்ளுபடி அளியுங்கள்.

விற்பனை செய்யப்பட்ட பேக்கிலிருந்து க்ளாக்ஸோஸ்-D யின் பெயர் கொண்ட மேற்புற மூடும் பகுதியை (Flap) கிழித்து எடுத்து, அதன் பின்புறம் உங்கள் கடையின் முத்திரையைக் குத்துங்கள். பின்னர் அந்த மூடும் பகுதியைக் கூப்பனுடன் இணைத்து எங்கள் விற்பனைப் பிரதிநிதியிடம் வழங்குங்கள். ஒவ்வொரு கூப்பன் ஒன்றுக்கு அந்த ரூ. 1/-வும் கூடவே 25 காசும் தருவோம்.

நன்றி.


ஃபாமிலி ப்ராடக்ட்ஸ் டிவிஷன்
KL க்ளாக்ஸோ லேபரேட்டரீஸ் (இந்தியா) லிமிடெட்

முந்துங்கள்! க்ளாக்ஸோவின் 'இன்பமான குடும்ப சலுகையால் பயன் பெறுங்கள். இந்த சலுகை 1977 ஏப்ரல் 15ம் தேதி வரைதான்.



dCA/GL/43 E TAM.

எங்களது மதிப்பீடு எடையைப் பொருத்ததல்ல



சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் தொழிற்சாலையில் சிறிய 'O' வளையம் செய்வதாயினும் அல்லது வாடிக்கையாளரின் தேவைக் கேற்ப மிகப்பெரிய சஸ்பென்ஷனை வார்ப்பதாயினும் எங்கள் கவனம் ஒன்றே. எடை, உருவம் மற்றும் அளவு எவ்வளவாயினும் சரி, இயற்கை மற்றும் செயற்கை ரப்பரைக் கொண்டு உங்களுக்கேற்ற உறுப்புகளை வார்த்துத் தருகின்றோம்.

எங்கள் பங்கு பல தொழில்களில்

மோட்டார் மற்றும் சுரங்கத் தொழில், எலெக்ட்ரானிக்ஸ் மற்றும் நெசவுத் தொழில் இவ்வாறு பரந்த பல தொழில்களுக்கேற்ப ரப்பரினால் வார்க்கப்படும் உறுப்புகள். டெல்கோ, மைக்கோ, ப்ரீமியர், அசோக்லேலண்ட் மற்றும் புகழ்பெற்ற உற்பத்தியாளர்களுக்காக தனியே வார்க்கப்படும் உறுப்புகள். சைரப்பர் உறுப்புகளை பலதரப்பட்ட வாடிக்கையாளர்கள் விரும்பி வாங்குகின்றனர்.

தேவைக்கேற்ப வார்க்கிறோம்

வடிவம், அளவு, உங்கள் தேவை இவைகளுக்கேற்ப உறுப்புகளை வார்ப்பதே எங்கள் சிறப்பு. எமது இரு அண்மைக்கால வெற்றிகள்: திருச்சியில் பாரத் ஹெவி எலெக்ட்ரிகல்ஸுக்காக ட்ரன்னியன் ஷாஃப்ட் புஷ்ஷிங் ஸஸ்பென்ஷன்கள், பங்களூரில் பாரத் எலெக்ட்ரானிக்ஸுக்காக ஷாக் அப்ஸார்பர்கள்.

உங்களுக்குத் தனிப்பட்ட வகையில் வார்ப்பு தேவைப்பட்டால் எங்களை அணுகுங்கள். அது ஒரே வார்ப்பாக இருந்தாலும் சரி, நாங்கள் செய்து தருகிறோம்.

நீங்கள் விரும்பி வாங்கவேண்டிய புத்தகம்

அது "சைரப்பர் — உங்கள் தேவைக் கேற்ப வடிவு கொள்கிறது". ரப்பரைக் கொண்டு நாங்கள் என்ன செய்கிறோம், எவ்வாறு செய்கிறோம் எனக் கூறுகிறது. ஒரு வரி எழுதுங்கள். ஒரு பிரதி அனுப்புகிறோம்.

SIRUBBER

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
உசிலம்பட்டி ரோடு, கோச்சடை, மதுரை 625 016

S.A.A. SI 2536

எதுவரை எண்ணிக் கொண்டு வந்தாரோ அந்த எண்ணைச் சொன்னார். கடிகாரம் அதன் சொந்தக்காரரைச் சில தினங்களில் வந்தடைந்து விட்டது.

ஜாதி விஷயத்தில் மட்டும்தான் வி. ஆர். புதுமைகளைச் செய்தார் என்பதல்ல. பி. வி. நாமகிரி என்ற இளைஞன் வி. ஆரின் யோசனைக் கிணங்கி ஒரு சுதேசிக் கடையை ஆரம்பித்தான். இதில் முழுக்க முழுக்க இந்தியத் தயாரிப்புக்கள் மட்டுமே விற்கப்பட்டன. இந்த முயற்சி வெற்றி பெற்றது.

முஸ்லீம்களிடம் பரிவு

தென் இந்தியர்கள் வடக்கே இலகுவாகப் பழக வசதி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் வி. ஆர். ஒரு ஹிந்துஸ்தானி வகுப்புக்கு ஏற்பாடு செய்தார். அவரும் அவரது வக்கீல் நண்பர்கள் சிலரும் சில காலம் வகுப்புக்களுக்குச்சென்று வந்தார்கள். உருது எழுத்துக்களையும் அவர் பயின்றார். முஸ்லிம்கள் விஷயத்தில்[10] அவர் பரிவுடன் நடந்துகொண்டார். இந்தக் குணம் அவர் நண்பர்கள் சிலருக்குப் பிடிக்கவில்லை.

10. ஆர்.வி. கிருஷ்ண அய்யர் நூலாசிரியரிடம் கூறியது 1973.

விஞ்ஞான வார்த்தைகளுக்குத் தமிழ்ச் சொற்கள் கண்டுபிடிப்பதிலும் வி. ஆர். ஆர்வம் காட்டினார். இது பிற்காலத்தில் மேலும் வளர்ந்தது. கல்லூரியில் ஒரு வேண்டாத சுமையாக அவர் கருதிய தமிழை இப்போது அவர் முற்றிலும் புதிய கோணத்தில் பார்த்தார். பெருவாரியான மக்களுக்கு அறிவூட்டும் சாதனமாகத் தென்பட்டது.

1909 இறுதியில் நண்பர்கள் உடன் வர வி. ஆர். பாண்டிச்சேரிக்குப் பயணப்பட்டார். அந்தப் பிரெஞ்சுக் காலனியில் தஞ்சம் புகுந்திருந்த தென்னிந்திய தேசபக்தக் கவி சுப்பிரமணிய பாரதியாரைப் புத்தாண்டு தினத்தன்று சந்தித்தார். கவி, வி. ஆரையும் அவரது நண்பர்களையும் வரவேற்று அவர்களுக்குப் பாடிக் காட்டி மகிழ்வித்தார். திரும்பி வந்த பிறகு வி. ஆர். சேலம் பள்ளிக் குழந்தைகள் பாரதி பாடல்களைக் கற்குமாறு செய்தார்.

சேலத்தின் அரசியல்வாதிகள் தீவிரவாதிகளாக இருந்தனர். அதன் அறிவாளிகள் சமூக சீர்திருத்தங்களைச் செய்வதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து வந்தனர். எனவே சேலம் தென்னிந்தியாவின் பூனா என்று அழைக்கப்பட்டதில் வியப்பேதும் இல்லை. (தொடரும்)

இசை ஜோதி அணைந்தது

இந்துஸ்தானி சாஸ்திரிய சங்கீதத்தின் மணி விளக்காக ஒளி வீசி நாற்பதாண்டுகளுக்கு மேல் பிரகாசித்து வந்த ஸ்ரீமதி சித்தேச்வரி தேவி என்ற இசை ஜோதி மறைந்து விட்டது. இசை உலகத்துக்கு இது பெரிய நஷ்டம்.

''தும்ரி ராணி'' என்று ரசிகர் கூட்டங்களினால் பரிவுடன் அழைக்கப்பட்டுப் புகழ் பெற்றவர் ஸ்ரீமதி சித்தேச்வரி தேவி.

இந்துஸ்தானி கானத்தின் இனிமையை நம் மக்களிடையே அள்ளி வழங்கி மக்களை ஆனந்தத்தில் ஆழ்த்தியவர்.

வெளி நாடுகளிலும் நம் இசையின் இனிமை பரவ வேண்டுமென்று,' லண்டன், ரோமாபுரி காபூல் முதலிய அயல் நாட்டு மேடைகளில் இசைக் கச்சேரிகள் செய்து புகழ் பெற்றவர்.

இந்திய அரசாங்கத்தின் பத்மஸ்ரீ விருது பெற்றவர். ஸங்கீத நாடக அகாடெமியின் விருதுகளையும் பெற்றுப் பெருமை அடைந்தவர். ரவீந்தர் பல்கலைக் கழகம் அவருக்குக் கௌரவ டாக்டர் பட்டம் அளித்துக் கௌரவித்தது. விச்வ பாரதி கலாசாலை 'தேசிகோத்தம' என்று விருதளித்து அவரைக் கௌரவித்துள்ளது.

சென்னை வித்வத் சபையில் இந்துஸ்தானி இசை நிகழ்ச்சிகள் பல வழங்கியிருக்கிறார். தென்னிந்திய ரசிகர்களுக்கு இவர் அறிமுகமானவர்.

கல்கி பூங்காவில் விருந்தினராக அவர் தங்கியிருந்த இரண்டு மாத காலம், இக் காரியாலயத்திலுள்ளவர்களுக்கு மறக்க முடியாத அனுபவம்.

அந்த நாட்களில் அவருடைய இன்னிசையை பூஜ்ய ராஜாஜி அடிக்கடி கேட்டு மகிழ்ந்தார் என்ற நினைவும் கூடவே எழுகிறது.



புண்ணிய பூமியாகிய வாரணாசியில்பிறந்து, வளர்ந்து, அங்கேயே தமது இசை சாம்ராஜ்யத்தை ஏற்படுத்திக் கொண்டு, இப்போது மறைந்த ஸ்ரீமதி சித்தேச்வரி தேவியின் நினைவுக்கு அஞ்சலி செலுத்துகிறோம்.


ஹேண்ட்லூம் ஹவுஸ்
மயில் அளிக்கும்
வண்ணத் துணி வகைகள்!
சிறப்புத்
தள்ளுபடி
20%
பருத்தித் துணிகளுக்கு
10%
பட்டு,
ரேடிமேடுகளுக்கு
ஏப்ரல் 1 முதல் அளிக்கிறது.
• நாட்டின் பல ரக
துணி வகைகள்.
• தனித்தன்மை வாய்ந்த
கண்கவர் டிசைன்கள்.
• இன்முக சேவை புரியும்
ஹேண்ட்லூம் ஹவுஸ்-க்கு
உடனே வாருங்கள்.
ஹேண்ட்லூம் ஹவுஸ்
9, ரத்தன் பஜார், சென்னை 600 003
சென்னை பாந்தியன் சாலை,
கைத்தறிப் பொருட்காட்சியில் உள்ள
ஹேண்ட்லூம் ஹவுஸ் அரங்குக்கு வாருங்கள்.
ADWAVE/HH: 585

மீனாட்சி - சுந்தரேசுவரர் கல்யாணத்துக்கு வியாக்கிரபாத முனிவரும் பதஞ்சலி முனிவரும் வந்திருந்தார்கள். சிதம்பரத்தில் கனகசபையில் நாள்தோறும் நடைபெறும் திருக் கூத்தைக் கண்டபிறகே சாப்பிடும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள் அவர்கள். அவர்கள் பட்டினியால் வாடாமலிருக்க அவர்களுக்காக 'ஸ்பெஷல்' கூத்து ஆடினார் சிவபெருமான். 'மதுரையில் சிதம்பரமா?' என்ற கேள்விக்கு இதுதான் பதில்.

15

ராமையாவின் உருட்டல் மிரட்டல்களுக்கு ரமணி என்றுமே பயந்ததில்லை. ஜூனியர் ஸ்தானத்தில் அமுந்தி உட்கார வேண்டுமென்றால் அவரை எதிர்த்துப் பேசாமல் மௌனமாக இருந்துவிட வேண்டும் என்ற விவேகத்தில் ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்து, ஒன்றுமே நடக்காதது மாதிரி அவன் வேலையில் கவனத்தைச் செலுத்துவான்.

உத்தமபாளையம் அப்பீலை இன்னும் படிக்காமல் வீணுகப் பொழுதைப் போக்குகிறுன் என்ற ஸீனியரின் குற்றச்சாட்டு மிகவும் அபாண்டமானது என்பதை ரமணி அறிவான். கேஸ் கட்டு முழுதும் ஸீனியர் வசம் இருக்கிறது. அது அவர் கையை விட்டு அவனிடம் வரவேயில்லை. ஆனல் ஏற்கனவே அதை ரமணியிடம் தாம் கொடுத்து விட்டதாக நினைத்த அவர் அவன் மீது சாடியிருக்கிறுர். அவர் செய்துள்ள தவற்றைச் சுட்டிக் காட்டுவது கலபம்தான். ஆனல் அது ராமையாவின் எரிச்சலைத்தான் அதிகரிக்கும்.

ராமையா தம்முடைய அறைக்குப் போன பிறகு, ரமணி சந்தடி செய்யாமல் மாடிக்கு ஓடினுன்.

மாடி ஹாலில் அவருடைய மனைவி பூத் தொடுத்துக் கொண்டிருந்தாள். ரமணியைக் கண்டதும், ''என்ன வேணும் ரமணி?'' என்று கேட்டாள்.

''ஸீனியர் அறையிலேந்து ஒரு கேஸ் கட்டை எடுக்க வேண்டும்.''

''எடுத்துக்கோயேன்'' என்ற ராஜம்மா தொடர்ந்து, ''உத்தமபாளையம் கேஸ் கட்டு தானே?'' என்றுள்.

''ஆமாம்! உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''இப்ப உங்கிட்டே நாடகம் ஆடினுரே, அந்த நாடகத்தோட ஒத்திகையை அவர் என் முன்னுலேதானே நடத்தினுர்!''

''என்ன மாமி சொல்லுகிறீர்கள்?''

'' 'இந்த ரமணி நான் என்ன சொன்னுலும் திருப்பிப் பேசறதில்லே. என் மேலே குத்தத்தை வைச்சுண்டே அவனை நான் க்ண்டிச்சாக்கூட, உண்மையாவே குத்தம் செய்ஞ்சவன் மாதிரி நடிப்பான். எம்மேலே அவனுக்கு அவ்வளவு பக்தி, மரியாதை'ன்னு அவர் அடிக்கடி சொல்லுவார். நேத்தி ராத்திரி நான், அவர், ஹரிணி மூணுபேரும் உன்னைப் பத்திப் பேசிண்டிருக்கறப்போ, 'இப்படி அவர் சொன்னுர்.''

''ஓ, என்னைப் பத்திப் பேச்சு நடந்ததா..?'' என்று இழுத்தான் ரமணி.

''ரமணி!''

''என்ன மாமி?''

''உன் அம்மாவுக்கு உன் மேலே அசாத்திய எரிச்சல்.''

''அவள் என்ன சொன்னு? அதையும் சொல்லிடுங்கோ.''

''அவ சொன்னபடி நீ கேக்கறதில்லேன்னு ரொம்பக் கொறைப்பட்டுண்டா. கல்யாணம் ஆனுல் எல்லாம் சரியாப் போயிடும்னு நான் சொன்னேன்.''

''எனக்கு என்ன பைத்தியமா பிடிச்சிருக்கு. கல்யாணமானதும் சரியாப் போக... அது சரி, அவ என்ன சொல்லி நான் கேட்கலேன்னு அவள் குறைப்பட்டுக்கறு?''

''எல்லாம் உன் கல்யாணம்தான். ரொம்பப் பிடிவாதமா உன் போக்கிலேயே நீ இருக்கியாம்.''

ரமணி ஒருசில நிமிடங்கள் யோசித்தான். இந்த ராஜம்மா வெகுளி. வெளுத்ததெல்லாம் பால் என்று நினைக்கிறவள். தாம்தூம் என்று பிறரை விரட்டும் கணவருக்கும், எல்லாவற்றையும் ஒரு பொழுதுபோக்காக எடுத்துக் கொள்ளும் ஹரிணிக்கும் ஈடு கொடுத்து இருவரையும் திருப்தி செய்வது தான் தன் வாழ்க்கையின் லட்சியம் என்று இருக்கிறவள். இவளிடம் மனம் திறந்து பேசித் தன் பிரச்னைக்கே ஒரு முடிவைத் தேடிக் கொண்டால் என்ன?

''மாமி! இப்ப உங்களுக்கு ஏதானும் அவசரமா வேலை இருக்கா?''

''நீதான் பார்க்கிறுயே, நான் எவ்வளவு மெதுவாப் பூத் தொடுக்கிறேன்னு... இன்னிக்கு நாங்க மூணு பேரும் பாண்டியன் ஹோட்டல்லே சாப்பிடப் போறேும். நீயும் வாயேன்...''

''நான் வரலே. என்ன விசேஷம்?''

மதுர நாயகி

பி.வி.ஆர்

''விசேஷம் ஒண்ணும் இல்லே. ஹரிணி சாப்பிடலாமேன்னு. இவர் சாப்பிட்டுத்தான் ஆகணும்னுர். நான் தலை ஆட்டினேன். அவ்வளவுதான்...''

''ஹரிணி சொன்னு, ஸீனியர் உங்களை அழைச்கண்டு கொடைக்கானலுக்குப் போயிடலாம்னு இருக்காராமே. உண்மையா?''

''ஆமாம். சம்பாதிச்சுச் சம்பாதிச்சு என்ன கண்டுது? பெங்களூரிலே ஒரு வீடு வாங்கிண்டு அங்கே போய் இருக்கலாமேன்னு நான் சொன்னேன். முடியாது. கொடைக்கானல்லேதான் இருக்கணும்னு அவர் சொன்னுர். ஆனல் இதெல்லாம் நடக்கணுமானு முதல்லே ஹரிணியின் கல்யாணம் முடியணும். நீதான் இன்னும் உன் அம்மாகிட்டே உன் பதிலைச் சொல்லலியே... நேத்துச் சாயங்காலம் இங்கு வந்து ஒரு குரல் அழுதாள்.... நான் சமாதானப்படுத்தி அனுப்பினேன்.''

''அப்படியா?''

''ஆமாம்.''

''ஹரிணி பத்து நாட்களாப் பிடி கொடுத்துப் பேசலே. தான் பிடிச்ச முசலுக்கு ஏழெட்டுக் கால்கள் இருக்குன்னு அடம் பிடிச்சா.... அப்புறம் அவ அப்பா அவ மண்டையிலே ஆணி அடிச்ச மாதிரி பதிய வைச்சார். ஹரிணி இப்ப ரெண்டு நாளா சந்தோஷமா இருக்கா. ஆனு, சாவித்திரி பாவம், ஒருத்தியாயிருந்து உன்னை எப்படிச் சமாளிப்பா?''

''இவ்வளவெல்லாம் நடந்திருக்கா?''

''இவ்வளவுதான் நடந்திருக்கு. நீ உன் அம்மாகிட்டே சரின்னு தலையாட்டினவுடனே எல்லாத்தையும் சட்டுப் புட்டுன்னு ஆரம்பிச்சிடுவோம்.... நாதசுரக்காரன், பந்தல் போடறவன், சமையற்காரன், முறுக்குச் சுத்தற கோமு எல்லோருக்கும் அட்வான்ஸ் கூடக் கொடுத்தாச்சு. நாள்தான் நிச்சயமாகலே.''

''நாள் நிச்சயமாகாமலே அட்வான்ஸ் கொடுத்தாரா ஸீனியர்?''

''எல்லாரும் அவாவா தொழில்லே பேர் போனவா.. அட்வான்ஸ் கொடுக்கலேன்னு வேறே எங்கேனும் ஒப்புத்துண்டுடுவாளே!''

விஷயம் நன்ருக முற்றி வெகு தூரம் முன்னேறி யிருக்கிறது என்பதை உணர்ந்தான் ரமணி.

''எனக்குத் தலை சுத்தறது.''

''ஏன் சுத்தணும்? சரி, மாட்டேன்னு ஒரே வார்த்தையிலே பதில் சொல்ல வேண்டியதுதானே? கல்யாணம் என்கிறது அவாவாளோட சொந்த விஷயம்னு விட்டுட்டா, பெத்தவாளும் மத்தவாளும் சிரமப்பட வேண்டியிருக்கு.''

ரமணி மௌனமாக நகர்ந்தான். மீண்டும் பிரச்னை அவனைக் குழப்பலாயிற்று. அன்று காலையில்தான் நீலா வந்து போயிருக்கிறாள். அவள் போனதிலிருந்து லாவண்யாவைப் பற்றியே சிந்தனை ஓடியிருக்கிறது. அதன் பின் இங்கே வந்ததும் ஹரிணி.

ரமணி என்ன செய்வான்?

ஸீனியருடைய அறையிலிருந்து கேஸ் கட்டை எடுத்துக் கொண்டு கீழே வந்தான்.

பதினென்றரை மணிக்கு உத்தமபாளையம் அப்பீலில் தன்னையே இழந்திருந்த அவனை ஹரிணி தட்டி எழுப்பினாள்.

''என்ன வேணும் ஹரிணி!''

''ஆபிஸில் யாருமில்லே, தெரியுமா?''

''என்ன?''

''அப்பா மாடிக்கு வந்தாச்சு. டைப்பிஸ்டு, குமாஸ்தா எல்லாரும் போயாச்சு. உங்களை 'டிஸ்டர்ப்' பண்ணப்படாதுன்னு மத்த ஜூனியர்கிட்டே அப்பா சொல்லியிருக்கார். அதான் அவர்களும் உங்ககிட்டே சொல்லாமலேயே போயிட்டா.''

''சரி, இப்ப நீ எதுக்கு என்னை 'டிஸ்டர்ப்' பண்ணினே!''

''கார் தயாரா யிருக்கு. நீங்கதான் ஓட்டப் போறேள்.''

''எங்கே போக?''

''பாண்டியன் ஹோட்டல்.''

''நான்தான் உன் அம்மா கிட்டே கார்த்தாலேயே வரலேன்னு சொன்னேனே?''

''தைரியமிருந்தால் எங்கிட்டேயும் அப்பா கிட்டேயும் சொல்லிப் பாருங்க... சரிசரி, குளியலறையிலே டவல், சோப் எல்லாம் இருக்கு. முகத்தைக் கழுவிண்டு சீக்கிரம் புறப்படுங்கள்!''

''ஹரிணி! ப்ளீஸ்...''

''நோ ரமணி... நீங்க வரலேன்னு அப்பாவுக்கு மகா கோபம் வரும்.... கம் ஆன்.''

''இந்தக் கேஸ் கட்டை இன்னொரு தரம் படிக்கணும், ஹரிணி.''

''எல்லாம் வந்து படிக்கலாம். அங்க பேருக்கு டேபிள் ரிசர்வ் பண்ணியாச்சு.''

''அஞ்சு பேரா?''

''ஆமாம். நாங்க மூணு பேர்... நீங்க ரெண்டு பேர்.''

''நாங்க ரெண்டு பேரா?''



''ஆமாம். சாவித்திரி அண்ட் ஹர் ஸன்... ஹோட்டல் போய்ச் சேர்ற வரைக்கும் சொல்லப் படாது. ஸர்ப்ரைஸா வைக்கணும்னு அப்பா சொன்னர். எனக்குத்தான் நாக்கிலே எதுவும் நிக்காதே!''

''அம்மாவும் வருளா?''

''சாவித்திரிதானே உங்க அம்மா பேரு... அப்படின்னு அவளும் வரா!''

''சரி. இனிமேல் வேறே வழி இல்லே...''

பாண்டியன் ஹோட்டலிலிருந்து எல்லாரும் திரும்பி வரும்போது மணி இரண்டரை. தனக்கு ஓர் அவசர வேலை இருக்கிறதென்று சாவித்திரி தன் வீட்டுக்குப் போக, ரமணி, ராமையா எல்லோரும் வீடு திரும்பினர்கள்.

அன்று காலை நினைத்தபடி பலராமன் வீட்டுக்குப் போக முடியவில்லையே என்பதையும் ரமணி மறந்தான்.

மூன்று மணியிலிருந்து மூன்றே முக்கால் வரை சாவித்திரி நிலைகொள்ளாமல் தவித்தாள். திடீரென்று மின்னலாகத் தோன்றிய யோசனையில் கார் டிரைவரைச் சிதாமணி வீட்டுக்கு அனுப்பி லாவண்யாவை உடனடியாக அழைத்து வரச் சொன்னது விவேகமான காரியமா என்று அவளுக்கே புரியவில்லை. ஒருவேளை லாவண்யா தன்னை உதாசீனப் படுத்தி வராமலே போய் விடுவாளோ என்ற பயமும் உண்டாகியது. ஆனல் பிரச்னைக்கு முடிவு காண முடியாமல் பரிதவிக்கும் பிள்ளை ரமணிக்கு அவள் உதவி செய்தாக வேண்டுமே? சாவித்திரி செய்யவில்லை யென்றல் ரமணிக்கு உலகத்தில் யார்தான் இருக்கிறர்கள்?

ரமணி இன்று ஓர் அட்வகேட்டாக, பிரபலமான ஒருவரிடம் ஜூனியராக இருக்கலாம். அவன் ஆயிரம் ஆங்கிலப் புத்தகங்கள் படித்திருக்கலாம். ஆனல் இன்னும் தனக்கு எது வேண்டும், எது கூடாது என்று பாகுபடுத்தித் தெரிந்து கொள்ளும் சக்தி வரவில்லை. சிறு வயதில் வயிறு என்னமோ செய்கிறது என்பானே தவிர, பசிக்கிறது என்று சொல்



லத் தெரியாது. எந்தப் பாண்டுக்கு எந்த ஷர்ட் பாங்காக இருக்கும் என்று சாவித்திரி தான் சொல்லிக் கொடுக்க வேண்டும். வக்கீலுக்குப் படிக்க வேண்டும் என்று பிடிவாதமாக இருந்தானே அப்போதுதான் சாவித்திரி, தனக்கு அப்படிப்பு சம்மதம் இல்லையாயினும், சந்தோஷப்பட்டாள். மகனாக, தானே யோசித்து நிர்ணயம் செய்து ஒன்றைத் தேர்ந்தெடுத்திருக்கிறானே என்று. ஆனால், இந்த சந்தோஷம் வெகு நாள் நீடிக்கவில்லை. வக்கீல் தொழிலை எந்தத் திசையில் செலுத்துவது என்று ரமணி குழம்பிப் போனான். சிவிலா, கிரிமினலா, அல்லது வரி சம்பந்தப்பட்ட வழக்குகளா? அவன் ஒரு முடிவை எடுப்பதற்குள் நல்ல வேளையாக ராமையா அவனை ஜூனியராக ஏற்றுக் கொண்டு விட்டார்.

இப்போதுள்ள பிரச்னை யெல்லாம் ரமணி லாவண்யாவை மறந்து விட வேண்டும் என்பதுதான்.

ரமணியின் மனம் என்ன என்று சாவித்திரிக்குப் புரியும். ஆனால் லாவண்யா என்ன நினைக்கிறாள் என்று தெரியாது.

சரியாக மூன்றே முக்கால் மணிக்குக் கார் திரும்பி வந்தது. பயமும் ஆர்வமும் மேலிட அவள் வாசல்புறத்து அறை ஜன்னல் வழியாகப் பார்த்தாள். லாவண்யா பின் ஸீட்டிலிருந்து இறங்கி, புடவையைச் சரி செய்து கொண்டே நடந்து முன்னேறினாள்.

சாவித்திரி ஒரு கணம் அயர்ந்து போனாள். லாவண்யாவை அவள் நான்கைந்து தடவை பார்த்திருக்கிறாள் என்றாலும் கவனித்ததில்லை. இப்போது அவளைக் கூர்ந்து கவனித்தபோது அவளுடைய அழகும், வசீகரமும் சாவித்திரியைத் திகைக்க வைத்தன. சாதாரணப் புடவையில், கழுத்தில் ஒரே செயினும், காதில் கவரிங் ஸ்டட்டுமாக இருக்கும் இப் பெண், பட்டுப் புடவையில் வைரமும் தங்கமுமாக வந்தால் எப்படி மின்னுவாள்?

அவள் பிள்ளை ரமணி ஒரு பரம ரசிகன் தான். சந்தேகமே யில்லை.

வாசற்புறத்து அறையிலிருந்து அவசரம் அவசரமாக ஹாலுக்கு வந்து லாவண்யாவைச் சந்தித்து, வரவேற்கத் தயாராக நின்றாள் சாவித்திரி.

''வாம்மா, லாவண்யா, ரொம்ப ஸாரி, உன்னை நான் 'டிஸ்டர்ப்' பண்ணி இங்கே வரவழைச்சதுக்கு.''

''இட் இஸ் ஆல் ரைட்...'' லாவண்யா ஹாலுக்குள் பிரவேசித்தாள்.

''மொதல்லே என்ன சாப்பிடறே சொல்லு. ஜில்லுன்னு ஜூஸ் இருக்கு. இல்லே சூடா காப்பி வேணும்னாலும் தரேன்.... சாய்ஸ் இஸ் யுவர்ஸ்!''

''ரெண்டுமே வேண்டாம்.''

''அம்மா எப்படி இருக்கா?''

''இருக்கா.''

''அப்பா?''

''அப்பாவும் இருக்கா.''

''கெம்டு வேலை உனக்குப் பிடிச்சிருக்கா?''

''எனக்குப்பிடித்திருக்கிறதோ இல்லையோ? அது என்னை நன்னாப் பிடிச்சுண்டிருக்கு.''

லாவண்யா சிரித்தாள். அச்சிரிப்பில் வெறுப்பின் ஒலியைச் சாவித்திரியால் உணர முடிந்தது.

''பாவம், உன் தங்கை நீலாவுக்கு இன்னும் வேலை கிடைக்கவில்லை.''

''எதுக்கு வரச் சொன்னீர்கள்?''

கேள்வியிலேயே லாவண்யா தன் பொறுமையின்மையைக் காட்டுகிறாள் என்று நினைத்தசாவித்திரி, ''சொல்றேன்'' என்றாள்.

லாவண்யா சோபாவில் உட்கார்ந்து சுற்றுமுற்றும் பார்த்தாள். பணக்காரக் களை சொட்டியது. வழு வழுவென்ற தரை. அதன் மீது விலை உயர்ந்த கம்பளம். இள நீலத்தில் சுவர்கள். ஒரு சுவரில் இரு பொம்மைகள். அசப்பில் மயில்களே நிற்கின்றனவோ என்று பிரமை தட்டியது.

ஒரு கடிகாரம். கிரீம் வெள்ளை நிறத்தில் பெண்டுலம் அசைய, இரு பக்கங்களிலும் சிவப்பு ராணுவ வீரர்கள் மூச்சைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தார்கள்.

லாவண்யா கண்கொட்டாமல் பார்த்தாள். நான்கு அடிக்கச் சில விநாடிகள் இருந்தன. திடீரென்று உயிர் பெற்றவர்களைப் போல, ராணுவ வீரர்கள் வலது கையைத் தூக்கினார்கள். கடிகாரம் அடிக்கும் ஒவ்வொரு மணிக்கும் ஒவ்வொரு சல்யூட்.

நான்கு அடித்தது. மீண்டும் ராணுவ வீரர்கள் மூச்சைப் பிடித்துக் கொண்டு நிற்க ஆரம்பித்தார்கள்.

''ஜப்பான்லே வாங்கினது. நன்னாயிருக்கா?'' என்று கேட்டாள் சாவித்திரி.

கடிகாரத்தில் மனத்தை இழந்திருந்தாலும், லாவண்யா இந்தத் திடீர்க் கேள்வியால் தாக்கப்படவில்லை.

''பணம் இருந்தால் எது வேணும்னாலும் கிடைக்கும். இந்தப் பொம்மை ஸோல்ஜர்களுக்குப் பதிலா நிஜமான ஆட்களையே அமர்த்தி மணி அடிக்கச் சொல்லலாம்.''

''கரெக்ட்... அந்தப் பணம் இருந்தால் உன் அப்பா ஆபரேஷனை அமெரிக்காவில், அவர் ஆசைப்பட்டபடி நடத்தலாம் இல்லியோ?''

சாவித்திரி தன் ஏழைமையைக் குத்திக் காட்டுகிறாளோ என்று ஒரு கணம் ஆத்திரப்பட்டாள் லாவண்யா. ஆனால் சாவித்திரியின் தொடர்ந்த பேச்சு ஆத்திரத்தைப் போக்கியது.

''என்னிக்கு இது விஷயமா ரமணி பேச்சு எடுத்தானோ, அன்னிக்கே நான் தீவிரமாகச் செயல்பட ஆரம்பிச்சேன். எங்க லேடீஸ் கிளப், லயன்ஸ் கிளப், ரோட்டரி கிளப் எல்லாம் பார்த்தேன்...''

''தாங்க்ஸ். எதுக்கு என்னைச் சொல்லி அனுப்பினீர்கள்?''

''சொல்றேன்'' என்றாள் சாவித்திரி.

(தொடரும்)



உலகிலேயே கிரிக்கெட் ஆட்டத்தில் நிறைய '0' ரன்கள் (டக்) அடித்தவர்கள் யார்? நமது பேடியும் (19 டக் – 82 இன்னிங்க்ஸ்) சந்திரசேகரும்தான் (19 டக்–64 இன்னிங்க்ஸ்).

—கே. ஆர். - ஸ்போர்ட்ஸ் வீக்



வாரீர் புதுமை தவழ்ந்திட.
Liril
THE FRESHNESS SOAP
Liril
பார்த்தறியாப் புதுமை. பரவசக் கிளுகிளுப்பு. லிரில். அலையெறியும் தளதள பச்சை. அதன் நயமோ குளுகுளு எலுமிச்சை...புதுக் குமரியாய் உங்களைப் பூரித்தெழ வைக்கும்.
லிரில்
புத்துணர்வு சோப்
மணம்குளிரும் எலுமிச்சைப் புத்துணர்ச்சி வெள்ளம்.
லின்டாஸ்-LR.27-203 TM
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

தெலுங்குக் கதை

கசப்பும் ஒரு இனிப்பே!

இச்சாபுரம் ஜகந்நாத ராவ்
தமிழாக்கம்: எஸ்.வி.எஸ்



விக்டோரியா நினைவுக் கூடத்தின் புல் தரையில் உட்கார்ந்து கொஞ்ச தூரத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறு பெண்களையும் அவர்களுக்குச் சமமாக விளையாடி மகிழ்ந்து கொண்டிருந்த அந்த யுவதியையும் மீண்டும் ஒரு முறை பார்த்த சுந்தரம் ஒரு பெருமூச்சு விட்டு விட்டு முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான்.

அவர்கள் விளையாடிக் கொண்டிருந்த பந்து அவன் பக்கம் வரவே, அதை எடுக்க ஒரு சிறுமி அவன் அருகில் வந்தாள். வந்து பயந்த வண்ணம் நின்று திரும்பித் தன் தாயைப் பார்த்தாள்.

சுந்தரம் மெல்ல அந்தப் பந்தைச் சிறுமியின் பக்கம் தள்ளி விட்டான். அதை அவள் எடுத்துக் கொண்டு ஓடிப்போவதைப் பார்த்து உள்ளத்தில் ஒரு துயரத்துடன் சிரித்துக் கொண்டான். வழக்கம்போல் அந்தச் சிறுமியின் தந்தை இன்னும் பத்து நிமிடங்களில் வந்து விடுவார். அவரைப் பார்க்கும்போதெல்லாம் ''என்ன அதிர்ஷ்டசாலி!'' என்று எண்ணிக் கொள்வான்.

ஏனெனில் இன்னும் அவன் தனிக்கட்டை. மனைவி மக்கள் என்பதல்லாமல் யந்திரம் போல் வாழ்நாள் ஓடிக் கொண்டிருப்பதை நினைக்கையில் அவனுக்குப் பெரும் வேதனையாகவே இருந்தது.

பணங்காசைப் பற்றிய மட்டில் அவனுக்கு ஒரு குறையுமில்லை. நல்ல சம்பளம் வருகிறது. அவனுக்கு உறவினர் என்றிருப்பது தமையன் ஒருவர்தான். தாய் தந்தையர் என்றோ மறைந்து விட்டனர். தமையனும் அவன் உதவியை எதிர்பார்க்கும் நிலையில் இல்லை. நிலம், வீடு எல்லாம் அவரேதான் அனுபவித்து வருகிறார். ஆனால் தனக்கு இல்லாத கடமைகள் அவருக்கு இருக்கின்றன.—குழந்தைகள், சம்சாரம், எதிர்பாராத செலவுகள்—இப்படி என்னவெல்லாமோ! அவனுக்கு அத்தகைய தொல்லைகள் ஏதுமில்லை.

இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று அவ்வப்போது எண்ணிக் கொள்வான் சுந்தரம்.

சுந்தரம் நெடுமூச்சு விட்டுக் கொண்டே தன்னைச் சுற்றிப் பார்த்தான்.

பலபேர் மைதானத்தில் இங்கும் அங்குமாகத் திரிந்து கொண்டிருந்தார்கள்.

எல்லோரையும் ஏதோ கருத்தில்லாமல் பார்த்துக் கொண்டிருந்த சுந்தரத்தின் கண்கள் திடீரென்று ஒருவர் மேல் பட்டதும் நின்று போயின.

சரீரத்தில் மின்சாரம் பாய்ந்தாற் போல் சில கணங்கள் அவன் பிரமித்துப் போனான்.

''இருக்காது... இருக்க முடியாது!''

கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தவன், 'இது சுந்தரியாக இருக்க முடியாது. வேறு யாரோ?' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். என்றாலும் அவன் பார்வை அவள் இருந்த பக்கமே சென்றது. அவள் சுந்தரியேதான் என்ற உறுதியும் ஏற்பட்டது.

அவளைப் பார்த்து எத்தனை ஆண்டுகள் ஆகிவிட்டன? இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு அவளைப் பார்க்கும்போது ஒரு நிறைவு, ஒரு பரிபூர்ணத்துவம் காணப்படுகிறது. அந்நாட்களில் காணக் கிடைக்காத பொலிவு இப்பொழுது இவ்வளவு தூரத்திலிருந்தும் எவ்வளவு நன்றாகத் தெரிகிறது!

இத்தனை ஆண்டுகளாக ஒரு நினைவைக் கருதி, தான் செய்த ஓர் அநியாயத்துக்காக, தான் மடத்தனமாக நடந்து கொண்டதற்குத் தண்டனையாக, தான் தன்னந்தனியனாக வாழ்க்கை நடத்தி விடுவது என்று அவன் உறுதி பூண்டிருந்தான். எல்லாம் அவளுக்காகத்தான். எப்படி அவளை அவனால் மறக்க முடியும்?

அவள் யாருடனோ பேசிக் கொண்டிருந்தாள். அவர் ஒருகால் அவள் கணவரோ!

ஆறு ஆண்டுகளுக்கு முன்னால் அவள் கடைசியாக அவனிடம் கூறிய வார்த்தைகள் அவன் ஞாபகத்துக்கு வந்தன: ''போ, சுந்தரம்! உன் வேண்டுகோளின்படி என் நினைவு உனக்கு வேண்டுமானால் அதனோடேயே வாழ்ந்து கொள். ஆனால் என் வாழ்க்கையில் மட்டும் மீண்டும் குறுக்கிடாதே. தயவுசெய்து இந்த உதவி செய்!'' என்றாள்.

இன்றைக்கும் மிகவும் தாழ்ந்த குரலில் அவள் கூறிய அந்த வார்த்தைகள் சுந்தரத்துக்கு எவ்வளவோ தெளிவாக நினைவில் இருந்தன.

அவள் இருந்த பக்கமாகப் போக இருந்த சுந்தரம் வேறொரு பக்கம் திரும்பி அடியெடுத்து வைத்தான். அவ்விடத்தை விட்டு அகன்றுவிட வேண்டும். சுந்தரியின் கண்களில் தான் தவறிக்கூடப் பட்டுவிடக் கூடாது என்று நிச்சயித்துக் கொண்டு இரண்டடி எடுத்து வைத்தவன், தான் செய்த தீர்மானத்தை மாற்றிக் கொண்டு ஒரு மரத்தின்

மறைவில் உட்கார்ந்து சுந்தரி இருந்த திசையைப் பார்த்தான். அவளுக்கு அவன் இருப்பது தெரியாது என்றாலும், அவள் அவனுக்கு நன்றாகத் தெரிந்தாள்.

அப்போது அவன் பி.காம் முடித்துவிட்டு, வீட்டுக்கு வந்திருந்தான். சொந்த ஊரான ராமாபுரத்தில் அவனுக்கு இருந்த சிநேகிதர்கள் மிகக் குறைவு. 'பரீட்சை முடிவு என்ன ஆகுமோ? பாஸ் ஆகுமோ, ஆகாதோ? பாஸ் ஆனாலும் வேலை கிடைக்குமோ, கிடைக்காதோ? வாழ்க்கைப் படகு எப்படிப் போகுமோ?' இப்படி யெல்லாம் யோசித்த வண்ணம் அவன் நாட்களை மெள்ளக் கழித்து வந்தான்.

சுந்தரி கண்ணில் பட்ட பிறகு எல்லாமே மாறிவிட்டது.

பால்ய சிநேகிதியான சுந்தரி அப்பொழுது பதினாறு வயதுப் பருவப் பெண். அன்று சாயந்திரம் அவளை ஆற்றங்கரைத் தோட்டத்தில் பார்க்கும்வரை அவனுக்கு அவளைப் பற்றிய நினைவே இல்லை.

அவன் அன்று மாலை தோட்டத்தின் வழியாகச் சென்று ஆற்றங் கரையை அடைந்து ஓரமாக உட்கார்ந்து தன் வாழ்க்கையைப் பற்றியும், நங்கூரம் பாய்ச்சினாற்போல் நகராமல் நகரும் நாட்களைக் குறித்தும் ஏதேதோ எண்ணிக் கொண்டிருந்தான். காலையிலிருந்தே வானம் மேகம் கவிந்து மழை பொழிவோமா வேண்டாமா என்று தயங்கிக் கொண்டிருந்தது. இப்பொழுது திடீர் என்று மழை பிடித்துக் கொண்டு விட்டது.

ஆற்றுக்கு அக்கரையில் இருந்த ஊருக்குப் போய்விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த சுந்தரி மழைக்காக ஒதுங்க அவன் உட்கார்ந்திருந்த மரத்தடிக்கு வந்தாள்.

அவனைப் பார்த்தவள், முகத்தில் புன்னகையைத் தேக்கி, ''நீயா சுந்தரம்? யாரோ என்று நினைத்துப் பயந்து போனேன்'' என்றாள்.

அவளை அடையாளம் புரிந்து கொண்ட சுந்தரம், ''சுந்தரி!'' என்றான் ஆச்சரியத்தோடு.

''ஆமாம். நீ மூன்றாம் பாரம் படிக்கும் போது நான் ஐந்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன் அல்லவா? அப்புறம் விசாகப்பட்டினம் போய்விட்டேன். நீ பி.ஏ. பாஸ் செய்துவிட்டாயோ?''

''இன்னும் இல்லை. பரீட்சை எழுதியிருக்கிறேன். பி. காம்.''

''பாஸ் ஆகிவிடுவாய்.''

''நீ?''


''மெட்ரிக் பாஸ் செய்துவிட்டுச் சும்மா தான் இருக்கிறேன்.''

''ஏன்?''

''போதாதா? கல்லூரிப் படிப்பு பெண்களுக்கு எதற்கு?''

அவன் சிரித்தான்.

''அதுமட்டுமல்ல. பாட்டி காலமானவுடன் இங்கு வந்துவிட்டேன். இங்கு பக்கத்தில் கல்லூரி இல்லை. கல்லூரிப் படிப்புப் படிக்காததற்கு இதுவும் ஒரு காரணம். அது போகட்டும்... உன்னைப் பற்றிச் சொல்லு'' என்றாள் சுந்தரி.





நாங்கள் எங்களது தொழிற்சாலை சிற்றுண்டி நிலையத்தில் மதியம் உணவருந்திக் கொண்டு இருந்தோம் சென்ற மாதம். இலைகள் போடப் பட்டதும் பொறுப்பாளர் தம் உதவியாளரிடம், "இதோ பாருப்பா, இரட்டை இலைக்கெல்லாம் தயிர் கப் வை" என்றார். தூக்கிவாரிப் போட்டது. "இதென்னப்பா அரசியல் பாகுபாடு எல்லாம் காண்டீனில்?" என ஒருவர் கூவினார். அப்போது அவர், "இல்லை சார், இரட்டை இலை (நுனி இலை) போடப்பட்டிருப்பவர்கள் எல்லாம் முழுச் சாப்பாடு டோக்கன் வாங்கியவர்கள், ஒற்றை ஏடு போடப் பட்டிருப்பவர்கள் ஜனதா சாப்பாடு. 'சட்'டென்று புரியவே அப்படி கூறினேன்!" என்றதும் எல்லோருமே சிரித்துவிட்டோம்.

- மேட்டூர் ஸ்ரீதரன்

இதற்குள் மழை வலுத்து விட்டது. ஓடிப் போய்த் தோட்டத்தில் காலியாக இருந்த குடிசையில் ஒதுங்கினார்கள். அங்கு வெகு நேரம் அவர்கள் இருவரும் எத்தனையோ பேசிக் கொண்டார்கள்.

இன்று இங்கே அமர்ந்து அந்த மழை கொட்டிய மாலையையும், அவளோடு பேசிக் கொண்டிருந்ததையும் நினைவுபடுத்திப் பார்த்துக் கொண்டால் அது ஒரு கனவாகத் தோன்றியது.

அன்று சிறிது நேரம் கழித்து மழை நின்று விட்டது. அப்பொழுது 'ஏனடா நின்றது!' என்றுதான் அவ்விருவரும் நினைத்தனர்.

அதேபோல் 'வீட்டுக்குப் போக வேண்டுமே' என்று விருப்பமில்லாமலே இருவரும் புறப்பட்டனர்.

அதற்குப் பிறகு மூன்று மாதங்கள் மூன்று நிமிஷங்களாக ஓடி விட்டன. அவன் பரீட்சை முடிவு தெரிந்து, மேற்கொண்டு பி. ஏ. படிப்புக்குக் கல்கத்தா போவது என்று தீர்மானமாயிற்று.

அன்று மாலை வழக்கம்போல் தோட்டத்துக்குச் சென்று சுந்தரியை எதிர்நோக்கியவாறே இன்ப நினைவுகளில் திளைத்தான். அவள் வருவது தாமதமாக ஆக அவன் ஆர்வம் அதிகமாகி வந்தது. அவளோடு அவன் விளையாடும் விளையாட்டுக்களில் இதுவும் ஒன்று என நினைத்து மனத்துக்குள் சிரித்துக் கொண்டான்.

மாலை நேரம் முடிந்து சந்தியும் கரைந்து இருள் கவியத் தொடங்கி விட்டது. சுந்தரியைக் காணவில்லை.

அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. இத்தனை நாட்களில் அவள் அவனை ஏமாற்றுவது இதுவே முதல் தடவை. அவனுக்குச் சொல்ல முடியாத வேதனை ஏற்பட்டது. இந்த அழகிய சூழ்நிலையில் தனக்கு எவ்வளவோ இன்பத்தைக் கொடுக்க வேண்டியது போக இனந் தெரியாத துன்பத்தைத் தருகிறதே என்று நினைத்தான். அவள் தன்னுடன் கழித்த மணிக் கணக்கான நேரங்கள் எல்லாம் நிமிஷம் நிமிஷமாக அவன் நினைவுக்கு வந்து வேதனைப் படுத்தியது.

கடைசியில், வீட்டுக்குப் போகும் வழியில் அவளைப் பார்த்து விட்டுப் போகலாம் என்று நினைத்துக் கொண்டான். அவன் அந்தத் தோட்டத்தை விட்டு வெளியேறியபோது, எதிரில் தன் அண்ணன் வருவதைப் பார்த்தான். அவனுடன் இன்னும் இருவர் கையில் தடியும் கம்புமாக வந்து கொண்டிருந்தனர்.

எவ்வித முன்னுரையுமின்றி அவன் தமையன், "சுந்தரம், வீட்டுக்கு நட.... சாயந்திரத்திலிருந்து இங்கேதான் இருக்கிறாயா?" என்று கேட்டான்.

"ஆமாம்... என்ன சமாசாரம்?" என்று கேட்டான் சுந்தரம்.

"சுந்தரியை நீ தவறான வழியில் இட்டுச் செல்வதாக ஊர் பேசுகிறது."

"நானா?.... என்னது?"

"தோட்டத்தில் உங்கள் இருவரையும் தனிமையில் ரொம்பப் பேர் பார்த்தார்களாம். உன்னை அவர்கள் கறுவிக் கொண்டிருக்கிறார்கள்...."

சுந்தரம் சிலையாகிப் போனான்.

வம்பு தும்பில் மாட்டிக் கொள்ளக் கூடாது என்று எண்ணிய அண்ணனால் அன்றிரவே அவன் வலுக்கட்டாயமாகக் கல்கத்தாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டான். அப்புறம் மூன்றாண்டுகள் அவன் ராமாபுரத்துக்கு வரவில்லை!

அதற்குப் பிறகு அண்ணனின் உடல்நிலை சரியில்லை என்று பார்த்துப் போக வந்தவன் நான்கு நாட்கள் தங்கியிருந்தான். எதேச்சையாகச் சுந்தரியைப் பற்றிப் பேச்சு வந்தது. அவளுக்குச் சென்ற ஆண்டு திருமணமாயிற்று என்றும், அவளுடைய கணவருக்கு விசாகப்பட்டினத்தில் வேலை என்றும் அவர்களுக்குத் தெரிந்த ராமப்பிரம்மம் குடியிருக்கும் வீட்டின் கீழ் போர்ஷனில்தான் அவர்கள் இருக்கிறார்கள் என்பதும் தெரிய வந்தது.

இந்த மூன்று ஆண்டுகளும் சுந்தரத்துக்குச் சுந்தரியைப் பற்றி ஒரு குறை. தன்னால் செய்யக் கூடிய ஏதோ ஒன்றினை அவன் செய்யத் தவறிவிட்டான் என்ற ஒரு தாபம். அனாவசியமாக அவள் தனக்கு ஓர் அபவாதத்தை ஏற்படுத்தி விட்டாள் என்றே அவன் எண்ணினான். ஆயினும் இது விஷயத்தில் தன் மீதும் ஒரு குறை இருப்பதாக உணர்ந்தான். தான் ஓர் ஆண்பிள்ளையாக, ஒரு லட்சிய புருஷனாக நடந்து கொள்ளவில்லை என்று அவனுக்குப் பட்டது. ஒரு வகையில் உண்மையை விளங்கிக்கொள்ளாமல் அவளைத் தானே விரக்தியோடு கைவிட்டு விட்டதாகவும் அவனுக்குத் தோன்றியது. இந்த ஆண்டுகளில் அவளை நினைத்து அவளுக்காக அவன் நெடுமூச்சு விடாத நாள் இல்லை. அதையே அவளுக்குத் தான் இழைத்த அநீதிக்குப் பரிகாரம் செய்ததாகவும் ஒரோரு சமயம் நினைத்துக் கொள்வான். இவ்விஷயம் கேள்விப்பட்ட பின் ஒரு முறை அவளைப் பார்த்துத் தன் வேதனையைச் சொல்லி அவள் மன வேதனையைப் புரிந்து கொண்டால் தனது கடமையை நிறைவேற்றியதாகுமோ என்று அவனுக்குத் தோன்றியது. அவளுக்குத் தன் மீது அளவு கடந்த காதலுண்டு என்பதும், தன்னையே கணவனாக அடைய வேண்டுமென்று கனவு கண்டு அவள் ஆசாபங்கம் அடைந்து விட்டவள் என்பதும் அவனுக்குத் தெரியும். பார்க்கப் போனால் அவளைக் கண்ணீரும் கம்பலையுமாகச் செய்து விட்டு

ஓடிப்போனவன் அவன்தானே? ஆகவே, அவளை ஒரு முறை சந்தித்து மன்னிப்புக் கோர வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான்.

அவன் விசாகப்பட்டினம் சென்றான். பெட்டி படுக்கையை ரயில்வே ஸ்டேஷனிலிருந்த 'கிளோக் ரூமி'ல் வைத்தான். ஒரு விதக் கஷ்டமுமில்லாமல் வெகு சுலபமாகச் சுந்தரியின் வீட்டைக் கண்டுபிடித்தான். அவள் வீட்டின் கதவைத் தட்டிய போது அவன் இதயம் படபடவென்று பலமாக அடித்துக் கொண்டது.

சுந்தரி கதவைத் திறந்தாள். அவனைப் பார்த்ததும் பிரமை பிடித்தவள் போல் நின்று விட்டாள்.

''நீங்களா?'' அவள் வாயிலிருந்து அந்தச் சொல் எவ்வளவு சிரமப்பட்டு வந்தது?

அவன் அவளையே வைத்த விழி வாங்காமல் பார்த்த வண்ணம் நின்றான்.

''வீடு எப்படித் தெரிந்தது?''

''தெரிந்து கொண்டேன்.''

மீண்டும் அமைதி நிலவியது. அவள் அவனை வீட்டுக்குள் அழைக்கவில்லை. பாதிக் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு வழியில் குறுக்காக நின்று கொண்டாள்.

''உன்னோடு சிறிது நேரம் பேச வேண்டும்.''

''வாருங்கள்.'' தயக்கத்தோடு அழைத்தாள்.

அவன் உள்ளே சென்று உட்கார்ந்தான். அவன் இதயம் அடித்துக் கொள்வது சற்றுக் குறைந்தாற் போல் தோன்றியதே தவிர, இன்னும் வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. அந்த அறையை ஒரு முறை நோட்டம் விட்டான். ஸோபா ஸெட், ரேடியோ, புத்தக அலமாரி....

சுந்தரி நின்று கொண்டே கேள்விக் குறியில் அவனைப் பார்த்தாள்.

''உன்னை ஒரு தடவை பார்க்க வேண்டும் போல் தோன்றியது!'' என்றான் அவன் வாய் குழறியபடி.

''அப்படியா?'' அவள் குரலில் விஷமத்தனம் கொப்பளித்தது.

''அப்போது திடீரென்று கல்கத்தாவுக்குப் புறப்பட்டுப் போகும்படி ஆகிவிட்டது. நீ என்னைத் தவறாகப் புரிந்து கொண்டிருப்பாய்.''

அவன் ஒரு சிறு புன்னகை உதிர்த்தான்.

''தவறாகப் புரிந்து கொள்வதும் சரியாகப் புரிந்து கொள்வதும் அத்தகைய சூழ்நிலையில் ஒன்றே!'' அழகாக அன்றைய நிலையை இன்று படம் பிடித்துக் காட்டினான் அவன்.

''உன்னை உண்மையிலேயே காதலித்தேன். மோசம் செய்ய வேண்டு மென்றோ, இப்படி நேருமென்றோ நான் சற்றும் நினைக்கவில்லை.... பாவம், உனக்குத்தான் தொல்லை!''

''எனக்கு ஒரு தொல்லையுமில்லை. என்றாலும் நீங்கள் இப்போது இங்கு வந்தது ஒரு தொல்லைதான். எல்லாரையும் போல் அவருக்கும் சந்தேகம் இருக்கிறாற்போலத் தெரிகிறது....''

''அப்படியானால்....''

அவன் பேசி முடிக்கு முன் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. சுந்தரி ஒரு கணம் முகத்தில் பயம், ஆச்சரியம் எல்லாம் கலந்த சித்திரப் பாவையாக, அவன் இதுவரையில் பார்த்திராத பாவையாக நின்று விட்டாள்.

''என்ன காரியம் செய்து விட்டீர்கள், பாருங்கள்!'' என்று சொல்கிறாற்போல் அவன் முகத்தை ஒரு முறை பார்த்துவிட்டுக் கதவைத் திறந்து சற்றுப் பின்வாங்கி நின்றாள்.

உள்ளே வந்தவர், அவனைப் பார்த்து விட்டுச் சற்று நின்று 'யார் இவர்?' என்று கேட்கிறாற்போல் சுந்தரியை நோக்கினார்.

''இவர் சுந்தரம்... எங்கள்...''

அவள் முடிப்பதற்குள்ளேயே குறுக்கிட்டு, ''எல்லாம் எனக்குத் தெரியும். அவரோடு பேசிவிட்டு உள்ளே வா!'' என்று கூறிச் சுந்தரத்தோடு பேசாமலேயே உள்ளே போய் விட்டார்.

சுந்தரம், ''ஸாரி... நான் வருகிறேன்'' என்று சொல்லி எழுந்தான்.

''போய் வா! ஆனால் நீ என்னமோ காதலித்தாய் என்றும், நான் உனக்காகக் கண்ணீர் விட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறேன் என்றும் எண்ணிக் கொள்ளாதே. உன் காதல் என்மீதல்ல... அது ஒரு விளையாட்டு... ரோமான்ஸ்...'' அவள் மெல்லிய குரலில் கூறினாள்.

சுந்தரம் பதில் சொல்லு முன், ''நீ ஒப்புக் கொள்ள மாட்டாய். எனக்குத் தெரியும்... உனக்கு வேண்டியது ஒரு நினைவு. போ, சுந்தரம். நீ கோரியபடி என் நினைவு வேண்டுமானால், என் நினைவோடேயே வாழ்ந்துவிடு. ஆனால் மீண்டும் என் வாழ்க்கையில் குறுக்கிடாதே. தயவுசெய்து இந்த உதவி செய்'' என்று கூறிக் கதவைச் சாத்தினாள். அந்த வார்த்தைகளை ஏதோ ரகசியம் சொல்வது போல் சன்னக் குரலில் கூறினாலும் அவனுக்குப் பலத்த குரலில் கேட்டாற் போலிருந்தது.

அவன் படியிறங்கித் தெருவுக்கு வந்து ரயிலடியை நோக்கிப் புறப்படும் வரையில் நடந்ததொன்றும் புரியவில்லை. அதன் பிறகுதான் அவள் வாழ்க்கையில் இரண்டாம் முறையாகக் குறுக்கிட்டுப் பெரும் தீம்பை விளைவித்து விட்டதாக எண்ணிக் கொண்டான். போதாதற்கு அவர் ஒரு சந்தேகப் பிராணி என்று வேறு சொல்லிவிட்டாள்!

இந்தத் துயரத்தை விடச் சுந்தரி கூறிய மொழிகளும், அவள் விடுத்த வேண்டுகோளும் அவனுக்கு அதிக வேதனையை உண்டாக்கின.

அவன் ஸ்டேஷனை அடைந்து நாலு மணி நேரத்துக்குப் பிறகு வர இருந்த ஹௌரா மெயிலுக்காகக் காத்திருந்தான். பெஜவாடா பக்கம் போகும் வண்டி ஒன்று இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு வந்தது.

வண்டி புறப்படும் சமயத்தில் அவசரம் அவசரமாகச் சுந்தரி வருவதைப் பார்த்தான் சுந்தரம். இந்தச் சொற்ப நேரத்தில் அவள் எவ்வளவு மாறிப் போயிருந்தாள்? அவள் கண்களையும் முகத்தையும் கண நேரம்



அடி உதை நிறைய வாங்கும் வாய்ப்பும் அவற்றைத் தாங்கும் உடலுறுதியும் உள்ளவர்கள் யார் என்று அறிய பிரேஸிலில் ஒரு 'சர்வே' நடைபெற்றது. அந்த சர்வேயின் முடிவு: ஃபுட்பால் அம்பயர்களும், கல்யாணத் தரகர்களும்!

ஆதாரம்: ஆன்லுக்கர் — ராணிமைந்தன்



தேர்தல் 'சிப்ஸ்'!

○ கேரளத்திலுள்ள 'பாலுசேரி' தொகுதியில் ஒரு 'பூத்'தில் காட்டிலாகா அதிகாரி ஒருவர் தேர்தல் அதிகாரியாக இருந்தார். திடீரென்று இவருக்கும் பைத்தியம் (பதவிப் பைத்தியம் அல்ல) பிடித்து விடவே இவர் மாற்றப்பட்டார்!

○ புகழ்பெற்ற 'டால்' ஏரியில் (காஷ்மீரில்) உள்ள படகு வீடுகளிலுள்ளவர்கள் வாக்களிப்பதற்காக ஏரியின் நடுவிலேயே ஒரு வாக்குச் சாவடி அமைக்கப் பட்டது!

○ மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த 'ஜவத் மால்' தொகுதியிலுள்ள இரு வாக்குச் சாவடிகள் 100 சதவீதம் வாக்குப் பதிவு பெற்றது. காரணம் இச் சாவடிகளில் உள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை ஒன்று, இரண்டு!

○ கொச்சிக்கு அருகே உள்ள 'அங்கமாலி' என்ற ஊரின் வாக்குச் சாவடி ஒன்றிற்கு வயதான ஒருவர் வாக்களிக்க வந்தார். இவர் முதலில் சட்டசபைக்கான வாக்கை அளித்துவிட்டார். ஆனால் பார்லிமெண்டுக்கான வாக்குச் சீட்டை வாங்கியதும் திடீரென்று இவர் உயிர் பிரிந்தது! ஜனநாயகத்துக்காக உயிரை ஈந்தவர்!

○ வண்ணாரப்பேட்டை தொகுதியில் வாக்குச் சாவடி அருகில் குழந்தைகள் பராமரிப்பு நிலையம் ஆரம்பித்திருந்தார்கள். எதற்கு? குழந்தைகளுடன் வரும் தாய்மார்கள் குழந்தையை அதில் விட்டுவிட்டு வோட்டு போடுவதற்காக!

○ பம்பாயில் 'பொரிவில்' பகுதியில் குஷ்டரோகிகளுக்காக மட்டும் தனியாக ஒரு வாக்குச் சாவடி அமைக்கப்பட்டிருந்தது!

- சம்பத் குமாரி

ஆதாரம்: டைம்ஸ் ஆஃப் இந்தியா

பார்த்ததிலேயே அவள் அழுதிருக்கிறாள், வண்டியைப் பிடிப்பதற்காக அழுகையைச் சிரமப்பட்டு நிறுத்திக் கொண்டு வந்திருக்கிறாள் என்று தெரிந்தது.

அவளுக்குப் பின்னால், கையில் ஒரு சூட்கேஸையும், பையையும் எடுத்துக்கொண்டு அவர் வந்து கொண்டிருந்தார். ரயில் புறப்பட இன்னும் அரை நிமிஷம்கூட இல்லை. அவர்கள் இருவரும் அவசரம் அவசரமாக ஒரு பெட்டியில் ஏறிக் கொண்டார்கள். வண்டியும் புறப்பட்டது.

சுந்தரம் என்ன நடந்திருக்கும் என்று ஊகித்தான். இரண்டாவது முறையாகச் சுந்தரியின் வாழ்க்கை தன்னால் பாழ்பட்டு விட்டது என்பது புரிந்தது. துரதிர்ஷ்டமென அவளைத் தேடி வந்து அவளுக்கு இருக்கும் துன்பங்கள் போதாவென்று அவளுக்கும் அவள் கணவனுக்குமிடையே அவன் சந்தேகத்தைக் கிளப்பி விட்டான் என்பதுதானே இதன் பொருள்? அவன் செயலுக்கு இவ்வளவு சீக்கிரம் பலனா?

அந்தக் கணத்திலேயே அவன் ஒரு பயங்கரப் பிரதிக்ஞை செய்து கொண்டான். தன் மீதியுள்ள வாழ்க்கையைச் சுந்தரிக்காகத் தியாகம் செய்வதுதான் அந்தப் பிரதிக்ஞை. 'தனக்கு இனி கல்யாணம், குடும்ப சுகம் என்பவை கிடையாது.' அன்று அவள் மேல் கொண்ட காதலுக்கு இன்று அவன் அளிக்கும் காணிக்கையாக இப்படி உறுதி எடுத்துக் கொண்டான்.

அந்தப் பிரதிக்ஞையை இன்றளவும் அவன் போற்றிக் காப்பாற்றி வந்திருக்கிறான்.

சுந்தரியைப் பார்த்த மாத்திரத்தில் அவனுக்கு அவ்வளவும் மீண்டும் ஒரு முறை நினைவு வந்தன.

அவள் சிறிது தொலைவில் உட்கார்ந்திருக்கிறாள். அவளுக்கு அருகில் அவள் கணவர் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறார். பக்கத்தில் சின்னஞ் சிறு பாலகன் விளையாடிக் கொண்டிருக்கிறான்.

சுந்தரம் எழுந்து நின்றான், இந்த இடத்தை விட்டு உடனே போய்விட வேண்டும் என்று! ஆனால் அவனால் மேலே அடி எடுத்து வைக்க முடியவில்லை. தன் வாழ்க்கை நாடகத்தில் அவ்வளவு முக்கியமான அங்கம் வகித்த சுந்தரி அவ்வளவு அருகில் இருக்கையில் அவளை விட்டு விட்டு எப்படி அவனால் போக முடியும்? குறைந்த பட்சம் ஒரு நிமிஷமாவது அவளுடன் பேசிவிட்டுப் போக வேண்டாமா?

ஆம், அவளுடன் 'பேச மாட்டேன்' என்று அவன் ஒன்றும் சத்தியம் செய்யவில்லையே! அவன் மரத்தின் மேல் சாய்ந்து கொண்டு அவளைப் பார்த்தவாறு ஒரு நிமிஷம் நின்றான்.

அவர் அவளிடம் ஏதோ சொல்லிவிட்டு, குழந்தையை எடுத்துக் கொண்டு எங்கேயோ போகலானார். அவளும் எழுந்து நின்றாள். ஆனால் அவர் ஏதோ சொல்லி அவளை அங்கேயே விட்டு விட்டுப் போனார். அவள் உட்கார்ந்தாள்.

தெய்வமும் மனிதனும் கலந்து தனது இதய பூர்வமான பிரார்த்தனைக்குச் செவி சாய்த்து இந்தச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள் என்று நினைத்தான் சுந்தரம். அவள் இருக்கும் இடம் நோக்கி வேகமாக நடந்தான்.

மீண்டும் அவள் வாழ்க்கையில் துயரத்தை ஏற்படுத்தும் வாய்ப்பு உண்டாகி விடுமோ என்ற எண்ணம் அவனை ஒரு கணம் தடுத்து நிறுத்தியது. அந்த எண்ணத்தைத் தொடர்ந்து ஒரு முடிவுக்கு வரு முன் அவன் கால்கள் அவனை அவள் எதிரில் கொண்டு போய் நிறுத்தி விட்டன. வறண்டு போன தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''சுந்தரி!'' என்று அழைத்தான்.

ஆச்சரியத்தில் கண்கள் அகலமாக விரிய, ''சுந்தரமா?'' என்றாள் அவள்.

''ஆமாம்...''

''உட்கார்.''

''வேண்டாம். — உன்னை ஒரு வார்த்தை கேட்க வேண்டும் என்று வந்தேன். நீ பேசிய பேச்சுக்கள் எல்லாம் நினைவில் இருந்தாலும் உன்னைப் பார்த்த பிறகு உன்னோடு பேசாமல் போக முடியவில்லை. சென்ற தடவை... நான் உன் வீட்டுக்கு வந்து விட்டுப் போன பிறகு என்ன நடந்தது?''

சுந்தரியின் முகத்தில் தவழ்ந்த புன்னகை மாயமாய் மறைந்து விட்டது. அவள் ஒன்றுமே பேசவில்லை.

''அவரையும் உன்னையும் அன்று ஸ்டேஷனிலே பார்த்தேனே!''

''

''என்ன நடந்தது?''

''அன்று காலையில் அப்பா காலமாகிவிட்டார். அவர் கையில் தந்தியுடன் வந்திருந்தார்.''

''அப்படியா? அதற்கு முந்திய நாள் தானே நான் ஊரை விட்டுப் புறப்பட்டேன்!''

''அன்று நன்ருகவே இருந்திருக்கிருர். ஹார்ட் அட்டாக்.''

''ஸாரி'' என்ருன் சுந்தரம்.

தந்தையின் நினைவில் மூழ்கிய சுந்தரி தன்னைச் சமாதானப் படுத்திக்கொண்டு, ''உனக்குக் கல்யாணமாச்சா?'' என்ருள்.

''இல்லே.''

''ஏன்?''

''உனக்குத்தான் தெரியுமே!''

சுந்தரி ஒரு சிறு புன்னகை உதிர்த்து, ''என் ஞாபகமாகவா?'' என்று கேட்டாள்.

''ஆமாம்.''

சுந்தரி பலமாகச் சிரித்து ''நீ ஒரு விசித்திரப் பிறவி!'' என்ருள்.

''ஏன்?''

''எனக்காக நீ ஒன்றும் செய்ய வேண்டியதில்லே என்று தெரியவில்லேயா? ஒருவேளே நீ சொல்வதெல்லாம் உண்மையென்ருல் உன்னைப் போன்ற பெரிய மடையன் வேறு ஒருவன் இருக்க முடியாது!''

''அப்படியாளுல் நான் இதுகாறும்...''

''ஆமாம்! எதற்காக இந்தக் கஷ்டம்? நம் காதல் விளையாட்டுக்குச் சிறு வயதில் கொடுத்த முக்கியத்வத்தை இப்போது கொடுக்கலாமா? அந்தப் பருவத்துக்கு ஏற்றபடிபெரிய காதல் புரிந்து மகிழ்ச்சியடைந்தோம்.... நீ மிகவும் நல்லவளுதலால் நாம் என்றென்றும் ஞாபகம் வைத்துக்கொள்ளும் வகையில் ஒன்றும் நடந்து விடவில்லே.''

சுந்தரத்துக்கு வேதனையும் கோபமும் பொங்கி வந்தன. முகம் வெளிறிக்கொண்டே வந்தது. அவள் தொடர்ந்தாள்.

''எனக்குக் கல்யாணமாகி நான் சுகமாக இருக்கிறேன். உட்கார். இன்னெரு பத்து நிமிஷங்களில் அவரும் குழந்தையும் வந்து விடுவார்கள். இந்தத் தடவை உனக்கு அவரை அறிமுகப்படுத்தி வைக்கிறேன்.''

''சரி. அவர் ஏதோ சந்தேகப் பேர்வழி...''

இதைக்கேட்டுச் சுந்தரி மீண்டும் சிரித்தாள்.

''பார், இதைப் போன்ற முட்டாள்தனம் வேறு உண்டா? அவர் சுபாவத்தை அப்பொழுது முழுதும் புரிந்து கொள்ளாத நிலே. அதனுல் அப்படிச் சொன்னேன். அவர் என்மீது அளவு கடந்த அன்பைப் பொழிந்தார். என்னைத் திருப்திப்படுத்த என்னவெல்லாமோ செய்தார். அவற்றையெல்லாம் உன்மீது நான் வைத்திருந்த அன்பை மாற்றுவதற்காகச் செய்கிருர் என்று நான் தப்பர்த்தம் செய்து கொண்டேன். பிறகுதான் அவருக்கு என் வார்த்தைகளில் நம்பிக்கை இருக்கிறது என்று புரிந்துகொண்டேன்....''

சுந்தரம் அவளேயே ஒரு நிமிஷம் வெறித்துப் பார்த்துவிட்டு, ''அப்படியாளுல் நம்முடைய அந்த நாளேய அன்பை ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் கூட இல்லே என்கிருயா?'' என்று பரிதாபமாகக் கேட்டான்.

சுந்தரி மீண்டும் சிரித்து, ''அப்படி ஞாபகம் வைத்துக் கொள்ளும்படி அதில் என்ன இருக்கிறது?'' என்று கேட்டாள்.

சுந்தரத்துக்குத் தலே சுற்றத் தொடங்கியது. தான் இத்தனே நாட்கள் செய்த இந்தத் தியாகமெல்லாம் இந்தப் பெண்ணுக்காகவா என்று நினைத்தான்.

''அப்பொழுது — அந்த நாளில் — நம்ம ஊரில் உன்னை ரொம்பவும் கொடுமைப்படுத்தினுர்களா?'' என்று கேட்டான்.

''எதற்கு?''

''என்னுடன் அப்படியிருந்ததற்கு?''

''உன்னுடன் நான் எப்படி இருந்துவிட்டேன்? என்ருலும் அப்பாவும் அம்மாவும் ரொம்பச் சத்தம் போட்டார்கள். எனக்குக் கோபம் வந்து படுத்து விட்டேன். பிறகு அவர்கள் என்னே ரொம்ப தூரம் சமாதானப் படுத்தினுர்கள்... அதற்கு மறு நாள் நீ ஊரை விட்டே ஓடிப் போகவே, அப்பாவுக்கு ஒரே சிரிப்பு.''

''நான் இருந்திருந்தால் உங்க அப்பா என்னே அடித்து நொறுக்கியிருக்க மாட்டாரா....?'' என்று இழுத்தான் சுந்தரம்.

''எங்க அப்பாவா? அடிக்கவா? ஓ கடவுளே'' என்று சொல்லி மீண்டும் விழுந்து விழுந்து சிரித்தாள் சுந்தரி.

அதற்கு மேல் ஒரு கணம் கூட அவனுக்கு அங்கே இருக்கப் பிடிக்கவில்லே. வேகமாக நடந்து வெளியே வந்தான். மூன்று ஆண்டுகளாகக் கடைப்பிடித்து வந்த வழக்கத்தை மாற்றிக் கொண்டு டாக்ஸியில் தன் இருப்பிடத்தை அடைந்தான். தன்னே அவள் மீண்டும் கூப்பிட்டாற் போல் தோன்றியது. திரும்பிப் பார்க்காமலே வந்து விட்டான்.

வீட்டுக்கு வந்து குளிர்ந்த தண்ணீரைக் குடித்தான். கட்டிலின் மேல் உட்கார்ந்து யோசிக்கலானுன்.

சுந்தரி அவன் சுகத்தைக் கருதி அப்படி நடித்தாளா? அல்லது அவள் உண்மையைத்தான் சொன்னுளா?

எவ்வளவு யோசனே செய்து பார்த்தாலும் அவள் பொய்யுரைத்தாள் என்று அவனுல் நம்ப முடியவில்லே. ஆயினும் அவள் சிரிப்பு இன்னும் அவன் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது.

அவள் முகத்தில் துன்பத்தின் அறிகுறி ஏதுமில்லே. அது மட்டும் உண்மை.

இந்தத் தடவை அவள் என்ன சொன்னுள்?

கல்யாணம் செய்துகொள் என்ருள். சூசகமாகக்கூட அல்ல; மிகத் தெளிவாகவே கூறினுள்.

சுந்தரம் வேருெரு பெண்ணேக் கல்யாணம் செய்து கொண்டாலும் அவனுக்குச் சுந்தரியின் ஞாபகம் வராமல் போகாதே!

நிறைவேருத காதலே நினைத்து ஏங்கி வாழ் நாளேக் கழிப்பதில் கூட ஒரு சுகம் இருக்கவே செய்கிறது! என்ருலும் அவன் ஒரு குடும்பஸ்தனுனுல் சுந்தரிக்கு ஒரு மனச்சாந்தி ஏற்படக் கூடுமே!

இந்த எண்ணம் எழுந்ததுதான் தாமதம். சுந்தரம் உட்கார்ந்திருந்த கட்டிலே விட்டு இறங்கினுன். அண்ணன் முன்பொரு பெண்ணேப் பற்றி எழுதிய கடிதத்தைத் தேடலானுன்.

பிரபல புரட்சிக்காரன் ஜதின் சக்கரவர்த்தியை நான் சந்தித்தது ஒரு தற்செயலான நிகழ்ச்சி.

அரசாங்கத் தணிக்கை அலுவலகத்தில் வேலை செய்யும் நான் அடிக்கடி தணிக்கைக்காக மற்ற அரசாங்க அலுவலகங்களுக்குச் செல்வதுண்டு. இவ்வாறுதான் ஒரு தடவை பார்த்வான் சென்றிருந்தேன். பார்த்வான் ஜெயில் ஆபீசில் தணிக்கை. ஜெயில் சூப்பரிண்டெண்ட் சமீர் பிஸ்வாஸ் எனக்கு முன்னமேயே அறிமுகமானவர். எனக்குப் பார்த்வானில் தங்க வசதியான இடம் கிடைக்காததால் அவர் என்னைத் தம் வீட்டிலேயே தங்கச் செய்திருந்தார்.

இரவில் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது அவர் கேட்டார்: ''ஜதின் சக்கரவர்த்தியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிங்களா?''

''ஓ! கல்கத்தாவில் இருந்து கொண்டு ஜதினைப் பற்றிக் கேள்விப்படாமே இருக்க முடியுமா?''

''வாஸ்தவம்தான். அவனைப் பார்க்கணுமா, சொல்லுங்க!''

''அது எப்படி முடியும்?''

பயங்கரவாதிகளும் தப்பி ஓடும்போது ஒருவன் மாத்திரம் பிடிபட்டான். அவன்தான் ஜதின் சக்கரவர்த்தி.

இவ்வாறுதான் திடீரென்று பிரபலமானான் ஜதின். பத்திரிகைகளில் அவனைப் பற்றிய விவரங்கள் வெளியாயின. அரசாங்கத்தில் உயர்ந்த உத்தியோகத்தில் இருந்தவர் ஒருவரின் ஒரே பிள்ளை ஜதின். கல்கத்தாவில் மிகவும் புகழ் பெற்ற மாநிலக் கல்லூரியில் எம். எஸ்ஸி. படித்துக் கொண்டிருந்தான். படிப்பில் மிகவும் கெட்டிக்காரன். அவனுடைய ஆசிரியர்கள் அவனுடைய உழைப்பையும் புத்திசாலித்தனத்தையும் போற்றினார்கள். அவன் எதிர்காலத்தில் சிறந்த ஒரு பெரிய விஞ்ஞானியாக வருவான் என்று அவர்கள் நம்பியிருந்தார்கள். அப்படிப்பட்டவன் திடீரென்று எப்படியோ புரட்சிக் கருத்துக்களால் கவரப்பட்டான். இதன் விளைவாக அவன் படிப்பை விட்டு விட்டு மற்றப் புரட்சிக்காரர்களுடன் தொடர்பு கொண்டான். பிறகு திடீரென்று மறைந்து விட்டான். பல மாதங்கள் வரையில் அவனைப் பற்றி எந்தச் செய்தியும் கிடைக்கவில்லை.

அதன் பிறகுதான் ஜம்னு தாஸின் கொலை நிகழ்ந்து ஜதின் பிடிபட்டான்.

விசித்திர நெஞ்சம்

எஸ். கிருஷ்ணமூர்த்தி

''அவன் எங்க ஜெயில்லேதான் இருக்கான். போன மாசம் அலிப்பூர் சென்ட்ரல் ஜெயில் சமாசாரம் ஞாபகம் இருக்கா உங்களுக்கு?''

எனக்கு ஞாபகம் வந்தது. சென்ற மாதம் அலிப்பூர் ஜெயிலில் வைக்கப்பட்டிருந்த சில நக்சால் கைதிகள் வார்டனைக்கொன்றுவிட்டுத் தப்பியோடி விட்டார்கள். அதையொட்டி அங்கு வைக்கப்பட்டிருந்த மற்ற நக்சால் கைதிகள் மேற்கு வங்காளத்திலிருந்த மற்ற ஜெயில்களுக்கு மாற்றப் பட்டிருப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்திருந்தது.

ஜதின் சக்கரவர்த்தியைப் பார்க்க எனக்கு ஆவலாகத்தான் இருந்தது. என் விருப்பத்தைச் சமீர் பிஸ்வாஸிடம் தெரிவித்தேன். மறுநாள் சந்திப்புக்கு ஏற்பாடு செய்வதாகச் சொன்னார் அவர்.

சில மாதங்களுக்கு முன் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் மேற்கு வங்காளத்தையும் கல்கத்தா நகரத்தையும் உலுக்கிக் கொண்டிருந்தன.

கல்கத்தாவின் வியாபார கேந்திரமான படா பஜார்ப் பகுதியில் ஒரு நாள் பட்டப் பகலில் வியாபார உலகின் பெரிய புள்ளியான சேட் ஜம்னு தாஸ் கடையிலேயே படுகொலை செய்யப்பட்டார். அவரைத் தாக்கிய நான்கு

சேட் கொலையுண்ட செய்தியும் ஜதின் பிடிபட்ட செய்தியும் மக்களிடையே பெரும் பரபரப்பையூட்டின. பெரிய இடத்தில் பிறந்து, சகல வசதிகளுடன் வாழ்ந்து, படிப்பிலும் சிறந்து விளங்கிய ஓர் இளைஞன் லட்சிய வெறியால் தூண்டப்பட்டுத் தன் ஒளிமயமான எதிர்காலத்தைத் துறந்து புரட்சிவாதியாக மாறியது வியப்பில் ஆழ்த்தியது.

பிடிபட்ட ஜதின் மூலம் மற்றப் பயங்கரவாதிகளைப் பற்றிய விவரங்களை அறிந்து கொண்டு அவர்கள் எல்லோரையும் பிடித்து விடலாம் என்று போலீஸ் துப்பறியும் இலாகா நினைத்தது. ஆனால் அந்த நம்பிக்கை நிறைவேறவில்லை. போலீசார் எவ்வளவு முயற்சி செய்தும் அவர்களால் ஜதினிடமிருந்து எந்தத் தகவலும் அறிய முடியவில்லை. இந்நிலையில்தான் அவன் பார்த்வான் சிறைக்கு மாற்றப் பட்டிருந்தான்.


மறுநாள் நான் அவனைச் சந்தித்தேன். அவனுடைய தோற்றம் புரட்சிக்காரர்கள் பற்றிய என் கற்பனைக்கு முற்றிலும் மாறாக இருந்தது. பயங்கரவாதிகளிடம் சாதாரணமாக

எதிர்பார்க்கப்படும் முரட்டுத்தனமோ கொடூரமோ அவனிடம் இல்லே.

ஜெயில் நிர்வாகி யல்லாத ஓர் அரசாங்க உத்தியோகஸ்தர் தன்னைச் சந்திக்க வந்திருப்பது பற்றி அவனுக்கு ஆச்சரியமாக இருந்திருக்க வேண்டும். அவனுக்கு ஏறக்குறைய என் மகனின் வயது. அவனைக் கண்டதும் அவனிடம் ஒரு பரிவும் அனுதாபமும் எனக்கு ஏற்பட்டது. ஒரு திறமை வாய்ந்த இளைஞன் தவறான வழியில் சென்று தன்னையும் மற்றவர்களையும் வீணுக்கிக் கொள்கிருனே என்ற பரிதாப உணர்வு தோன்றியது. நான் அவனுடன் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தேன். ஒருசிலரைக் கொன்றுவிடுவதால் மட்டும் சமூகத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டு விடாதென்றும், வன்முறை எந்தப் பிரச்னையையும் திருப்திகரமாகத் தீர்த்துவிடாதென்றும் அவனுக்கு அறிவுறுத்தினேன். அவன் விடுதலே அடைந்த பின் ஆக்கப் பணிகளில் ஈடுபட்டு நாட்டுக்குச் சேவை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்.

நான் சொன்னதை யெல்லாம் அவன் கவனமாக, அமைதியாகக் கேட்டுக் கொண்டான். ஆனல் என் உபதேசத்தை அவன் ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லே.

ஆனல் அந்த லட்சியவாதியான இளைஞனின் நினைவை மட்டும் என்னுல் மறக்க முடியவில்லே.



ஆகவேதான் பல வருடங்களுக்குப் பின் ஒருநாள் அவனேப் பார்த்ததுமே என்னுல் அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. இத்தனைக்கும் அவன் அப்போது தோற்றத்தில் எவ்வளவோ மாறிப் போயிருந்தான்.

அப்போது அவன் தரம்தல்லாவில் நடைபாதையில் இரண்டு கம்பளங்களுக்கு இடையில் ஒரு கயிற்றைக் கட்டி அதில் சில ரெடிமேட் உடைகளைத் தொங்க விட்டு வியாபாரம் செய்து கொண்டிருந்தான். இந்த நிலையில் அவனைக் காண ஆச்சரியமாக இருந்தது.

அவன் முதலில் என்னை அடையாளம் கண்டுகொள்ளவில்லே. ''உங்களுக்கு என்ன வேணும் சார்?'' என்று கேட்டுக்கொண்டே வந்த அவனைத் தாழ்ந்த குரலில் வினவினேன்: ''என்னைத் தெரியறதாப்பா உனக்கு?''

சற்று நிதானித்து என்னைக் கூர்ந்து பார்த்தான் அவன். பிறகே ஞாபகம் வந்தது அவனுக்கு. ''உங்களைப் பார்த்வாளிலே பார்த்திருக்கேன், இல்லே? ரொம்ப நாளேக்கு முன்னுலே... ஆனல், உங்க பேரு ஞாபகத்துக்கு வரல்லே...''

''பரவா யில்லே, என்ன சமாசாரம் சொலேனு! உன்னைப் பார்த்தேனே, அதுக்கப்புறம் ஒரு தகவலும் இல்லே. அந்த வழக்கு...''

''வழக்கு நடக்கவே யில்லே, சார்! ரெண்டு வருஷங்களுக்கு மேலே என்னை ஜெயில்லே



இதோ சில அறுவைகள்!

- ''பாசி ஏன் வழுக்குகிறது?''
  ''காலை அதன் மேல் வைக்கிறோம். அதனால் வழுக்குகிறது.''
- ''பஸ்ஸில் ஏறிக் கடைசியில் இருக்கும் ஸீட்டில் உட்கார்ந்தால் குத்தும். ஏன் தெரியுமா?''
  ''அது 'பின்'ஸீட் அல்லவா? அதனால் தான்''
- ''காலும் கையும் உள்ள பறவை எது?''
  ''கா க் கை.'' - ராணி மைந்தன்

வைச்சிருந்தும் அதிகாரிகளாலே வழக்கைச் சரியா ஜோடிக்க முடியல்லே. அவங்களுக்குத் தேவையான சாட்சியங்கள் கிடைக்கல்லே. ஆனால் என்னை நிபந்தனை யில்லாமே வெளியே விடவும் தயாராயில்லே அவங்க. ஜாமீனிலே விடுதலை பண்ணறதாச் சொன்னாங்க. ஆனால் ஜாமீன் கொடுக்கத்தான் ஆளில்லே....''

''ஏன்? உங்கப்பா...?''

''அப்பாவா? அவர்தான் என்னை உதவாக்கரைன்னு அப்பவே கைகழுவி விட்டாரே! அவரைச் சொல்லியும் குத்தமில்லே. அவர் தம் வேலையைக் காப்பாத்திக்க வேண்டாமா?''

''அப்போ?''

''இன்னும் ஒரு வருஷம் ஜெயில்லே இருந்தேன். அப்புறம் ஜாமீன் கிடைச்சது. வெளியிலே வந்தேன். வெளியே இருந்த நிலைமையைப் பார்த்தா ஏமாற்றமாக இருந்தது. என் சகாக்கள் எல்லாரும் — நான் யாரைக் காட்டிக் கொடுக்காமல் இருக்கறதுக்காக ஜெயில்லே சித்திரவதையைக் கூடப் பொறுத்துக்கிட்டேனோ, அவங்க எல்லோரும்—இயக்கத்துக்குத் தலை முழுகிட்டு, லட்சியங்களைக் காத்திலே பறக்க விட்டுட்டு இந்தச் சமூக அமைப்பிலேயே சௌக்கியமாக ஐக்கியமாயிட்டாங்க. ஒருத்தன் தன்னோட அப்பா தயவிலே ஒரு கம்பெனியிலே ஆபீஸராயிட்டான். இன்னொருத்தன் பணக்காரப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு மாமனார் வீட்டோடே இருக்கான். மூணாவது பேர்வழி கண்டிராக்டராகிப் பணத்தைப் போர் போராச் சேர்க்கிறான்...''

''நீ என்ன பண்ணினே? நீயும் உன் லட்சியத்தைத் தியாகம் பண்ணிட்டியாக்கும்?''

''என்னோட கொள்கை மாறிட்டது. ஆனால் ஜனங்களுக்கு ஏதாவது சேவை செய்யணுங்கற லட்சியம் மட்டும் இருக்கு. என் புரட்சி வெறி மறைஞ்சு போச்சு. வன்முறையாலும் ஒருசில பணக்காரங்களைக் கொலை செய்யறதாலும் சமூகத்துக்குக் கதிமோட்சம் வந்துடாதுன்னு நீங்க சொன்னீங்களே, அது உண்மைதான்னு எனக்குப் புரிஞ்சது. ஆனால் இதை எனக்குப் புரிய வைச்ச நிகழ்ச்சி என்ன, தெரியுமா?''

''என்ன?'' என்று ஆவலுடன் கேட்டேன்.

''ஜாமீன் கொடுக்க ஆளில்லாமல் ஜெயில்லே கிடந்த எனக்குக் கடைசியில் ஜாமீன் கொடுக்க முன்வந்தவன் வேறே யாருமில்லே — சேட் ஜம்னுதாஸோட மருமகன் கோபால்தாஸ்தான்! அவனும் நானும் ஒண்ணாக்கல்லூரியிலே படிச்சவங்க. அவனை எனக்கு ஓரளவு தெரியும். ஆனால் அவன் சேட் ஜம்னுதாஸுக்குச் சொந்தக்காரன்னு எனக்கு அப்போது தெரியாது. அவனோட மாமாவைக் கொன்ன எனக்கு ஜாமீன் கொடுக்க அவன் முன்வந்தது என்னை ஓர் உலுக்கு உலுக்கி விட்டது. நீங்களும் உங்களைப் போன்ற மற்றப் பெரியவங்களும் செஞ்ச உபதேசங்கள் செய்ய முடியாததை அவனோட பெருந்தன்மை சாதிச்சுவிட்டது. சரியான முறையில் முயற்சி பண்ணினால் சேட்டை இன்னும் நல்லவராக ஆக்கி யிருக்கலாம். அவரை நான் கொன்னது சரியில்லே... இப்படியெல்லாம் எனக்குத் தோன்ற ஆரம்பிச்சது.... கோபால் தாஸே எனக்குக் கொஞ்சம் பணம் கொடுத்தான். அதைக் கொண்டு இந்த ரெடிமேட் வியாபாரம் ஆரம்பிச்சேன். சாப்பாட்டுக்குப் போதுமான வரும்படி கிடைக்கிறது...நான் ஒத்தைக்கட்டைதானே!...''

''என்ன சமூகசேவை செய்யறே இப்போ?''

''ஆக்க பூர்வமா ஏதாவது சேவை செய்யச் சொன்னீங்களே நீங்க, அதைத்தான் இப்போ செஞ்சுக்கிட்டிருக்கேன். சியால்தா பக்கத்திலே ஒரு சேரியிலே குடிசை போட்டுக்கிட்டு அங்கேதான் வசிக்கிறேன். ஓய்வு நேரத்திலே அங்கே ஸ்கூல் நடத்தறேன். காலையிலே குழந்தைகளுக்குப் பாடம், ராத்திரியிலே பெரியவர்களுக்கு எழுதப் படிக்கச் சொல்லித் தரேன்.''

கேட்கக் கேட்க என் மனம் பூரித்தது. அந்த மாஜி பயங்கரவாதியை என் வீட்டுக்கு விருந்துக்கு அழைத்தேன்!

ஜதின் ஓர் ஞாயிற்றுக் கிழமை மாலை என் வீட்டுக்கு வந்தான். வெகு நேரம் தன் வாழ்க்கையைப் பற்றித் தன் புரட்சி இயக்க கால அனுபவங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தான்.

பிறகு சாப்பிட உட்கார்ந்தோம். அவனிடம் மன்னிப்பை வேண்டும் குரலில் பேசினேன். ''ஜதீன்! உனக்குப் பிடித்தமான சாப்பாடு என்னால் போட முடியாதப்பா. நான் ஒரு வெஜிட்டேரியன். மாமிசமோ, மீனோ சாப்பிடுவதில்லை. எங்கள் சாப்பாடு உனக்கு அவ்வளவு ருசிக்காது...''

''அதெல்லாம் ஒன்றுமில்லை, உங்க சமையல் பக்குவம் கொஞ்சம் வித்தியாசமாக இருக்கும். அவ்வளவுதான். சாதமும், காய்கறிகளும்தானே நானும் சாப்பிடுகிறேன்!''

''ஏன்? நீ மீன், மாமிசம் சாப்பிடுகிறதில்லையா?''

''இல்லை. எங்க வீட்டிலே எல்லோரும் மீனும் மாமிசமும், சாப்பிடறதுண்டு. நான் மட்டும்தான் எனக்கு நினைவு தெரிஞ்ச நாளிலேயிருந்து அதெல்லாம் சாப்பிடறதில்லே...உயிர்க் கொலை பண்ணி வயிறு வளர்க்கிற வழக்கம் எனக்குப் பிடிக்கல்லே.''

திகைப்பாக இருந்தது எனக்கு. கொள்கைக்காக ஒரு மனிதனைக் கொலை செய்யத் துணிந்த இவன் சாப்பாட்டுக்காக உயிர்க் கொலை செய்வதை வெறுக்கிறான்! மனிதன் ஒரு புதிர்தான்! சந்தேகமே இல்லை!

மாயவரம்

பைனான்ஷியல் கார்ப்பரேஷன் லிட்.

பதிவு அலுவலகம் :

13-H, கச்சேரி ரோடு, மாயவரம் - 609001

நீண்டகால சீட்டுக்களின் பலன்கள்

1. ஐம்பது அல்லது நூறு மாதங்கள் என நீண்டகாலத்தில் எளிய தவணைகளில் பணத்தைச் செலுத்தி மொத்தமாக நிறைந்த தொகையைப் பெறுதல் சீட்டு முறைத் திட்டத்தால் ஏற்படும் நன்மையாகும். அது எல்லா நிலையினருக்கும் ஏற்றதாகும்.

2. ஏலம் எடுத்த தொகையை வியாபாரத்தில் முடக்கினால் / முதலீடு செய்தால் பெருமளவு லாபம் கிடைக்கும். அப்படிக் கிடைக்கும் லாபம் சீட்டுக்குரிய எஞ்சிய தவணைகளை எவ்வித சிரமமும் இன்றி எளிதில் கட்டவும் உதவியாக இருக்கும்.

3. சீட்டுக் கேள்விகளுக்கான வரையறை எல்லை இல்லை. எந்தக் கேள்விக்குத் தொகையளிக்கப்படலாம் என்பது முத்திரையிடப்பெற்ற உரிய ஒப்பந்தப் புள்ளிகளைக்கொண்டே முடிவு செய்யப்படுகிறது.

4. ஏலம் எடுத்த, எடுக்காத உறுப்பினர்களில் இடை நிறுத்தம் இல்லாமல் தொடர்ந்து கட்டிய அனைவரும் சீட்டின் பங்கீட்டு ஊதியத்தை அடைகிறார்கள்.

5. பகிர்வு ஊதியத்தில் இருபத்தி நான்கு சத விகிதம் உறுப்பினர்களுக்கெனத் தீர்மானிக்கப் பெற்றுப் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது.

6. ஏலம் பெறும் வாய்ப்பிழந்த உறுப்பினர்களில் இறுதிவரை தவணைகளை முறையாகச் செலுத்தியவர்கள் சீட்டு நிறைவு பெறும்போது முழுத் தொகையினைப் பெறுகிறார்கள்.

7. எளிய தவணைகளில் நீண்ட காலத்தில் கட்டக்கூடிய ஏலத் தொகையினைப் பெறுவதன் மூலம் திருமணங்கள், பிள்ளைகளின் மேற்படிப்பு வீடு கட்டுதல், பெருமளவில் பழுது பார்த்தல், நெடுங்காலமாகத் தங்கிவிட்ட அடமானங்களை மீட்டுக் கொள்ளுதல் போன்றவற்றை எளிதில் நிறைவேற்றிக் கொள்ளலாம்.

நடைபெறும் சீட்டுக்களின் விவரங்களுக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்

R. கல்யாணசுந்தரம்
மானேஜிங் டைரெக்டர்

[illegible] 3

விமல் மித்ர

தமிழாக்கம்: ரா. வீழிநாதன்.

6. நான் கணவன், அவள் மனைவி!

திரும்பிப் பார்த்தால், நிசிகாந்தன்! மூச்சு வாங்க என்னை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தான்.

''என்ன விஷயம்?'' கேள்வியைப் பார்வையில் தேக்கினேன்.

''நீங்கள் திடீரென்று ஏன் சார் ஓடி வந்து விட்டீர்கள்? பயந்து போய் விட்டீர்களா?'' என்று கேட்டான் நிசிகாந்தன், மூச்சுத் திணற.

''போதும், போதும்! உங்கள் சங்காத்தியம் எனக்கு வேண்டவே வேண்டாம். உங்கள் வழக்குக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? என்னை மாட்டி வைத்து எதற்காக என் தலையைப் போட்டு உருட்டுகிறீர்கள்? உங்களிடம் நான் அறுநூறு ரூபாய் கடன் வாங்கி யிருப்பதாக ஏன் நீங்கள் புளுகினீர்கள்? — உண்மையைச் சொல்லுங்கள். எப்பொழுதாவது நான் பணம் கேட்டுக் கை நீட்டி யிருக்கிறேனா? எதற்காக இந்த அபாண்டம்? நான் யாருக்கும் கடன் கொடுப்பதும் இல்லை; யாரிடமும் கைநீட்டிக் கடன் வாங்குவதும் இல்லை. இது உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்!'' என்று குமுறினேன்.

''உயர்ந்த கொள்கை சார். அப்படித்தான் இருக்கணும். உங்கள் கொள்கையே தான் எனக்கும். செத்தாலும் யாருக்கும் கடன் கொடுப்பதில்லை, யாரிடமும் கடன் வாங்குவதில்லை என்றுதான் நானும் உறுதி பூண்டிருக்கிறேன். கடன் கொடுப்பதோ வாங்குவதோ என் அளவிலும் பாவம்தான்.....'' என்றான் நிசிகாந்தன்.

''ஆனால், மல்லிக்ஜியின் வீட்டில் நீங்கள் குடிக்கூலிக்கு இருக்கிறீர்களே, அவர் வாடகையை மாதம் தவறாமல் கெடுவுக்குள் கொடுத்திருக்க வேண்டியது உங்கள் கடமை அல்லவா? கொடுத்திருந்தால் அவரிடம் இப்படி அவமானப்பட நேரிடாதல்லவா?'' என்று கேட்டேன்.

''அந்த மல்லிக்கைப் பற்றிச் சொல்லுகிறீர்களா? அவன் எத்தனை மோசமான ஆசாமி என்பது உங்களுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் இப்படிப் பேசியிருக்க மாட்டீர்கள்! வாடகையைப் பற்றிச் சொல்லுகிறீர்களே, அது ஒரு வீடா? நானும் தெரியாமல்தான் கேட்கிறேன். அது வீடே இல்லை, சார்!''

''வீடே இல்லையா? வீடு இல்லையென்றால் என்ன?''

''உங்களுக்கு எப்படி சார், புரிய வைப்பேன்? அது வீடாக இருந்தால், மாதம் பிறந்ததும் முதல் தேதி அன்றே வாடகையை ஜாம் ஜாமென்று நான் கொண்டு போய்க் கொடுத்திருப்பேன். அதைக் காட்டிலும் புறாக்கூண்டு, எவ்வளவோ தேவலாம் சார்! குழாய் இல்லை, குளியலறை இல்லை. அறையென்று பெயரே ஒழிய அதற்கு மறைவு கிடையாது. தலைக்கு மேலே கூரை ஆகாசம்தான்! இத்தனைக்கும் வாடகை என்ன, தெரியுமா? இருபது ரூபாய்! மல்லிக்கைப்பற்றி நீங்கள் ஒன்று நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும், குடி கெடுக்கிற கெட்ட பயல் அவன்! அப்பொழுது நான் பட்ட சிரமத்தில் வேறு வழி தெரியாமல் சரயுவை அழைத்துக் கொண்டு அந்தப் புறாக் கூண்டுக்குக் குடி போனேன்.''

''உங்களுக்கு அப்படி என்ன சிரமம் வந்து விட்டது? உங்கள் டாலிகஞ்ச் வீடு நன்றாகத் தானே இருந்தது! அழுத்தமான கட்டடம்; வரவேற்பு அறை முதற்கொண்டு தனியாக இருந்ததே! அந்த வீட்டுக்கு நான் கூட ஒரு [illegible] வந்திருக்கிறேனே! அந்த மாதிரி [illegible], வீடு கிடைக்காத இந்த நாளிலே விடுகிறது அறிவுள்ள காரியமா?''

நிசிகாந்தன் சட்டைப் பையிலிருந்து ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டே, ''ஏன் விட்டேன்?... அப்படி விட வேண்டிய நிலை என்ன வந்து விட்டது என்ற கதையைச் சொன்னால் உங்களைப் போன்றவர்கள் அழுது விடுவீர்கள். 'நிறுத்து. நிசிகாந்த்! நிறுத்து! உன் கதையை இனியும் என்னால் கேட்க முடியாது!' என்று கூறிக் காதுகளில் கை வைத்துக் கொண்டு விடுவீர்கள்!'' என்றான்.

''அந்தக் கதையெல்லாம் வேண்டாம். நீ சொல்லு, நான் கேட்கிறேன்!'' என்று 'நீ'யில் இறங்கிவிட்டேன்.

''கேட்கத்தான் கேட்பேன் என்று பிடிவாதம் பிடித்தால் கேளுங்கள். கேட்ட பின், என்னைக் குறை கூறக் கூடாது. 'நான் சரியா? சரயு சரியா? யார் சரி' என்று நீங்கள் கூற வேண்டும்.''

''சொல்லு!''

''நான் அந்த வீட்டைச் சரயுவினால் தான் விட்டேன்!'' என்றான் நிசிகாந்தன்.

''ஏன்? சரயு செய்த குற்றம் என்ன?''


''சார்! நீங்களோ ஓர் எழுத்தாளர். இதுவோ சிக்கல் இல்லாத நேரான விஷயம். அதைக் கூட உங்களாலே புரிந்து கொள்ள முடியவில்லை என்றால் நீங்கள் என்ன எழுத்

தாளர், சார்? நீங்கள் துப்பறியும் கதை — கிப்பறியும் கதை எழுதுகிறீர்களோ?''

''ஏன், தம்பி! துப்பறியும் கதை எழுதுகிறவர்கள் எல்லோரும் உன் கருத்தில் எழுத்தாளர்கள் இல்லையா?'' என்று கேட்டேன் நான்.

''என்ன எழுத்தாளர்களோ அவர்கள்? உருப்படாத கொலை — கொள்ளையைப் பற்றித்தான் எழுதுவார்கள். பாருங்கள், ஒவ்வொரு சமயம் என் மண்டையிலே கூடக் கொலை வெறி விர்ரென்று ஏறி விடுகிறது. இந்த மாதிரி விஷயங்களையெல்லாம் உங்களைப் போன்றவர்கள்தான் நன்றாகப் புரிந்து கொள்ள முடியும். இந்த மல்லிக் சாஹப்பைக் கொலை பண்ணிப் போட்டால் என்ன என்று கூடச் சில சமயம் எனக்குத் தோன்றும்!''

உண்மையான விஷயத்தை நிசிகாந்தன் ஒளிக்கப் பார்க்கிறான் என்பது எனக்கு நன்றாகத் தெரிந்தது. இருந்தாலும், ''நீங்கள் டாலிகஞ்ச் வீட்டை ஏன் விட்டீர்கள், அதைச் சொல்லவில்லையே?'' என்று மறுபடியும் கேட்டேன்.



''அந்தக் கஷ்டத்தை நான் என்ன சொல்லுவேன்?. நான் அந்த வீட்டை விட்டதற்குச் சரயு தான் காரணம்!'' என்றான் நிசிகாந்தன்.

''சரயு சரயு என்கிறாயே, அவள் செய்த பிழை என்ன, அதைச் சொல்லவில்லையே!'' என்றேன்.

''பெண்ணுக்கு அத்தனை அழகு நல்லதா, நீங்களே சொல்லுங்கள்! ரொம்ப அழகியாக இருக்கிற பெண் ஒருநாளும் சுகப்பட முடியாது. அங்கேயும் வீட்டுச் சொந்தக்காரனின் கண் சரயுவின் மேல் விழுந்தது. தன் மனைவியின் மேல் இன்னொருவன் கண் படுவதை எந்த

அட்டைப்படம்:



வண்ணக் குடை

வானவில் இறங்கி வந்ததோ,
வண்ணக் குடையாய் விரிந்ததோ?
சித்திரத் தாமரை மலர்ந்ததோ,
சிங்கார முகமாய் சிரித்ததோ!

ஆண் பிள்ளைதான் பொறுப்பான்?'' என்று கேட்ட நிசிகாந்தன் சிறிது நிறுத்தித் தொடர்ந்தான்: ''நெருப்பு மாதிரி ஜொலிக்கிற அழகு. பற்றாக்குறைக்கு மலடு. மலட்டுப் பெண் அழகாயிருந்து விட்டால், கேட்கவே வேண்டாம். ஆண் பிள்ளைகள் அவளைச் சுற்றிச் சுற்றி வருவதற்கு! இப்பொழுதுகூட அப்படித் தான் ஒருத்தன் அவள் பின்னால் சுற்றுகிறான்!'' என்றான்.

''இப்பொழுது எவன் சுற்றுகிறான் அவள் பின்னால்?''

''அதே மல்லிக் சாஹப்தான்!'' என்றான் நிசிகாந்தன்.

''என்ன சொல்கிறாய் நீ? மல்லிக் கிழவராயிற்றே!''

''கிழவர்களை நம்பக் கூடாது, சார்! பொல்லாப் போக்கிரிகளாயிருப்பார்கள்!''

எனக்கு விளங்கவில்லை. ''என்ன சொல்ல நினைக்கிறாய் நீ?'' என்று கேட்டேன்.

''வேடிக்கையாக இருக்கிறது சார், நீங்கள் பேசுகிறது! என்னை நன்றாக ஆழம் பார்க்கிறீர்களே! கிழவர்களுக்கே ஆசை அதிகம், சார்! அழகான பெண்களைப் பார்த்து விட்டால், அவர்கள் மனம் ஆடிப் போய் விடும். அதனாலேதான் நான் மல்லிக்கை ரொம்ப பொல்லாதவன் என்று சொல்கிறேன். என் மனைவியைப் பார்த்ததும் வீட்டை வாடகைக்குக் கொடுத்து விட்டான். வாடகை இருபது ரூபாய் என்று பேச்சு. வீட்டை வாடகைக்கு விட்ட பின் வாடகைப் பணத்தைப் பற்றியே பேச்சு எடுக்கவில்லை. ஆனால், நான் வீட்டை விட்டு எங்கேயாவது வெளியில் போய் விட்டால் போதும், என் மனைவியிடம் போய் உட்கார்ந்து வேடிக்கையும் விளையுமாக அரட்டை அடிப்பான். ஆனால், இப்பொழுது அதெல்லாம் முடியவில்லை. சரயுதான் போய் விட்டாளே! அதனாலே வாடகையைக் கொண்டு வா என்று நெரிக்கிறான். கிழவனை இலேசுப்பட்டவன் என்று நினைக்காதீர்கள். போக்கிரியிலும் போக்கிரி அவன்!'' என்றான் அவன்.

இதையெல்லாம் கேட்ட பின், என் மூளை விர்ரென்று விந்தையானதோர் உணர்வால் உந்தப்பட்டுப் பரபரத்தது. அப்படியானால், இது வரைக்கும் நான் நினைத்திருந்ததெல்லாம் தவறு? இவன் பேச்சு உண்மையாக இருக்குமானால், அன்று மோகாமாகாட் ஸ்டேஷனிலே கஞ்சா நிறைந்த சூட்கேஸை என் பொறுப்பில் விட்டு விட்டு ஓடினவள் யார்? டாலீகஞ்சில், கங்கைக் கரையில் உருவாகியிருந்த துறவியின் ஆசிரமத்தில் பிரசாதம் வழங்கினவள் யார்? அப்புறம் ஆசிரமத்தின் பெயரால் என்னிடம் சந்தா வசூலிக்க வந்தவள் யார்? போலீசுக்குப் பயந்து என் வீட்டில் தஞ்சம் புகுந்தவள் யார்? அப்புறம் பயந்து போய்க் குளியலறையின் பின் வழியாக ஓடிப் போனவள் யார்? இதெல்லாம் யார் வேலை? — இப்படி ஒருத்தியைச் சுற்றி என் மனம் பரபரத்துக் கொண்டிருக்க, நிசிகாந்தன் என்கூடவே நடந்து கொண்டிருந்தான்.

நான் பழைய விஷயங்களைப் பற்றி எதுவும் பேச்சுக் கொடுக்காமலே, ''சரயு எங்கே போய்விட்டாள்?'' என்று மட்டும் கேட்டேன்.

''அதுதான் உங்களுக்குச் சொன்னேனே, சார்! நரகத்துக்குப் போய்த் தொலைந்தாள். ஏன், சார்! அழகும் மலடும் சேர்ந்தவள் உருப்படுவாளா? அவள் நரகத்துக்குப் போய் அழிந்து ஒழிந்து போவாள் என்று எனக்கு அப்பொழுதே தெரியும். ஆனால் ஒரு கஷ்டம் என்ன தெரியுமா? என் நெஞ்சு ஈவு இரக்கம் மிகுந்த நெஞ்சு. பிறர் படும் துயரத்தை என்னால் தாள முடியாது, பார்க்க முடியாது. அவள் உடுத்தியிருந்த ஒரே உடையோடு பாகிஸ்தானிலிருந்து அகதியாக வந்து சேர்ந்தாள். ஒரு வேளைச் சோற்றுக்கும் வழியில்லை. இருக்க இடமும் இல்லை. இப்படி அநாதவராக வந்தவளை நான் மட்டும் காப்பாற்றாமல் இருந்தால், என்றைக்கோ குண்டர்களின் கையிலே மாட்டிக்கொண்டு சீரழிந்திருப்பாள். 'பாவம், பெண் பிள்ளை! நாதி இல்லாதவள். அவளுக்கு ஒரு துணை வேண்டும், ஆதரவு வேண்டும்' என்று எண்ணி, முன் பின் எதுவும் யோசிக்காமல் நான் அவளைக் கல்யாணமே பண்ணிக் கொண்டேன். இப்பொழுது என்ன நினைக்கிறேன், தெரியுமா? 'உலகத்தில் யாருக்குமே இரங்கக் கூடாது. இரங்கி நல்லது செய்யக் கூடாது.' நீங்கள் யாருக்காவது நல்லது செய்தால், உங்களுக்கே அவன் குழி பறிப்பான். வித்யாசாகரர் என்ன முட்டாளா, தெரியாதவரா? நீ ஒருவனுக்கு என்னதான் நல்லது செய்தாலும் அவன் உனக்குத் தீங்குதான் செய்வான். இது உலக இயல்பு என்று சொல்லிப் போயிருக்கிறார், சரயு அதை மெய்ப்பித்து விட்டாள். எனக்கும் குழிபறித்து விட்டாள். இல்லாவிட்டால், மல்லிக் போன்ற மட்டமான மனிதனிடம் மாட்டிக் கொண்டு நான் இப்படியெல்லாம் அவமானப்பட வேண்டியிருந்திருக்குமோ?'' என்று கேட்டான் நிசிகாந்தன்.

''இப்பொழுது உன் மனைவி எங்கே இருக்கிறாள்?'' நான் அவனை விடவில்லை; கேட்டேன்.

''இப்பொழுது அவள் யாரோ பணக்காரனிடம் இருக்கிறாள், அவன் ஆசைக் கிழத்தியாக!'' என்றான் நிசிகாந்தன்.

''அந்தப் பணக்காரன் யார்?''

லக்மே லவெண்டர் டால்க்

கொஞ்சி மணக்கும்...
பிரெஞ்சு மயக்கம்.



தரித்துக் கொள்வீர்
லக்மே லவெண்டர் டால்க்.
பூத்த புது பிரெஞ்சு
லவெண்டர் பூக்களின்
நேர்த்தியான மணம்.
லக்மே லவெண்டர் டால்க்

உங்கள் எழில்:
எங்கள் தொழில்.



dCA/L-VC-LT/1N TAM.



(டெபாஸிட் இழந்தவர்): ''தேர்தலில் ஏதோ தில்லுமுல்லு நடந்திருக்கு...''
''அதென்ன தில்லுமுல்லு?''
''நியாயமாக எனக்குக் கிடைக்க வேண்டிய ஓட்டு மூன்று. ஆனால், கிடைத்ததோ முப்பது!''

''அவனை உங்களுக்குத் தெரியாது. இத்தனை பெரிய கல்கத்தாவிலே காதன்னவனுக்குப் பஞ்சமா? இலேசாக ஒருமுறை வாசனை அடிக்க வேண்டியதுதான் தாமதம், நாற்புறமும் இவர்கள் தங்கள் வலையை விரித்து விடுவார்கள். அவர்கள் வலையில் மீன் மாட்டாமல் தப்பாது!'' என்றான் நிசிகாந்தன்.

''அவன் விலாசம் தெரியாதா உனக்கு?''

''தெரியும். அவன் விலாசம் என்ன, அவன் அப்பன் விலாசமுமே தெரியும். ஆனால் அங்கே போக முடியாது. சரயு என்னைப் பார்த்து விட்டால் விரட்டி அடித்து விடுவாள்!''

''விரட்டியடித்து விடுவாளா? ஏன்?''

''இது ஒரு கேள்வியா? விரட்டியடிக்காமல் என்ன செய்வாள்? நானோ ஏழை; கால்காசுக்கு வழி இல்லாதவன். செத்தால் கொள்ளி போடவோ, வழக்கு என்று வந்தால் ஜாமீனில் அழைத்து வரவோ எனக்கு யாரும் கிடையாது. சரயுவுக்கு ஒரு நல்ல புடவை வாங்கிக் கொடுக்க என்னாலே முடியுமா? பெண் மனம் எப்படிப்பட்டது என்று உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே! புடவை, நகை நட்டு என்று ஏதாகிலும் வாங்கிக் கொடுத்துவிட்டால் போதும், மகிழ்ந்து போய் விடுவார்கள். என் கையிலே நாலு காசு துள்ளிய பொழுது, நானும்தான் வேண்டியது வாங்கிக் கொடுத்தேன். ஆனால் இப்பொழுது எல்லாம் தீர்ந்து போய் விட்டது. தடுங்கிணதோம் போடுகிறேன். தேன் இல்லாத இடத்துக்குத் தேனீ வருமா?'' என்றவன் சிறிது தயங்கி ஏதோ யோசித்தவாறு, ''ஏன் சார், எனக்கு ஓர் உதவி செய்வீர்களா?'' என்று கேட்டான்.

''உனக்கு நான் என்ன உதவி செய்ய முடியும், சொல்லு!''

''நீங்கள் எனக்கு ஒரு சின்ன உதவி செய்தீர்களானால், நான் வாழ்க்கை முழுவதும் உங்களுக்கு அடிமைப்பட்டுக் கிடப்பேன். உங்களுக்கு ஓர் உண்மை நான் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை. நான் சரயுவை எத்தனை கெட்டவள் என்று சொல்கிறேனோ, அவ்வளவு கெட்டவள் இல்லை அவள். சரயு ரொம்ப ரொம்ப நல்லவள்; சவு இரக்கமுள்ளவள். புடவை - துணிமணி, நகை நட்டு இவற்றின் மீது அவளுக்கு ஆசை இருக்கிறது என்பது என்னவோ உண்மை. பார்க்கப் போனால் எந்தப் பெண்ணுக்குத்தான் இந்த ஆசை இல்லை, விரலை மடக்குங்கள்! என்னைக் கேட்டால் அவளைப் போன்ற நல் இதயம் படைத்தவர்களை இந்தப் புவியில் எங்குமே காண முடியாது. துன்பம் தொல்லை என்று வந்து விட்டால், அவற்றைத் தாங்க முடியாத நிலையில் அவள் என்னைக் கடிந்து சாடுவதுண்டு. நானும்தான் என்ன தூய்மையானவனா, துளசி இலையைப் போல? என்னிடமும்தான் எத்தனையோ குற்றங் குறைகள் இருக்கின்றன.''

''உன்னிடமும் குறைகள் உண்டா?''

''ஒன்று, இரண்டா? எண்ணிச் சொல்வதற்கு? என்னிடம்தான் ஆயிரமாயிரம் தீய குணங்கள் படிந்திருக்கின்றனவே! நான் குடிகாரன், சார்!''

''குடிப்பது குற்றம்தான், என்றாலும் அதைப் பெரிய குற்றம் என்று சொல்லிவிட முடியாது. உலகத்தில் எத்தனையோ பேர் குடிக்கிறார்கள்! பெரிய பெரிய ஆசாமிகளே குடித்து நான் பார்த்திருக்கிறேன்!'' என்றேன்.

''இருக்கலாம், சார்! நான் குடிக்கிற விதமே வேறு! ரொம்ப மட்ட ரகம்!''

''அதெப்படி? குடிப்பதில் மட்ட ரகம், உயர்ந்த ரகம் என்று பாகுபாடு வேறு உண்டா?''

''நான் சொல்கிறதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை. கையிலே காசு இருக்கிற அன்றைக்கு நான் ராஜா! ராஜாக்கள் கூட என்னிடம் பிச்சை வாங்க வேண்டும், கையிலே இருக்கிற காசு தீராத வரையில் எனக்கு நிம்மதி கிடையாது. அத்தனை காசையும் சாராயமாக வயிற்றுக்குள்ளே ஊற்றிக் கொண்டு ஆடிப்போய் வீட்டுக்கு வருவேன்! சட்டைப் பையிலே தம்பிடி என்றால் தம்பிடி மிச்சமிருக்காது!''

''அப்புறம்....?''

''அப்புறம் என்ன அப்புறம்? வீட்டுக்கு வந்து வாந்தி பண்ணுவேன். அதையெல்லாம் சரயு துடைத்துத் துப்புரவு செய்வாள்... படுக்கை, போர்வை, தலையணை எல்லாவற்றையும் துவைத்துப் போடுவாள்! அந்த மாதிரி நிலையிலே சார், யாருக்குத்தான் மனசு சரியாக இருக்கும், சொல்லுங்கள்! நானோ கையாலாகாத கபோதி. பசிக்கிற வயிற்றுக்குச் சோறு போட வக்கில்லாதவன். என்றாலும் நான் கணவன், அவள் மனைவி. கணவனுக்கு மனைவி அடங்கி நடக்க வேண்டும்என்ற ஆணவத்திலே நான் அவளை ஆட்டிப் படைத்துக் கொடுமை செய்வேன், கண்களிலே துரும்பை விட்டு ஆட்டுவேன்! அவ்வளவுக்கும் அவள் மூச்சுப் பிரிய மாட்டாள்!''

இதற்குள் நான் என் உலாவுதலை முடித்துக் கொண்டு வீட்டை நெருங்கி விட்டிருந்தேன். ''சரி, நான் வருகிறேன் என் வீடு வந்து விட்டது!'' என்றேன் நிசிகாந்தனிடம்.

''அப்படியா? உங்கள் வீடு எது, சார்?'' என்று கேட்டான் நிசிகாந்தன். (தொடரும்)

வீட்டிற்குள்ளே வெளியுலகப் புத்துணர்ச்சியை


நுகர

டி-ஒடோர்

ஏர் ஃப்ரெஷ்னர்

டி-ஒடோர் — உங்கள் இல்லம் புது
மணங்கமழ அருமையான வழி.

மூன்று வித நறுமணங்களில்
கிடைக்கின்றது — லாவண்டர்,
ஜாஸ்மின் மற்றும் மோக்ரா.



IMPRESSIONS

சேரமான் காதலி

அத்தியாயம் 20

ஆண்டியின் கண்ணில் ஆண்ட பூமி

அரண்மனை கலகலப்பாகி விட்டது.

பூஜியானாவும், சலீமாவும் உடன் பிறந்த சகோதரிகள் போலப் பழகத் தொடங்கி விட்டனர்.

அவர்கள் இருவரையுமே பத்மாவதியும், தாவளி சகோதரிகளும் ஏற்றுக் கொண்டு விட்டார்கள்.

பத்மாவதியைத் தங்கள் மூத்த சகோதரியாகக் கருதி, காலை எழுந்து குளித்ததும் அவள் காலைத் தொட்டு வணங்குவதை ஒரு பழக்கமாக பூஜியானாவும் சலீமாவும் ஏற்படுத்திக் கொண்டனர்.

பூஜியானாவின் தந்தை பழைய மாளிகையிலேயே தங்கிவிட்டார்.

சலீமாவின் தந்தை தமது இல்லத்திலேயே தங்கிவிட்டார்.

பூஜியானா அரண்மனையில் சேர்ந்து விட்டதுபற்றி யூதர்களுக்கு ஒரு நிம்மதி.

சலீமா அரண்மனையில் இருப்பது பற்றி மகமதியர்கள் மகிழ்ந்தார்கள் என்றாலும், 'மன்னர் இன்னும் மதம் மாறவில்லையே' என்ற ஆதங்கம் மட்டும் இருந்தது.

'நாராயண நம்பூதிரி இனி அரண்மனைக்கு வர மாட்டார் — தொல்லை இல்லை' என்று சேரமான் நினைத்தபோதிலும், நம்பூதிரிகள் சபை பற்றிய அச்சம் அவருக்கு இருந்தது.

கிராமத் தலைவர்கள் ஒன்று கூடிய சபையே நம்பூதிரிகள் சபை. ஆகவே கடமை, வருமானம் (வரி) தேக்கம் அடையும் என்று அவர் பயந்தார்.

தளபதி மானீச்சன் தனது சகோதரியின் கணவன் என்றாலும், அவன் அரண்மனைப் பக்கமே தலை காட்டாததும் அவருக்குப் பயமாகவே இருந்தது.

கண்ணதாசன்

நாராயண நம்பூதிரியும், மானீச்சனும் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? பூஜியானாவும், சலீமாவும் அரண்மனையில் குடிபுகுந்த மறுநாளே, கிராமத் தலைவர்களுக்கெல்லாம் ஓலைகள் பறந்தன.

தூது செல்லும் புரவி வீரர்கள், படை வீரர்கள், தளபதி மானீச்சன் எல்லோருமே நம்பூதிரி கையில்.

மூன்றாவது நாள் எல்லாக் கிராமச் சபைத் தலைவர்களும் நம்பூதிரிகள் சபையில் திரண்டார்கள்.

'நாராயண நம்பூதிரி சபையைக் கூட்டியிருக்கிறார்' என்ற பரபரப்பு நகர் முழுவதும் எழுந்தது.

சபையிலிருந்து எந்தச் செய்தியும் வெளியில் போகாமல், சபையைச் சுற்றிலும் சேனை வீரர்கள் நிறுத்தி வைக்கப்பட்டார்கள்.

படைகளில் சேரமானுக்கு விசுவாசமான ஒரு பகுதி இருந்தது. ஆனால் அது தனித்தியங்க முடியாதபடி கட்டுண்டு கிடந்தது.

'விழிஞம்' என்னும் கடற்கரைப் பட்டினத்தில் சேரமானுக்கு ஆதரவான கடற் படை இருந்தது. ஆனால் நகரில் ஏதாவது நடந்தால் மானீச்சனுக்குக் கீழேயுள்ள தேர்ப்படை, புரவிப் படை, காலாட் படை, யானைப் படை நான்கையும் சந்திக்கக் கூடிய நிலையில் அது இல்லை.

அரசாங்க வேலைகளை நாராயண நம்பூதிரி தம் பொறுப்பில் எடுத்துக் கொண்டு விட்டார். பேருக்கு மட்டுமே சேரமான் அரசராக இருந்தார்.

எங்கே என்ன நடக்கிறது என்று சொல்லக் கூடியவர்கள் கூட அவருக்கு மிகவும் குறைவாகவே இருந்தார்கள்.

அரண்மனைக்கு வெளியே முற்றிலும் பலம் குன்றிவிட்ட சேரமான், அதை மறக்க பூஜியானாவின் இருமுகத்தையும், சலீமாவின் எழில் முகத்தையுமே துணையாகக் கொண்டார்.

முன்பு ஒரு முறை ஏமாந்த அவர் இப்போது ஏமாறுவதில்லை என்று முடிவு கட்டி யிருந்ததால், சூழ்நிலைகளின் இறுப்பே அதிகமாக இருந்தும் கூடப் பிடிவாதமாக இருந்தார்.

உள் நாட்டிலேயே கிட்டத் தட்ட முற்றுகை இடப்பட்ட நிலைதான், அவர் நிலை.

அவர் காற்றுக்காக வெளியே போவதைக்கூட, அந்தரங்கக் காவலாளிகள் அனுமதிக்கவில்லை.

முதல் இரண்டு நாட்கள் மகிழ்ச்சிக் கடலில் நீந்திய பூஜியானுவும், சலீமாவும் இந்தச் செய்திகளை அறிய அறிய, 'தாங்கள் ஓர் அரசனை ஆண்டியாக்கி விட்டோமே' என்று கலங்கத் தொடங்கினார்கள்.

நான்கைந்து நாட்களானதும் சேரமானின் பேச்சு, அவர் புலம்புவது போலக் காட்டிற்று.

''ஒவ்வொரு மனிதனுக்கும் முடிவு மரணம்தான். காதலுக்காக அந்த முடிவை நான் கண்ணியமாகவே ஏற்றுக் கொள்வேன்'' என்றார் அவர்.

நம்பூதிரிகள் சபைக் 'கூட்டம் ஏழு நாட்களாகத் தொடர்ந்து நடந்தது. நாளுக்கு நாள் சேரமானின் ஆதிக்கச் சக்தி குறைந்து கொண்டே வந்தது. அவர் சத்தம் போட்டு உத்தரவிட்டால், அதைக் கேட்பதற்குக் கூட ஆள் இல்லாதது போல் தோன்றிற்று.

''இந்த முற்றுகை நீடித்தால், அரண்மனையின் உபயோகத்துக்குத் தானியக் கிடங்கிலிருந்து தானியம் கூட எடுக்க முடியாது'' என்று தாவளி சகோதரிகளும், பத்மாவதியும் அஞ்சத் தொடங்கினார்கள்.

அழகுச் சிலைகள் இரண்டும் தங்கள் ஆடம்பர அணிமணிகளைக் குறைக்கத் தொடங்கின.

இருள் சூழ்ந்த அரண்மனையில் ஒளி விளக்காகத் திகழ்ந்தவை, மூன்று சமயத்தைச் சேர்ந்த மூன்று மனைவியரின் திருமுகங்களே.

சேரமான் சரணாகதி யடையத் தயாராயில்லை.

எவன் கையிலே சக்தி வந்தாலும் அவன் காலிலே பணிவது என்ற பழக்கம், கேரள மண்ணிலே பிறந்த அந்த உண்மை வீரனுக்கு இல்லை. ஆயினும் விரக்தியான ஒரு நிலை. சமயங்களில் 'அவசரப்பட்டு விட்டோமோ' என்ற சஞ்சலம். உடனேயே, ''எதற்காக நான் காத்திருக்க வேண்டும், நான் யார், இவர்கள் யார்?'' என்ற ஆத்திரம்.

இருந்தாலும், 'இதே காரியத்தைப் பக்குவமாகவும் முடித்திருக்கலாம்' என்ற எண்ணம்.

முன்னும் பின்னும் ஆடுகிற ஊஞ்சல் நினைவுகள், போகும்போது ஓர் இடி; வரும்போது ஓர் இடி என்று அவரை இடித்தன.

'எதுவும் நடக்கலாம், எப்போதும் நடக்கலாம்; எதற்கும் தயார்' என்ற நிலைமைக்கு அவர் வந்து விட்டார்.

இயற்கையாக யாருக்காக நாம் சோதனைகளைத் தாங்கிக் கொள்ளுகிறோமோ, அவர்கள் மீது ஏற்படும் சந்தர்ப்பக் கோபம் கூட, பூஜியானு சலீமா மீது அவருக்கு ஏற்படவில்லை.


எவ்வளவு சாமர்த்தியமாகக் கேரள தேசத்தையே மடக்கிக் கைக்குள் போட்டுக் கொண்டவர், அவர்!

எவ்வளவுசாதாரண விஷயத்தில் அவர் ஏழை போலாகி விட்டார்!

சாதாரணமான விஷயமா அது? அவரைப் பொறுத்தவரை அது ஒரு மகா காவியம்.

காதல் காவியத்தின் கவிதை வரிகள் எப்போதும் கண்ணீரால் தான் அலங்கரிக்கப்படுகின்றன.

ராஜ்ய பாரத்தையே இழப்பதற்கும்





தயாராகி விடும் நிலைமை, காதலில் மட்டுமே தோன்றுகிறது.

அசாத்தியமான துணிச்சல் ஒன்று காதலில் மட்டுமே விளைகிறது.

பஞ்சணையில் தனியாகத் தூங்கிய மன்னன் கூட, தன் காதலியோடு பழம் பாயில் தூங்குவதை மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்கிறான்.

சிற்றரசனாயினும், பேரரசனாயினும், முற்றும் துறந்த முனிவனே யாயினும் நெருங்கிய பந்தத்தில் எந்த நிலை மாற்றத்துக்கும் தயாராகி விடுகிறார்கள்.

அன்று இரவு சேரமானுக்கு இருக்கை கொள்ளவில்லை.

'நகரத்து மக்கள் எப்படி நினைக்கிறார்கள்? நம்பூதிரிகள் சபையில் என்ன நடக்கிறது?' என்பதைத் தெரிந்து கொள்ள அவர் விரும்பினார்.

வழக்கமான முக்காடு அவருக்குப் போதாது.

வாலிபம் மாறாத சேரமான், வயோதிக வேஷத்தைத் தேர்ந்தெடுத்தார். நரைத்த தாடி, வழுக்கைத் தலை, நீண்ட அங்கி, பல்லிலே கருப்பு மை, கையிலே ஊன்றுகோல், மற்றொரு கையிலே திருவோடு. வேஷம் பூர்த்தியாகிவிட்டது.

மூன்று குலவிளக்குகளும் அதைத் தடுக்க முயன்றனர்; முடியவில்லை.

உடனே தனியாகப் போவதைத் தடுத்து, அந்தரங்கக் காவலாளிகள் இருவர் உடன் போவதற்கு ஏற்பாடு செய்தனர்.

அவர்களும் சீடர்களாக வேஷம் அணிந்து கழுத்திலே ருத்ராக்ஷத்தோடு, கையிலே கபாலத்தோடு, நீண்ட அங்



கிக்குள் ரகசியமாக மறைக்கப்பட்ட உடை வாளோடு அவரைப் பின் தொடர்ந்தனர்.

எட்டு நாட்களுக்குப் பிறகு திருவஞ்சைக்களத்தின் தெருக்களைப் பார்க்கிறார், சேரமான்.

தெருவிலே யார் முகத்திலும் எந்த விதச் சலனமும் இல்லை. அவர்கள் மக்கள்! காலம் பார்த்துச் சேர்ந்து கொள்வார்களே தவிர காரியத்துக்கான நேரம் வரும்வரை பரபரப்படைவதில்லை.

தெருக்களில் மினுக்கிட்ட சிறு விளக்குகள் சேரமானைக் கேலி செய்வது போல் தோன்றின.

ஆண்டிக் கோலத்தில் அரசர்; இது தாற்காலிகக் கோலமோ, நிரந்தரக் கோலமோ யார் கண்டது?

தத்துவ ஞானம் பாடியபடி திருவோடு ஏந்தித் தெருவோடு நடந்தார் அவர்.

சீடர்கள் விழிப்போடு அவரைப் பின்பற்றி வந்தார்கள்.

ஒரு விளக்கின் அடியில் பத்துப் பதினைந்து பேர் உட்கார்ந்து கரியினால் குறியிட்டுப் புலியாட்டம் ஆடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் முன்னே திருவோட்டை நீட்டினார் சேரமான்.

''ஒன்றும் இல்லை. போ! போ! போய் அரண்மனையில் கேள்!'' என்றான் ஒருவன்.

''அரண்மனையில் எப்படி ஐயா கேட்பது? அரசரைப் பற்றித்தான் ஏதேதோ சொல்கிறார்களே...?'' என்றார் சேரமான்.

''என்ன சொல்கிறார்கள்?'' என்றொருவன் திருப்பிக் கேட்டான்.

''என்னவோ பூதப் பெண்ணாம், மகமதியப் பெண்ணாம்...'' என்று இழுத்தார் சேரமான்.

''அது அவர் இஷ்டம். உனக்கென்ன வந்தது? இந்த நம்பூதிரிக்குப் புத்தி இல்லை; உனக்கும் புத்தி இல்லை!'' என்றான் அவன்.

சேரமானுக்குப் புதுத் தெம்பு வந்தது.

''ரொம்ப நன்றி ஐயா!'' என்று கூறிவிட்டு ஜாடை காட்டி நடந்தார்; சீடர்கள் பின்தொடர்ந்தார்கள்.

'நாட்டு மக்கள் மனோ பாவம் புரிந்து விட்டது. இனி நம்பூதிரிகள் சபைதான் எப்படி இருக்கிறது என்று கண்டு கொள்ள வேண்டும்.'

சேரமான் ஞானப் பாட்டைத் தொடர்ந்து பாடியபடி, நம்பூதிரிகள் சபையை நோக்கி நடந்தார்.

நம்பூதிரிகள் சபை பலத்த கட்டுக் காவலோடு இருந்தது. அதைச் சுற்றிலும் நான்கு தெருக்கள் உண்டு. ஒரு தெருவிலும் யாரும் அனுமதிக்கப்படவில்லை. ஏதோ அவசர காலச் சூழ்நிலை அங்கே மட்டும் இருப்பது போல் தோன்றிற்று.

ஒரு புரவி வீரனிடம் சேரமான் கேட்டார், ''ஏன் இங்கே மட்டும் பதற்றமான நிலை?''

அவன் சொன்னான்: ''ஏ, சந்நியாசி! வாயை மூடிக் கொண்டு பேசாமல் போ!''

சேரமான் சொன்னார்: ''புரிகிறது, புரிகிறது! வாயை மூட வேண்டிய நிலைமைக்கு ஏதோ நடந்திருக்கிறது.''

''நீ மூடவில்லை என்றால், நான் மூடுவேன்'' என்றான் காவலாளி.

''எனக்கு எதற்கப்பா வம்பு?'' என்றார் சேரமான்.

அப்போது அந்தத் தெருவில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது.

முன்னால் சில புரவிகள்; அடுத்து ஒரு ரதம்; பின்னால் சில வீரர்கள்—நம்பூதிரிகள் சபை வாசலில் ரதம் நின்றது.

நாராயண நம்பூதிரி வெளியே வந்து இரு கரம் நீட்டி ஒருவரை வரவேற்றார்.

ரதத்தில் இருந்தவர் கீழே இறங்கினார். சேரமான் கூர்ந்து கவனித்தார்.

அவர் வேறு யாருமில்லை; பழைய ராஜசேகர சுவாமி! (தொடரும்)



ஹேலோ ஷாம்பூகள்-உங்கள் கேசத்தின் பராமரிப்பிற்கெனவே
உங்கள் கேசம் கட்டுக்கோப்புடன்
வளமோங்கித் திகழவே,
உபயோகிப்பீர் புரதம் நிறைந்த
ஹேலோ எக் ஷாம்பூ
விசேஷ போஷாக்கு மிக்க ஹேலோ எக் ஷாம்பூவின்
வளமிக்க முட்டைப் புரதத்தின் பயனுக, உங்கள்
தலையின் மேல் தசைகளும்,கேசமும் வலுப்-
பெறுகின்றன. கேசம் இயற்கைப் பளபளப்புடன்
வளமோங்கித் திகழ்கிறது.
New
Halo
SHAMPOO
EGG
இயற்கை ஆரோக்கியத்துடன் கூடிய கேசத்திற்கு
—ஹேலோ கேசப் பராமரிப்பு!
ஹேலோ காஸ்மெடிக் ஷாம்பூ: இந்த விசேஷ உத்தியின்-படி தயாரிக்கப்பட்ட ஷாம்பூவை உபயோகித்து, உங்கள் கேசம் எவ்வளவு மெத்தென்றும், மிருதுவாகவும் இருக்கக் கூடும் என்பதைக் கண்டு கொள்ளுங்கள்.
ஹேலோ லெமன்ஃப்ரெஷ் ஷாம்பூ: உங்கள் கேசத்திற்கு இயற்கையான, தூய்மையான பளபளப்பைத் தருகிறது.
ஹேலோ கான்ஸென்ட்ரேட் ஷாம்பூ: ஏராளமான நுரைவளத்தின் மூலம் உங்கள் கேசத்தை மென்மையாகவும் கட்டுக்கடங்கியும் வைத்திருக்க சிறிதளவே போதும்.
COSMETIC
LEMON-FRESH
CONCENTRATE
ஹேலோ ஷாம்பூக
மட்டுமே சீரான,
சிறந்த உத்தியின்
தயாரிக்கப்
படுகின்றன.

இலை வென்றது; மரம் சாய்ந்தது!

● ஜனதா கட்சி மெஜாரிட்டி பெற்றவுடன் எங்கள் கல்லூரி நண்பர்களிடையே நடைபெற்ற சில உரையாடல்கள்:

1) 60 கோடி மக்கள் கொத்தடிமையிலிருந்து மீட்கப்பட்டனர்.
2) ஆல் இந்திரா ரேடியோ, ஆல் இண்டியா ரேடியோ என்று பெயர் மாற்றப்பட்டது.
3) முதல் மாணவன்: இரட்டை இலை,எப்படி இருக்கு பார்த்தியா?
இரண்டாம் மாணவன்: மரமே புயலில் கீழே விழுந்து விட்டது. இனிமேல் இரட்டை இலையை என்னடா பார்க்கிறது?
4) பத்திரிகைகள் பல கட்சி மாறுகின்றன.
(Except Kalki, Indian Express & Tuglak)

சென்னை-34
25-3-77 சி. பாஸ்கரன்

● பூஜ்யர் ராஜாஜியின் கனவு பலித்து விட்டது! இரு கட்சி அரசியல் நனவானதை அவர் இருந்து பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே என்பது ஒன்றைத் தவிர, மற்றதெல்லாம் அவர் எதிர்பார்த்தபடி நடந்து வருகிறது. அவர் திட்டங்களைப் பிரசாரம் செய்த 'கல்கி'யும் பெருமை கொள்ளலாம்.

இந்தத் தேர்தலில் ஓர் அதிசயமும் நடந்திருக்கிறது. எல்லா இயக்கத்துக்கும் தலைமை வகித்த தமிழ்நாடு பின்தங்கி விட்டது! தமிழர்கள், அரசியல் ஞானம் உள்ள அறிஞர்களின் பாராட்டுக்குப் பாத்திரமாக எப்பொழுதும் நடந்து கொள்ளுவார்கள் என்ற ஒரு வாசகம் இந்தத் தேர்தலில் பொய்த்துப் போய் விட்டது! ஒருவர் கலைத் துறையில் பிரகாசிக்கிறார் என்று, அவருக்கு அரசியலிலே அதிகமாக மதிப்புக் கொடுக்கும் அதிசய நிலையைத் தமிழ்நாட்டில்தான் பார்க்கிறோம் என்று இங்குள்ள வடக்கத்தியர் சொல்லும் படியாக வைத்துக் கொண்டு விட்டோம்!

புதுதில்லி
22-3-77 ரா. வே. சாவித்திரி தேவி

● தாங்கள் தமிழகத்தில் ஜனதா கட்சி, தி.மு.க.வோடு உறவு கொள்ள வேண்டும் என்று சில ஜனதா கட்சிப் பிரமுகர்கள் வற்புறுத்துவதாகச் செய்தி வந்தவுடனேயே தலையங்கத்தில், ஊழல் தி.மு.க.விற்கு ஓட்டு போடுவதை விட ஆளும் காங்கிரசுக்கே ஓட்டுப் போடலாம் என்று எழுதினீர்கள். அதையே தமிழக மக்களும் செய்துள்ளனர். ஓட்டு மொத்தமான தீர்ப்பை வெறும் சினிமா மாயை என்று தள்ளிவிடக் கூடாது. ஆந்திரா, கேரளா, கர்னாடகாவில் ஜனதா வெற்றி பெறவில்லை. அதுபோல் தமிழ் நாட்டிலும் ஜனதா வெற்றி பெறவில்லை என்பதும் தவறு. அந்த மூன்று மாநிலங்களிலும் அமைப்பு ரீதியாக ஜனதாவின் எந்தக்கட்சியும் வளரப்பெற்றிருந்ததில்லை. இங்கே ஸ்தாபன காங்கிரஸ் அப்படியல்ல. அதே சமயம் அந்த மூன்று மாநிலங்களின் மாநில அரசுகளின் திறமையான ஆட்சியையும் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. பொதுவாக நெருக்கடி சட்டத்தின் பாதக விளைவுகள் இங்கே குறைவு. ஆனால் தமிழ் நாட்டில் நிலைமையே வேறு. ஊழல் தி. மு. க. ஆட்சியை இந்திரா அரசு ஒழித்தது சரியா, தவறு என்பதே பிரதானமாகப் போய் விட்டது. இதை மிகத் திறமையாக அ.இ.அ.தி.மு.க.வினர் பிரசாரம் செய்தனர். சர்வாதிகாரமா; ஜனநாயகமா என்ற பிரச்னை அடிபட்டுப் போய் விட்டது. இந்தப் பிரத்யட்ச நிலையை இனியாவது உணர்ந்து தமிழகத்தில் ஸ்தாபன ரீதியாக வளரப்பெற்றுள்ள ஜனதா தலைவர்கள் நடந்து கொள்ள வேண்டும்.

கோவை
25-3-77 சிவ. சிதம்பரம்

● தொகுதிக்குப் போகாமலேயே வெற்றி பெறுபவர்களில் கேரளத்தில் நம்பூதிரிபாடும் ஒருவர் எனத்தேர்தல் திருவிழாக் கட்டுரையில் எழுதி இருந்தது உண்மை அல்ல. நம்பூதிரிபாடின் நிரந்தர தொகுதியான பட்டாம்பியில் அவர் ஒவ்வொரு தடவையும் வெற்றி பெற்று வந்தது உண்மைதான். ஆனால் தொகுதிக்குப் பிரசாரம் செய்யவும் போவார். அதுமட்டுமல்ல. இப்போது சட்டமன்றத் தேர்தலில் பட்டாம்பியில் வெற்றி பெறுவது சந்தேகம் என்ற நிலைமை ஏற்பட்டதும் அவர் அங்கிருந்து விலகி ஆலத்தூர் தொகுதியில்தான் போட்டியிட்டார்.

திருவனந்தபுரம்
26-3-77 எஸ். எஸ். மணி

● இரண்டாம் சுதந்திரப் போராட்டத்தை ஒத்தஇந்த அமைதியான வாக்குச்சீட்டு யுத்தம் இரண்டாண்டு எதேச்சாதிகாரத்தினைத் தூக்கி எறிந்து விட்டது. பிரதமர் இந்திரா காந்தி அவர்களையே தேர்தலில் தோற்கடிக்கவேண்டுமென்றால் வட இந்திய மக்கள் இந்தப் பத்தொன்பது மாதங்களில் எவ்வளவு இன்னல்களை அநுபவித்திருப்பர் என்று தமிழ்நாட்டு மக்கள்எண்ணிப் பார்க்க வேண்டும்.

தென்னிந்திய மக்கள் இந்தப் பத்தொன்பது மாதங்களில் வட இந்திய மக்களைப் போல் கஷ்டப்படவில்லை என்றே தோன்றுகிறது. காங்கிரஸ் ஓரளவு தேர்தல் வெற்றியைத் தென் மாநிலங்களிலே பெற்றதினால், நல்லவேளை இரு கட்சியாட்சி முறை இந்திய ஜனநாயகத்தில் வேரூன்றிக் காங்கிரஸ் எதிர்க்கட்சியாக உட்காரத் தென்னாடு ஓரளவு

வட்டமேஜை




காங்கிரஸுக்கு வெற்றி கொடுத்ததற்கு நாம் கடவுளுக்கு நன்றி செலுத்த வேண்டும்! ஜனதா, காங்கிரஸ் இரு கட்சிகளுக்கும் நம் நல்வாழ்த்துக்கள்.

சென்னை-30
25-3-77 எஸ். அனந்தராமன்

● தொகுதிக்குச் செல்லாமலேயே தேர்தலில் தொடர்ந்து வெற்றி பெற்றவர்களை 'தேர்தல் திருவிழா' கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார் கட்டுரை ஆசிரியர். கடைசி வரை 'முஸ்லிம் லீகின்' ஒப்பற்ற தலைவராக இருந்த அமரர் அல்ஹாஜ் — காயிதே மில்லத் — இஸ்மாயில் சாகிப் அவர்கள் தம் தொகுதிக்குச் செல்லாமலேயே வெற்றி கண்டு வந்தவர். அதிலும் ஒரு தமிழரான இஸ்மாயில் சாகிப் மலையாளத்தில் மாஞ்சேரி தொகுதியில் நின்றவர்.

இந்தியாவிலேயே — ஒரு மாநிலத்தவர் இன்னொரு மாநிலத்தில் — தொகுதிக்குச் செல்லாமலேயே பெரும் அளவில் வாக்குப் பெற்று வென்றவர் என் நினைவுக்கு எட்டிய வரையில் காயிதே மில்லத் ஒருவர்தான்.

சென்னை-53
26-3-77 அ. சேக் அலாவுத்தீன்



● ஜனநாயகத்தைக் காப்போம் என்று சொல்லிக் கொண்டு ஸ்தாபன காங்கிரஸ் தலைவர் பா. ராமச்சந்திரன் தி.மு.க.வுடன் தேர்தல் உடன்பாடு வைத்துக் கொண்டது என் போன்ற பழைய காங்கிரஸ் தொண்டர்களுக்கு மிகவும் அதிர்ச்சி அளித்துள்ளது.

தி. மு. க. ஊழலுக்கு விசாரணை கமிஷனே தேவையில்லை. கைப்புண்ணுக்குக் கண்ணாடி எதற்கு என்பது போல் அவர்கள் ஊழல் பிரசித்தம்.

சர்வாதிகாரம் என இந்திரா காங்கிரசை எவ்வளவு குறை கூறலாமோ அதைவிட பத்து மடங்கு அதிக சர்வாதிகாரத் தன்மை வாய்ந்தது தி.மு.கவும் அதன் தலைமையும்.

குளித்தலை பி. கஸ்தூரி நாயுடு
18-3-77 பழைய காங்கிரஸ் தியாகி

● 'குட்மார்னிங் டாக்டர்' பகுதியில் தலைவலிக்கான காரணங்கள் பல கூறப்பட்டிருந்தன. இவைகளைவிட இன்னும் ஒரு முக்கியமான காரணம் 'மலச்சிக்கல்'. பலர் மலச்சிக்கல் இருப்பதை அறியாமலே தலைவலி எடுத்த உடனே கண்ட கண்ட தலைவலி மாத்திரைகளைச் சாப்பிடுகிறார்கள். இதனால் மலச்சிக்கல் அதிகமாகித் தலைவலியும் அதிகமாகிறதே ஒழிய நிவாரணம் அடைவதில்லை.

மாயூரம்
26-3-77 சகுந்தலா சின்னிகிருஷ்ணன்

● காசி — ராமேசுவரத்தை இணைத்து ஓவியர் வினுவின் கை வண்ணத்தை வெளியிட்டுள்ளீர்களே அதைப் பார்த்துப்பார்த்து மகிழ்கிறேன்.

காசிப் பகலின் கண்களில் உள்ள சாந்தத்தைப் புகழ்வதா, ராமேஸ்வரத்தில் எம்பெருமான் ஸ்ரீராமன் சிவலிங்க பூஜை செய்யும் அழகை ரசிப்பதா என்று புரியவில்லை.

திருவல்லிக்கேணி
24-3-77 வெ. முத்துக்கிருஷ்ணன்

● ''மதுரநாயகி''யில் திரு ராமையா கூறுகிறார்: ''நான் வைத்தியநாதய்யர் கிட்டே ஜூனியர். அவர் கிட்ட போற போது பாறாங்கல்லாப் போனேன்... கடைஞ்சு எடுத்த சிற்பமா வெளியே வந்தேன்.''

அவர் மட்டும் என்ன, நாம் காணும் மனிதர்கள் — பி. வி. ஆரின் பார்வை வழிபுகுந்து கைவழி வரும் போது கடைஞ்சு எடுத்த சிற்பங்களாக வெளி வருகின்றனர். ஆம், காலத்தால் அழியாத சிற்பங்களாக!


திண்டிவனம்
21-3-77 தி. ரங்கராஜன்

● நான் எழுதிய வட்ட மேஜைக் கடிதம் 20-3-77 கல்கியில் பிரசுரமாகிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அதில் நான் எழுதியதற்கு மாறுபட்ட சில கருத்துக்கள் பிரசுரமாகியுள்ளன என்பதனைப் பணிவுடன் தெரிவிக்கிறேன். பிரசவம் ஆகியும் பெட் கிடைக்காமல், என். ஜி. ஓ. சர்ட்டிபிகேட் முதலியவை தர முன்வந்தும், மருத்துக் கடைசியாக ரூ. 5 கட்டியதும் பெட் தந்தார்கள் என நான் எழுதியது ரூ. 51 கொடுத்த பின் பெட் கிடைத்தது என பிரசுரமாகியுள்ளது. அடுத்து தரகு ரூ. 10ஐ ரூ 100 என பிரசுரிக்கப்பட்டுள்ளது. புதிய கட்டிடம் புது ஆஸ்பத்திரியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை
19-3-77 கே. செல்லப்பா

● ராஜாஜி — வைஷ்ணவர்களின் கரங்களில் ஆசார சீலத்தை உறுதிப் படுத்தும் வகையில் சிறிய சங்கு சக்கரங்களை ஒற்றிக் கொண்டார். (சமாசிரயணம்) பச்சைக் குத்திக் கொள்ளும் முறை வேறு. இது வேறு. 'மாதிரி' என்று கூட சொல்ல முடியாது.

விட்டலபுரம்
29-3-77 வேங்கடாச்சாரி



மம்மி டாடி

நான் கல்லூரியில் இறுதியாண்டு படித்துக்கொண்டிருந்த போது எங்களுக்கு வகுப்பு நடத்திக் கொண்டிருந்த ஆசிரியர் இளைஞர். தமாஷாகப் பேசுவார். சமயத்தில் பெண்களை மட்டம் தட்டுவதில் அவருக்கு ஒரு குஷி.

ஒருநாள் கான்வென்டில் சென்று இங்கிலீஷ் மீடியத்தில் படிக்கும் குழந்தைகளைப் பற்றிப் பேச்சு வந்தது. ஆசிரியர் வெகு ஜோராக, ''கான்வென்டில் தாய்மார்களை 'மம்மி' என்றழைக்கும்படிசொல்லிக் கொடுக்கிறார்கள். வீட்டிலோ 'அம்மா' என்று சொல்கிறார்கள். சிறு குழந்தைகள் இரண்டினையும் போட்டுக் குழப்பிக் கொண்டு கடைசியில் பாவம் தாய்மார்களை ''அம்மி'' என்று அழைக்கும்படியாகிறது'' என்று கேலியாகக் கூறினார்.

உடனே மாணவர்கள் பக்கமிருந்து ''பாவம், பாவம்'' என்று ஜோராகக் கூக்குரலும் கைதட்டலும் மேஜைமீது தாளம் தட்டுதலும் எழுந்தன. எங்களுக்கோ ரோஷமாகப் போய் விட்டது.

அப்போது சக மாணவி ஒருத்தி எழுந்து, ''எஸ், சார். அதேமாதிரி கான்வென்டில் தந்தையினை 'டாடி' என்றழைக்கும்படி கூறுகிறார்கள். வீட்டிலோ 'அப்பா' என்று சொல்லிக் கொடுக்கிறார்கள். குழந்தைகள் இரண்டினையும் கலந்து பாவம் ''டப்பா, டப்பா'' என்று தந்தைமார்களை அழைக்கும்படியாகிறது'' என்று கூறிவிட்டு அமர்ந்தாள்.

பாவம், விரிவுரையாளர், மாணவர்கள் முகத்தில் வழிந்த அசட்டுக்களையைப் பார்க்க வேண்டுமே!

—அன்பரசி

பரபரப்பு!

பானுவும் ராஜியும் டீன்-ஏஜ் தோழிகள். இருவருமே குறும்புக்காரிகள். ஒரு நாள் காலையில் பானு ராஜி வீட்டுக்கு வந்தாள். அப்போதுதான் ராஜியின் தந்தை வாசல் தூணில் ஓர் அட்டையைக் கட்டிவிட்டுப் போனார். கிட்டத்தில் சென்று அந்த அட்டையைப் பார்த்த பானுவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. நல்லவேளை! யாரும் பார்க்கவில்லை என்று சந்தோஷப்பட்டு அந்தச் சிறிய அட்டையை எடுத்துத் தன் ஜிப் பைக்குள் போட்டுக் கொண்டு உள்ளே வந்தாள்.

''ஹாய் ராஜி!'' என்று கூப்பிட்டபடி உள்ளே வந்தாள், பானு. ''வா, பானு! உட்கார்!'' என்று சொல்லியபடியே, எதையோ மும்முரமாகத் தேடிக் கொண்டிருந்தாள் ராஜி.

''டி! என்னடி தேடிண்டிருக்கே?''

''சின்ன அட்டை ஒண்ணு இந்த மேஜையிலே வைச்சிருந்தேன். காப்பி சாப்பிட்டு வருவதற்குள் அதைக் காணோம்! எங்கே வைச்சேன்னு தெரியலே. தேடிண்டிருக்கேன்.''

''போனாப் போறது! அதுக்காக ஏன் நேரத்தை வேஸ்ட் பண்ணிண்டிருக்கே?'' என்றாள்.

இந்தச் சமயத்தில் ராஜியின் தந்தை அங்கே வந்து, ''எம்மா ராஜி, சித்தெ

பெண்ணுக்கு அடங்கியவன் ஆண். அவளுக்கு அடங்கியவன் அவன். எப்படி? SHEயில் HE. WOMANல் MAN. இப்பொழுது புரிகிறதல்லவா? - கமலா



இல்லாள்!

''மனைவிக்கு இல்லாள் என்று பெயர் வந்தது எப்படி, சொல் பார்க்கலாம்?'' என்றார் என் கணவர்.

''இது கூடவா தெரியாது? இல்லத்தை ஆள்பவள் ஆதலால் இல்லாள் என்று பெயர் வந்தது'' என்றேன்.

''அதுதான் இல்லே!'' என்று சொல்லி விட்டுச் சிரித்தார் அவர். ''கணவன் ஆபீஸிலிருந்து வந்ததும் வராததுமாக, 'வீட்டில் அரிசி இல்லே, எண்ணெய் இல்லே, அது இல்லே, இது இல்லே' என்று சதா 'இல்லாத' பல்லவியே பாடிக் கொண்டிருப்பதால்தான் அவளை 'இல்லாள்' என்கிறார்கள்!''.

— ஷம்ஸுன்னிஸா




தொட்டில் பழக்கம்

சிறு குழந்தைகள் தூங்குவதற்குத் தாய்மார்கள் தாலாட்டுப் பாடுவார்கள். சிறிது வளர்ந்த குழந்தைகளுக்குக் கதைகள் கூறுவார்கள். நான் என் அனுபவத்தில் ஒரு நல்ல முறையைக் கையாண்டிருக்கிறேன். தூக்கம் வரும் சமயத்தில் குழந்தைகள் நச்சரிக்க ஆரம்பிப்பார்கள். நான் ''ஓம் முருகா'' என்றோ அல்லது வேறு இறைவன் நாமாவையோ சொல்லிக் கொண்டே தூங்க வைத்துவிடுவேன். அதே பழக்கத்துக்கு ஆளாகி அவர்கள் இப்போதெல்லாம் தூக்கம் வந்தவுடன் தாங்களாகவே பகவன் நாமாவைக் கூறிக் கொண்டே தூங்கிவிடுகிறார்கள்.

காந்திப் பெரியவர்கள் தமது கட்டுரையில் தூங்கப் போகும் போது இறைவனின் நாமத்தைக் கூறப் பழகிக் கொண்டால் நமக்கு அமைதி உண்டாகும் என எழுதியிருப்பதைப் படித்த போது நான் எவ்வளவு மகிழ்ந்தேன், தெரியுமா?

— சேது ரத்தினம்





மகளிர் பகுதி

எஸ். லக்ஷ்மி



முன்னடிதான் வாசலில் ஓர் அட்டை கட்டி விட்டு வந்தேன். அதற்குள்ளே அதைக் காணல்லியே!'' என்றார்.

''ஆ! அந்த அட்டையை எங்கே இருந்து அப்பா எடுத்தீங்க?''

''உன் மேஜையிலிருந்துதான்!''

''ஐயையோ!'' என்று வாசல் புறம் நோக்கி ஓட ஆரம்பித்த ராஜியைத் தடுத்து நிறுத்தினள் பானு.

''சரி சரி. நான் வேறே அட்டை ஒண்ணைத் தேடி எடுத்துக்கறேன்!'' — என்று சொல்லி விட்டு அவ்விடத்தை விட்டு அகன்றார் ராஜி யின் தந்தை.

''ட நீயும் அட்டையைத் தேடறே, உங்க அப்பாவும் தேடறார்!''

''பேச நேரமில்லே. முதல்லே அந்த அட்டையைத் தேடிப் பிடிக்கணும்.'' சொன்னபடி நகர்ந்தவளை இழுத்து உட்கார வைத்து, ''அந்த அட்டை என்னிடம் பத்திரமாக இருக்கு!'' என்றாள் தோழி.

''அப்பாடி'' என்ற ராஜி, கலகலவென்று சிரித்துக் கொண்டே சொன்னாள்: ''நம்ப கல்லூரி நாடகத்துக்கு நல்ல தலைப்பு வைக்கணும்னு என் தலையிலே கட்டிட்டாங்க! என்ன தலைப்பு வைக்கலாம்னு நினைத்து நினைத்துப் பேப்பர்லே எழுதி எழுதிப் பார்த்தேன். கடைசியில் எழுதவே பேப்பர் இல்லே. இந்தச் சின்ன அட்டையை எடுத்துச் சாக்கட்டியால் 'காதலிக்கக் கற்றுத் தரப்படும்'னு எழுதி வைச்சிருந்தேன்.''

தொடர்ந்து பானு பேசத் தொடங்கினள்: ''உம், நீ எழுதி வைச்சுட்டுக் காப்பி சாப்பிடப் போயிட்டே. உன் அப்பா இங்கே வந்து அட்டையின் மறு புறத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று பாராமல் 'போர்ஷன் வாடகைக்கு விடப்படும்' என்று எழுதி நீ எழுதின தலைப்பை எல்லார் கண்ணிலும் படற மாதிரி வாசலிலும் மாட்டி விட்டார். அந்த நேரம் பார்த்து நான் வந்தேன். அட்டை இப்போ என் ஜிப் பையில் பத்திரமாக இருக்கிறது'' என்று சொன்னாள்.

நடந்துவிட்ட பரபரப்பான சம்பவத்தை நினைத்து இருவருமே கலகலவென்று சிரித்தார்கள்.



நமது பிளாஸ்க்

அன்றாட வாழ்வில் நமக்கு மிகவும் உபயோகமாக இருக்கும் பிளாஸ்க் நீடித்து உழைக்க வேண்டுமாயின், இதோ சில வழிகள்:

- பிளாஸ்கினுள் எந்தத் திரவத்தை ஊற்றினாலும், அது மேல் மூடியில் படாத அளவுக்கு ஓர் அங்குலம் இடைவெளி விட்டுக் குறைவாக ஊற்ற வேண்டும்.
- உள்ளே ஊற்றும் திரவம் கெடாமல் இருக்க, (பால் போன்றவை திரிந்து விடாமல் இருக்க) அதை நன்கு கொதிக்கும் சூட்டினிலோ அல்லது நன்கு குளிர்ந்த நிலையிலோ ஊற்றி வைக்கவும். மிதமான உஷ்ண நிலையில் ஊற்றி வைத்தால் அத்திரவம் கெட்டுப் போகும் வாய்ப்புகள் உண்டு.
- பிளாஸ்கின் மூடியை அடிக்கடி நன்கு சுத்தம் செய்து வெய்யிலில் காய வைத்துக் கொள்ளவும்.
- பிளாஸ்கின் உட்பகுதிகளைக் கழுவிச் சுத்தம் செய்ய; ப்ளீச்சிங் பவுடர், உப்புத்தூள், வெந்நீர் முதலியன உபயோகிக்கவும்.
- பிளாஸ்கினைப் பயன்படுத்தாத போது, அதைத் தனித்தனியே கழற்றி, காற்றாட வைக்கவும்.
- பிளாஸ்கினுள் ஊற்றி வைத்துள்ள ஐஸ்கிரீம் போன்றவற்றை, கையை விட்டோ, எவர்சில்வர் கரண்டியை நுழைத்தோ எடுக்கக் கூடாது. அப்படி எடுத்தால், பிளாஸ்கின் உள்பகுதியில் கீறல் விழுந்து, அதன் தரம் குறைந்து விடும்.

எனவே மரக்கரண்டி அல்லது பிளாஸ்டிக் ஸ்பூனைப் பயன்படுத்தவும். — வசந்தரா

மருத்துவக் குறிப்புகள் மூன்று!

- புண்கள்: உடம்பில் புண்கள் இருந்தால் மஞ்சள் தூளையும் சிறிது கற்பூரத்தையும் வெந்நீரில் கலந்து, அதனால் புண்களைக் கழுவித் துடைத்துவிட்டு வெறும் மஞ்சள் தூளை மட்டும் புண்களில் தூவிக் கட்டி வைத்தால் போதும்.
- சேற்றுப் புண்: கடுக்காய், மஞ்சள் இரண்டையும் அரைத்துப் பூசி வந்தால் குணமாகும். —அனுஷா
- வெடிப்பு: தினந்தோறும் படுக்கப் போகு முன் சூடான வெந்நீரில் இரண்டு ஸ்பூன் சமையல் சோடா கலந்து அதில் இருபது நிமிடம் பாதத்தை வைத்திருங்கள். பிறகு காலைத் துண்டால் நன்றாகத் துடைத்து விட்டு வாஸலீன் தடவுங்கள். ஒரு வாரத்தில் சரியாகிவிடும்.





ம. பொ. சி.

சிலம்புச் செல்வம்

பெண்களைப் பார்த்துக் கண்ணகி பேசுகின்றாள்:

''முறையில் அரசன் தன்
  ஊரிருந்து வாழும்
நிறையுடைப் பத்தினிப்
  பெண்டிர்காள்! ஈதொன்று!''

''செங்கோல் முறை பிறழ்ந்த பாண்டியனுடைய ஊரிலிருந்து வாழ்கின்ற நிறையுடைய பத்தினிப் பெண்களே! இது ஒன்று கேளுங்கள்!''

மதுரைப் பெண்களைப் பார்த்து, 'பரிபூரண பத்தினிகளே!' என்று கண்ணகி கூறுவது அவர்களை நிந்தித்ததாகும். அவர்கள் தன் அருகே வந்து தனக்கு ஆறுதல் மொழி கூறாததால், அவர்கள் மீது அவளுக்குக் கோபம்!

''நீள்நில வேந்தர்
  கொற்றஞ் சிதையாது:
பத்தினிப் பெண்டிர்
  இருந்த நாடு''

என்று மாதரியிடம் தன்னை அடைக்கலம் தந்தபோது கவுந்தியடிகள் கூறியதைக் கண்ணகி கேட்டாளல்லவா! அதனாலும், முறையற்றவனான பாண்டியன் ஆட்சியில் வாழ்வதற்காக மதுரையம்பதிப் பெண்களை நிந்திப்பவளானாள்!

ஆயர் சேரியிலே கோவலன் கொலையுண்ட செய்தி கேட்டதும், மன்னனை நிந்தித்தாள்; 'அறனெனும் மடவோய்' எனக் கூறி, அறக் கடவுளையும் நிந்தித்தாள். இப்போது மதுரைப் பதிவாழ் பத்தினியரையும் நிந்தித்துப் பேசுகின்றாள்.

பத்தினியரைப் பழித்துப் பேசிய கண்ணகி, அவர்களிடம் மன்னனுக்கு எதிராக வழக்குரைக்கிறாள்:

பட்டேன், படாத
  துயரம், படுகாலை;
உற்றேன், உறாதது:
  உறுவனே? ஈதொன்று''

கள்வனோ அல்லன்
  கணவன்; என் காற்சிலம்பு
கொள்ளும் விலைபொருட்டாற்
  கொன்றாரே! ஈதொன்று;
மாதர்த் தகைய
  மடவார்கண் முன்னரே,
காதற் கணவனைக்
  காண்பனே, ஈதொன்று;
காதற் கணவனைக் கண்டால்
  அவன் வாயில்
தீதறு நல்லுரை
  கேட்பனே; ஈதொன்று;
தீதறு நல்லுரை
  கேளா தொழிவனேல்,
நோதக்க செய்தாளென்
  றென்னை; ஈதொன்று.

'' இன்னொன்று சொல்லுகிறேன், கேளுங்கள்; கணவனைப் பிரிந்து வாழ்ந்த துன்பம் அகன்று, அவனைக் கைப்பிடித்து மதுரை புகுந்த நேரத்திலே, இதுவரை யான் அடையாத பெருந் துன்பத்தினை இங்கு அடைந்து விட்டேன். இன்னும் கேளுங்கள்:

'என் கணவன் கள்வனல்லன், அவன் விற்கப் புகுந்தது எனது காற்சிலம்பே! அதனை விலை கொடுத்து வாங்கத் திறனற்றவர்கள் என் கணவனைக் கொன்று விட்டார்கள்! இன்னுங் கேளுங்கள்:

''கணவன்மாரால் காதலிக்கப் பெறும் மதுரையம்பதி மாதர்களே! உங்கள் கண் முன்னரே என் காதற்கணவனைக் காணத்தான் போகிறேன்; இது உறுதி. என் கணவனைக் கண்டால், அவன் வாய் திறந்து என்னுடன் பேசத்தான் போகிறான்; இதுவும் உறுதி. அப்படிப் பேசும்போது தீதற்ற நல்ல வார்த்தைகளை நான் கேட்கத்தான் போகின்றேன். இதுவும் உறுதி. அப்படி தீதற்ற நல்ல வார்த்தைகளைக் கேளாமற் போவேனாகில், 'இவள் கள்வனின் மனைவியே' என என்னை இகழுங்கள்!''

கண்ணகியின் அரச நிந்தனைக்கு மதுரை மக்களும் இரையாகி விட்டனர். அவளுடைய பேச்சுக்களைக் கேட்ட மதுரை மக்கள் அவள்பால் அனுதாபம் உடையவர்களாகி, ''வளையாத செங்கோல் வளைந்தது'' என்றும் ''தென்னவன் கொற்றம் சிதைந்தது'' என்றும் கூறலாயினர்.

கண்ணகியின் தோற்றம் தெய்வமேறியவள் போல் மதுரை மக்களுக்குத் தோன்றுகிறது. அதனால், ''வம்பப் பெரும் தெய்வம் வந்தது'' என்று கூறி, தங்கள் அச்சத்தை வெளிப்படுத்தினர். கண்ணகியின் அரச நிந்தனைப் பிரசாரத்தில் மயங்கிய மதுரை மக்களின் நிலையைக் கூறுமிடத்து.

''வன்பழி தூற்றும்
  குடியதே மாமதுரை''

என்று கவிஞர் கூறுகின்றார். ஆம்; அரசனை நிந்தித்துப் பேசுவதிலே கண்ணகியுடன் மதுரை மக்களும் சேர்ந்து கொண்டு விட்டனராம்! (தொடரும்)

(மயிலை இலக்கிய வட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.



ப்ளீச் செய்யாமலே கருநிற மேனியை சிகப்பாக்கும் க்ரீம்



உலகு காணாப் புதுமை: நிறத்தைக் கரைக்காமலே (ப்ளீச் செய்யாமலே) கரு மேனியைச் சிகப்பாக்கும் சாதனம் எக்காலத்திலும் இருந்ததில்லை. சருமத்தைச் சிவப்பாக்க இதுநாள்வரை செய்த முயற்சிகள் எல்லாமே குருட்டு முயற்சிகள், முரட்டு முறைகள். ப்ளீச்சுகளின் சங்கதி உங்களுக்குத் தெரியும்: இருக்கும் நிறத்தையும் கரைத்து வெளிற வைத்து விடும். அடிக்கடி உபயோகிப்பதோ ஆபத்து; காரணம், சருமத்தையே பாதிக்கும் அவற்றின் கடுங்குணம்.

விடிவெள்ளி காட்டும் விஞ்ஞான சாதனையாம் ஃபேர் அண்ட் லவ்லி இரு வழிகளில் வேலை செய்கிறது:

1. உள்ளூர வேலை செய்யும் வைட்டமின் ஒன்று அதிலுள்ளது.

இந்தக் க்ரீமை இடும்போதே, இதிலுள்ள வைட்டமின் சருமத்திலுள் இறங்குகிறது. இழைத்துத் தடவும் போதே உணருவீர்கள் இதன் செயல்வேகத்தை: பரவும் சருமக் கருமையினை மெல்லத் திசைதிருப்புகிறது இது. வேளாவேளை ஆறு வாரங்கள் உபயோகித்துவந்தால் மேனி வண்ணம் மாறக் காண்பீர். பிறரும் காண்பார்.

2. வெளிப்புறத்திலிருந்து பாதுகாப்பதற்கு, சூரிய ஒளி படாதபடி தடுக்கும் சாதனம் அடங்கியுள்ளது.

நிறம் கருப்பதற்குக் காரணமான கதிரொளியை சருமத்தின் மீது படவிடாமல் தடுத்து விலக்கி, மேனியைக் காத்திடுகிறது ஃபேர் அண்ட் லவ்லி.

சிகப்பழகு தந்து, மேலும் பல வகைகளில் சிறப்பூட்டும் க்ரீம் ஃபேர் அண்ட் லவ்லி.

ஒப்பனைக்கு அடிப்படையாக தினமும் ஒரு முறை இடத்தக்கது ஃபேர் அண்ட் லவ்லி; இரு முறை உபயோகித்தாலோ நிறைவான பலனுண்டு. வேளாவேளை உபயோகித்துவாருங்கள், மங்காத சிகப்பு நிறத் தங்க மேனி மனம்போல் உங்களுக்கே.

சிகப்பான மேனியழகுக்கு மென்மையான வழி- ஃபேர் அண்ட் லவ்லி

தமிழ்நாட்டில் தேர்ந்தெடுத்த சில நகரங்களில் கிடைக்கும்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

லின்டாஸ்-FALOV-6-140 TM [R]

REGISTERED No. M. 4392 இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
Registered as a Newspaper in Sri Lanka மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேயா காசு

